
கல்கி
KALKI
21.6.1964
30 காசு





மகிழ்ந்து விளையாடும் நேரம்— உட்வர்ட்ஸுக்கு நன்றி

மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல்முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Alpana ATC-486-TAM

கல்கி


பொருளடக்கம்

குரோதி, ஆனி 8 ● ஜூன் 21

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மூஷிகர்: பெஜவாடா கம்யூனிஸ்டுகள் மாவோ — துங்கையும், குருஷேவையும் விட்டுவிட்டு பஸ்மாசுரனைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டார்களே!



பிளவை மறைக்கக் காகிதம்!





மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 47

என் ஆசி

ராஜாஜி

சம்பவங்களை முன்கூட்டியே எதிர்பார்த்து, ஸ்ரீ லால் பகதூர் அவர்களுக்கு முந்தியே ஆசி அளித்து விட்டவன் இப்போது வெளிப்படையாக ஆசியைத் தருகிறேன். மதிப்பிழந்துபோன காங்கிரஸ் கட்சியில் மட்டும் ஸ்ரீ லால் பகதூர் இல்லாதிருந்தால் தமது உண்மை, அடக்கம், மிருது சுபாவம், ஈடுபாடு இவை காரணமாகத் தலைசிறந்த பிரதம மந்திரியாக விளங்குவார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இன்றைய காங்கிரஸின் கெட்டுப்போன பான்மை புதுப் பிரதமரின் இயல்பான குணத்தைப் பாதிக்கிறது. என்றாலும், காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் தமது சுபாவமான போக்குக்கு ஏற்பட்டுள்ள தடைகளை மீறி, அவற்றிலிருந்து விடுபடுமளவுக்கு இந்த நல்ல மனிதர்—தீர மனிதர் உள்வலிமை பெற்றால், அவர் உருவத்தில் சிறியவராயினும் பாரதத்தின் பெருமகனாக விளங்க முடியும்; ஸ்ரீ ஜவாஹர் அவர்களுக்குத் தகுந்த வாரிசாக விளங்க முடியும்.

வசீகர நாயகனின் சகாப்தம் முடிந்து விட்டது. வசீகரண மயக்கத்தைப் பயனாக்கிக் காரியங்களை நிறைவேற்ற இனி வாய்ப்பில்லை. பகுத்தறிவு முறைப்படியே இனிமேல் தேசத்தின் பிரச்னைகளைத் தீர்த்தாக வேண்டும். இவை கடினமான பிரச்னைகள்; ஸ்ரீ நேருவுக்குத் தேசம் செலுத்திய பேரன்பினால் கடினமான பிரச்னைகள் மேலும் கடினமாகி யிருக்கின்றன.

அதிருஷ்டவசமாக, இன்று அந்நியக் கொள்கைகள் நேருஜியின் காலத்தில் இருந்ததைவிட இலகுவாகியுள்ளன. நாகரிக உலகமானது பரஸ்பர நம்பிக்கை கொள்ளும் நல்லுணர்வை நிச்சயமாகப் பெற்றுவிட்டது. இன்று யுத்தத்தில் யாருக்கும் நம்பிக்கையில்லை. போரை ஒரு முட்டாள்தனமாகக் கருதி ஒதுக்கியாகி விட்டது என்றே கருதலாம். என்றாலும், யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்ளும் தைரியம் தேசங்களுக்கு உண்டாகவில்லை. நாளைக்கே போர் மூளப் போவதுபோல் எல்லா நாடுகளும் ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்கின்றன. இதனால் பெரிய நாடுகள், சிறிய நாடுகள் இவை யாவற்றின் வளங்களும் வீணாகின்றன. இந்த வீண் நஷ்டத்தைத் தடுத்து, நாட்டு வளங்களை மக்களின் நலன்களுக்கே பயனாக்கி உலக முழுவதையும் பகையும் பயமுமற்ற ஓர் இன்பக் குடும்பமாக வாழ வைப்பதற்கு இன்னும் காலம் பிடிக்கும்.

உலக நாடுகளுக்கிடையே பகை குறைந்து, சகிப்புத்தன்மை வளருவது எல்லோருக்கும் நல்லது; இந்தியாவுக்கும் நல்லது. ஆனாலும் நம் நாடு ஒரு தனிப்பட்ட போரில் சம்பந்தப்பட்டிருக்கிறது. நாம் சீனாவை எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது. இதையொட்டி, ராணுவ பலத்தையும், தளவாடங்களையும் பெருக்கும் திட்டம் தலைதூக்கியிருக்கிறது. இதனால் நாட்டுக்கு ஏராளமான பொருட் செலவு நேர்ந்து வருகிறது. சீனாவை எதிர்த்துத் தடுப்பது நம் நாட்டார் மட்டும் சமாளிக்கக்கூடிய பிரச்னை அல்ல; கடனில் தளவாடங்கள் வாங்கிச் சுதந்திரமாக நாம் மட்டும் எதிர்க்கக்கூடிய ஆபத்தல்ல இது; காலஞ்சென்ற பிரதமர் பிடிவாதமாகக் கடைப்பிடித்த ராணுவக் கூட்டு சேராக் கொள்கை பலிக்காது—இந்த உண்மைகள் புரிய அதிக நேரம் தேவையில்லை. தனியாக நின்று சமாளிக்கப் பார்ப்பது தேசத்தைத் திவாலாக்கும் வழி. சுதந்திர வாழ்க்கையை

விரும்பும் நாடுகளெல்லாம் கூட்டுறவாகச் சேர்ந்தே கம்யூனிஸ ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முடியும் என்ற உண்மையை நாம் உணர வேண்டும். தனியாக நின்றால், நாம் எதிராளியை விட மிகப் பலவீனர்கள். விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டிய சமயம் வந்துவிட்டது. சுதந்திர நாடுகள் இதய ஒற்றுமை காணத் தேவை வந்துள்ளது. தனித்து நிற்பது சரியல்ல, விவேகமல்ல என்று நாம் உணர வேண்டும்.

உள்நாட்டு விஷயங்களிலும் தெளிவான, தீர்க்கமான சிந்தனை தேவை. தனியார் தொழில்களைத் தற்போது போலவே இனியும் வரிச்சுமையால் நசுக்கி வந்தால் நாடு ஒருகாலும் முன்னேறாது. மக்களின் உழைப்பால்தான் முன்னேற்றம் காண முடியும். தனி மனிதனின் உற்சாகத்தில்தான் உழைப்பு இருக்கிறது. உண்மையோடும், உற்சாகத்தோடும் மக்கள் உழைக்க வேண்டுமெனில் அவர்களை வரிப் பளுவிலிருந்து விடுவிக்க வேண்டும். உற்பத்தி உயர்வுதான் இன்று தேச சேவை. இந்தத் தேச சேவைக்குக் குறுக்கே வரிச் சுமை நிற்கிறது.

விலைவாசி உயர்வுக்கு என்ன காரணமென அறிந்து, அந்தக் காரணங்களைச் சீர்செய்ய வேண்டும். காரணங்களைக் காணாமல் அவற்றின் விளைவான விலை உயர்வுடன் போர் புரிவதாக மாயம் செய்வது முறையல்ல. சர்க்கார் வர்த்தகத்தை விஸ்தரிப்பதும், தொழில்களைச் சர்க்கார் உடைமையாக்குவதும், தனி முதலாளிகளை அழிப்பதும் விலைவாசிகளைக் குறைக்க உதவாது. விலைவாசிகளைக் குறைத்ததாகக் காகிதத்தில் புள்ளி விவரம் போட்டு விடலாம். ஆனால் அது உண்மையாகிவிடாது. புள்ளி விவரம் காட்டும் பண்டங்களே விற்பனைக்கு வராதபோது அவற்றுக்கு விலை காட்டுவதில் என்ன பயன்? வரிக் கொள்கை மாறாவிடில் பண்டங்களெல்லாம் தலை மறைவாகிவிடும். மறைமுக வியாபாரம் பெருகும். நோயின் காரணங்களைக் காணாமல் அதன் வெளி அடையாளமான தலைவலிக்கு மருந்து பார்ப்பது விவேகமல்ல. கள்ளச் சந்தைக்காரர்கள் இந்த அவிவேகத்தை ஆதரித்தும் பேசுவார்கள். அவர்களுக்கு அதில் லாபம் உண்டு.

நம்முடைய நிதி மந்திரி அவர்கள் திறமைசாலி; சிக்கலைப் பிரித்துச் சரி செய்யக் கூடியவர். ஆனால் அவர் நேரு அவர்களின் மறைவுக்குப் பின் தமக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பை உணர வேண்டும். பகைகளையும், பட்சபாதக் கருத்துக்களையும், கொடுமை செய்வதில் தமக்குள்ள நாட்டத்தையும் கைவிடுவதற்குச் சங்கற்பம் கொள்ள வேண்டும். தாம் புதிதாக விதித்த வரிகளைத் தாமே ரத்து செய்து எந்த நிதி மந்திரியும் செய்திராத நல்ல காரியத்தை அவர் செய்ய வேண்டும். விலைவாசிகளை உயர்த்தும் எல்லாத் திட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும். சர்க்காருக்கும், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்களுக்குமிடையே நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஏற்பட வழிகள் என்ன என்பதை நிதி மந்திரி அவர்கள் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்ல வழியில் தமது திறமைகளைச் செலுத்துவதன் மூலம் அவர் புதிய சரித்திரத்தையே உண்டாக்க முடியும்.

சமத்துவ கோஷத்தை எழுப்பிக்கொண்டு குழப்பம் உண்டாக்குவதும், அரசியல் சாஸனத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் மாற்றுவதும் இனி நிற்க வேண்டும். நிலத்தில் வேலை செய்யும் குடியானவர்களுக்கும், குத்தகைக்காரர்களுக்கும் சரியான காப்புத் தந்து நல்வாழ்வு உண்டாவதற்கான சட்டங்களைச் செய்யும்போது அவை சாஸனத்துக்கு முரணாக இராமல், நீதியின் அடிப்படையில் உருவாக வேண்டும். முதலீடு செய்து உற்பத்தி உயர்வுக்கு வழிகாட்டும் நிலச் சொந்தக்காரர்களுடன் குடியானவர்களும் குத்தகைதாரர்களும் பிளவுபடாமல் ஒற்றுமையாக இருந்து ஒப்புரவோடு விளைச்சலை அபிவிருத்தி செய்யும் வகையிலேயே நிலச் சட்டங்கள் அமைய வேண்டும்.

நேரு மறைந்த பின் இந்தியா முன் போன்றதல்ல, வேறு இந்தியாவாகி விட்டது. தெய்விக மனிதராகப் பாவிக்கப்பட்ட ஒருவரின் பிரபையில் தவறான காரியங்களையும் சரியாகக் காணும் காலம் முடிந்து விட்டது. முன்போல் இனி மக்கள் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். மக்கள் சுலபமாக நல்வாழ்வு வாழப் புது அரசாங்கம் வழிகண்டேயாகவேண்டும்.

பத்திரிகைகளுக்கும் மக்களுக்கும் சில வார்த்தைகள். பண பலத்தைக் கொண்டே தேர்தல் வெற்றிகள் நிர்ணயமாகும் இன்றைய சூழ்நிலையில், எதிர்க் கட்சிகள் தலையெடுப்பது சிரமசாத்தியமான காரியம். ஆனபடியால் ஜனநாயகம் நிலைபெற இன்று உதவக் கூடிய ஒரே சக்தி பத்திரிகைகள்தான். அவை தமக்கு ஏற்பட்டுள்ள புதுப் பொறுப்பை உணர்ந்து செயலாற்ற வேண்டும். இது ஒரு பெரிய பொறுப்பு;

புனிதமான பொறுப்பு. பத்திரிகைகள் எதிர்ப்புப் பணி புரிவதில் சில சிரமங்கள் உண்டு என்பதை அறிவேன். என்றாலும் நேரு அவர்கள் மறைந்த பின், அரசாங்கத்தைத் தாக்குவது பற்றி அவை முன்போல் அஞ்ச வேண்டியதில்லை. பத்திரிகைகள் தேச சேவைக்கு உகந்த முறையில் கண்டனம் செய்யத் தவறினால் ஆட்சியாளர்கள் மனம் போனபடி ஆட்சி நடத்தப் பூரணப் பட்டயம் பெற்று விடுவார்கள்.

மக்கள் தங்கள் தயக்கத்தையும் பயத்தையும் விட்டு உண்மையான கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும். சுதந்திரச் சரிதத்தின் மூர்த்தியாகவும் பூஜைக்குரிய தெய்வமாகவும் பாவிக்கப்பட்ட நேரு அவர்கள் மறைந்து விட்டார். ஜனநாயக சக்திகளால் கட்டுப்படுத்தக்கூடிய ஒருவர் இன்று நமக்குப் பிரதமராகியிருக்கிறார். தனி மனிதர் முக்கியத்துவம் மறைந்து, வழக்கமான ஜனநாயக மரபு உருவாகியிருக்கிறது. ஆனபடியால் இன்றைய சர்க்கார் தாக்க முடியாத ஒரு கோட்டையல்ல. பிரதமருக்குப் பிடிக்காத விஷயமாயிற்றே என்று எதைச் சொல்லவும் மக்கள் இனி நடுங்கத் தேவையில்லை. மக்களுக்குப் பிடிக்காத விஷயத்தை இன்றையப் பிரதமர் செய்ய முடியாது. நியாயமான கோரிக்கைகளையும், உண்மை உணர்வோடு செய்யும் கிளர்ச்சிகளையும் கவனித்துத் தீர்க்க வேண்டியவர் அவர்.

மக்கள் தங்கள் உரிமைகளைத் தாராளமாகத் தயக்கமின்றி கோர வேண்டும் என்பதே என் வேண்டுகோள். மந்திரி சபையும் அவற்றை மதித்து நடக்க வேண்டும் என விரும்புகிறேன்.

என்னுடைய ஆசீர்வாதத்தில் ஒரு சக்தியும் இல்லாமலிருக்கலாம். என்றாலும் அதைப் புது மந்திரி சபைக்கும், மக்களுக்கும் இதயபூர்வமாக அளிக்கிறேன்.

என்ன சேதி?

ஏழைகள் கட்சி!

சுதந்திரக் கட்சியைப் பணக்காரர் கட்சி என்று வருணிக்கும் ஏழைகளின் கட்சியாகிய காங்கிரஸைப் பற்றி வெளியாகியுள்ள அடியில்கண்ட ஒரு பத்திரிகைச் செய்திக்கு நமது விளக்கமோ, விமரிசனமோ தேவையில்லை:

லக்னௌ, ஜூன், 11—


மத்திய உள்துறை மந்திரி ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா இங்கு காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில், தற்போது காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகள் பெரும் செல்வந்தர்களாலேயே ஆட்டி வைக்கப்படுகிறது என்று கூறினார்.

காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ கோவிந்த ஸஹாயின் இல்லத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் ஸ்ரீ நந்தா முப்பது நிமிஷங்கள் மனம் விட்டுப் பேசினார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாற்பத்தைந்து பார்லிமெண்டு அங்கத்தினர்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக ஒரு தனிகர் தம்மிடம் கூறியதாக ஸ்ரீ நந்தா வெளியிட்டார். சமீபத்தில் சில ராஜ்யங்களில் நடந்த கட்சித் தேர்தல்களில் பெரும் செல்வந்தர்களின் பெருத்த நன்கொடைகள் முக்கியமான பாகம் பெற்றிருந்தன என்று தமக்குத் தெரிய வருவதாகவும் ஸ்ரீ நந்தா கூறினார்.

ஸ்ரீ கோவிந்தன் மறைவு


இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சுதந்திர இந்தியா என்று பேசுவதே பயப்பட வேண்டிய விஷயமாயிருந்தது. அந்தச் சமயத்தில் தம் பத்திரிகைக்கே சுதந்திர இந்தியா (Free India) என்று பெயர் வைத்த துணிச்சல்காரர் ஸ்ரீ ஈ. ஆர். கோவிந்தன் அவர்கள். நாட்டுப் பற்றுக் கொண்ட ஸ்ரீ கோவிந்தன் அதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே ஆங்கிலப் பத்திரிகை உலகில் பெயர் எடுத்தவர். 'ஆண்டவனிடத்திலும், மனிதனிடத்திலும் நம்பிக்கையை நிலைநாட்ட ஒரு பத்திரிகை வேண்டும்' என்ற உயரிய கருத்துடனே 'ஃப்ரீ இந்தியா'வை நிறுவினார். பல துறைகளைச் சேர்ந்த விஷயங்களைப் பற்றி எழுதினார். பொறுப்புணர்ந்து கண்ணியமாக எழுதி நல்ல பெயர் எடுத்தார். ஒரு வெள்ளி விழாக் காலம் தமது பத்திரிகையில் ஆசிரியராக இருந்து மறைந்து விட்டார். தமிழ்நாட்டின் ஆங்கிலப் பத்திரிகைத் துறையில் அவர் பெயர் நீண்ட நாள் மறையாமல் இருக்கும்.





பனாமா

இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை



பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:

கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்., பம்பாய்-56

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

துணி விலை உயருகிறது!

பம்பாய் ஆலை முதலாளிகள் புதிய சர்க்காரின் நாடியைப் பிடித்துப் பார்க்கத் துணிந்து விட்டார்கள். ஆலைத் துணிகளின் விலைகளைப் பத்து சத விகிதம் உயர்த்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். ஸ்ரீ லால் பஹாதூர் அவர்கள் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் ஏகத்தாறுக உயர்ந்திருப்பதைக் கட்டுப்படுத்துவதே தமது முதற் பணி என்று அறிவித்தார். அவருடைய திறமையைச் சோதனை செய்து பார்க்க ஆலை முதலாளிகள் இவ்வளவு அவசரப்பட்டிருக்கக் கூடாது. உணவுக்கு அடுத்தாற்போல் உடையே மனிதனுக்கு மிக அவசியமான பொருளாகும்.

அசோக மேதா

அசோக மேதா அவர்கள் ஒருவழியாகக் காங்கிரஸில் சேர்ந்துவிட்டார். அவர் காங்கிரஸில் சேர்ந்து விடுவார் என்று நீண்ட காலமாகவே எதிர்பார்க்கப்பட்டது. அவர் காங்கிரஸின் உள்நாட்டு—வெளி நாட்டுக் கொள்கைகளில் பலவற்றைக் கண்டித்து வந்தவர். அதனால் காங்கிரஸில் சேரவேண்டுமென்று அவர் ஒருபுறம் விரும்பினாலும், மற்றொருபுறம் மனச்சாட்சி உறுத்தி வந்தது. இந்த மனச்சாட்சியோடு இத்தனை நாட்கள் போராடி வந்தார். திட்டக் கமிஷன் பதவியை ஏற்று மனச்சாட்சியை ஓரளவு மௌனமாக்கினார். பிரதமர் மறைந்தவுடன் இப்போது பூரணமாக மனச்சாட்சியை அடைத்து விட்டுக் காங்கிரஸில் சேர்ந்துவிட்டார். அவரைப்பின்பற்றி இன்னும் சில பி.சோ. அங்கத்தினர்கள் காங்கிரஸில் சேர்ந்திருக்கின்றனர்.

ஒரே சார்புடைய கட்சிகள் பல பெயரில் உலவாமல் ஒன்றாக இணைவதுதான் நல்லது என்று ராஜாஜி நீண்ட நாட்களாகக் கூறிவந்திருக்கிறார். கம்யூனிஸ்டுகளும் சேர வேண்டியதுதான் பாக்கி!

ருஷ்ய மொழியில் 'அலை ஓசை'

பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'அலைஓசை' ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைக் கேட்டுத் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கிலுமுள்ள பல லட்சக் கணக்கான தமிழர்கள் பெருமகிழ்ச்சி கொள்வார்கள். பாரத நாட்டின் சுதந்திரப் போராட்ட சரித்திரத்தையும், காந்தியடிகளின் மறைவையும் பூறப்படலமாகக் கொண்டு பின்னப்பட்ட அந்த அரிய நவீனம், ருஷ்ய மக்களுக்கு சுதந்திர யாத்திரைப் போராட்ட காலத்தில் இந்திய மக்கள் கொண்டிருந்த உணர்ச்சிகளைத் தெரிவிக்கப் பேருதவி புரியும்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களே தமது தலைசிறந்த படைப்பாகக் கருதிய 'அலை ஓசை'யில் தேசப் போராட்டத்தோடு மனித மனத்தின் போராட்டங்களையும் அற்புதமாக விளக்கும் மறக்க முடியாத கதாபாத்திரங்கள் உயிர் வாழ்கின்றனர். ருஷிய மொழியில் அரை லட்சம் பிரதிகள் வெளியாவதாகத் தெரிகிறது. நாம் நினைத்து நினைத்துப் பெருமிதப்பட வேண்டிய விஷயம்.

விகட மன்னர்

மக்களையெல்லாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பது ஒரு நல்ல பணி. கண்ணியமான முறையில் அப்படிச் செய்வது மிக நல்ல பணி. இவ்வாறு கௌரவமான முறையில், ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் கவலைகளை மறந்து களிக்குமாறு செய்து தமது துறையில் மன்னராயிருந்த விகடம் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகளின் மறைவு நகைச்சுவை உலகுக்குப் பெரும் நஷ்டமாகும்.



ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் மக்களைச் சிரிக்க வைத்துத் துயரத்தை மறக்கச் செய்ததோடு, பல ஏழைகளுடைய பசிக் கொடுமையைத் தீர்த்து அன்னமிட்டும் தொண்டு செய்திருக்கிறார். முப்பத்தைந்து வருஷங்களாகத் திருவிசை நல்லூரில் ஸ்ரீதர அய்யாவாளுக்கு உற்சவம் நடத்திப் பெருமளவில் அன்னதானங்கள் செய்ய அவர் காரணமாக இருந்திருக்கிறார். நற்பணிகள் புரிந்த ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் மேலுலகில் நற்கதி பெற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை.





✿ புதுதில்லி ராஷ்டிரபதி பவனில் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் புதிய பாரதப் பிரதமர் லால்பஹதூர் சாஸ்திரிக்கு விசுவாசப் பிரமாணம் செய்துவைக்கிறார். ✿ கன்யாகுமரியில் சங்கர மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஆதிசங்கரர் பிம்பத்துக்கு அபிஷேகம் நடக்கிறது. ✿ உயர் அதிகாரியாகப் பணியாற்றினாலும் சித்திரக் கலையில் ஆர்வம் குன்றாத கலைஞர் திரு வி. கே. சுப்பிரமணியம் அவர்களின் நவீன பாணி ஓவியக் கண்காட்சியைத் திரு பி. வி. ராஜமன்னார் திறந்துவைத்தார்.





கயல் விழி

அகிலன்



போர் உக்ரமாக நடந்து கொண்டிருந்தது. விர் விர்ரெனக் காற்றில் பறந்து மழையாகப் பொழிந்தன கவண் கற்கள். விற்பொறிகளிலிருந்து வின் வின்னென்று நாண் தெறிக்கச் சென்றன கூரம்புகள்.

இரும்புக் கொப்பறைகள் பழுக்கக் காய்ச்சிய எண்ணெயைக் கவிழ்த்து விட்டன.

தீப்பந்தங்கள் யானைக் கூட்டத்தின்மீது தீமாரியாகப் பொழிந்தன.

வைகையாற்று மணற் குவியல் கூடை கூடையாகக் கொட்டப்பெற்றுப் பகைவர்களின் கண்களை அவித்தன.



சோழச் சக்கரவர்த்தி தம் வாழ் நாளிலேயே கண்டறியாத எதிர்ப்பு. திடீரென்று யானைகள் மிரண்டு அவர்களிடையே பாய்ந்து அழிக்கத் தொடங்கின. வீரர்களிடையே குழப்பமும் கூச்சலும் மிகுந்தன. வாயிற் கதவுகளைத் தகர்க்க வந்த யானைகள் தீச்சூடு பட்டுப் பிளிறிக்கொண்டு திரும்பின. மதில் மீது நின்ற பாண்டியப் படையினர் தங்களது வீர சாகசங்களால் பழிக்குப்பழி வாங்கத் தொடங்கி விட்டார்கள்.

திடீரென்று கோட்டை மதிலுக்குள் வாழ்த்தொலி எழும்பியது. சங்குகள் ஒலித்தன; முரசங்கள் முழங்கின; ஊது கொம்புகள் ஓங்காரம் செய்தன.

''வாழ்க இளவரசர்! வாழ்க சுந்தர பாண்டியர்!''

திமுதிமுவெனப் பாய்ந்து வந்த ஆயிரக் கணக்கான குதிரை வீரர்களுக்கு மத்தியில் சுந்தர பாண்டியனின் உருவம் தென்பட்டது. வெண் புரவியில் வாளும் வேலும் கேடயமுமாக அவன் சூறாவளியெனச் சீறி வந்து கொண்டிருந்தான்.

விழுப்பரையரின் விழிகள் அவனையே முதலில் உற்று நோக்கின. பிறகு சற்றுத் தொலைவில் செம்புள்ளிகள் நிறைந்த மற்றொரு வெண் புரவியில் வந்து கொண்டிருந்த மற்றோர் இளைஞனையும் ஊடுருவின. ஆபத்துதவிகள் கூட்டத்தையும் அவர் அளவெடுத்து விட்டார்.

இளவரசன் சுந்தர பாண்டியனின் பொன் முடியும் உடைகளும் கதிரொளியில் தகதகவென்று பிரகாசித்தன. முகத்தின் கீழ்ப் பாகத்தை மட்டிலுமே அவன் பூந்துகிலால் இலேசாக மறைத்திருந்தான்.

கோட்டை வாயில்கள் படீரென்று திறக்கப்பட்டன. தேக்கப்பட்ட பெரு வெள்ளம் அணைக்கால் வழியே குமுறிப் பாய்வது போலக் குபு குபுவெனப் பாய்ந்தது மதுரைப் பெரும் படை. குதிரைப் படையினரைப் பின்பற்றிக் காலாட்படைகளும் யானைப் படை

களும் கோட்டைக்கு வெளியே வந்து விட்டன.

கடலோடு கடல் பொருதுகிறதா? மேகத் திரளோடு மேகத் திரள் மோதுகிறதா? மலைகளோடு மலைகள் முட்டிச் சிதறுகின்றனவா?

சோழர்களின் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாண்டியர்கள் அது தெளிவு பெறுவதற்கு முன்பே எத்தனை தலைகளைத் தரையில் உருளச் செய்ய முடியுமோ அத்தனை தலைகளை உருளச் செய்தனர். சோழ நாட்டு மதக் கரிகளின் மத்தகம் பிளந்தனர். குதிரைகளைக் கொன்று குவித்தனர். பல்லாயிரம் மின்னல்கள் தெளிந்து பல்லாயிரம் இடிகள் ஒரு நாழிகைப் பொழுதுக்குள் விழுந்தால் எப்படி யிருக்கும்? அந்தச் செயலை அவர்கள் செய்து தீர்த்து விட்டார்கள்.

தமது யானையின்மீது நின்று கவனித்த குலோத்துங்கரின் விழிகளில் குருதி பொங்கியது. யானைத் தந்தங்கள் தீப்பொறி பறக்கவிட்டு முறிந்துபோவதையும், குதிரைகள் சோழ நாட்டு வீரர்களின் சடலங்களோடு திசை தடுமாறி ஓடுவதையும், இரத்த ஆற்றின் இரு கரைகளென விழுந்துபட்ட உடல்கள் குவியத் தொடங்குவதையும் அவரால் தாங்க முடியவில்லை.

இரண்டே இரண்டு இளைஞர்களின் சாகசங்கள் அவரது விழிகளில் கூர் வேலாய்ப் பாய்ந்தன.

சிம்மமெனக் கர்ச்சனை புரிந்து கொண்டு உரத்த குரலில் குமுறினார் சக்கரவர்த்தி. தமது கரத்தால் சுந்தர பாண்டியனைச் சுட்டிக் காட்டினார்.

வீரப் பரிசுக்காகப் போட்டியிட்ட சோழ நாட்டு வீரர்கள் பலர் இடரென்று அவனைச் சூழ்ந்துகொண்டனர். இளஞ்சிங்கம் ஒன்றை வேட்டையாடிச் சிதைக்க இரண்டாயிரம் வெம்புலிகள் பாய்ந்தது போல் அவர்கள் பாய்ந்தனர். வெள்ளைப் புரவி வீரனின்மீது ஒரே சமயத்தில் நூறு வேல்கள் பாய்ந்தன; ஆயிரம் அம்புகள் பொழிந்தன; பத்துப் பேர்கள் தங்களது வாட்களை உருவி அவன் மேல் விழுந்து அவனைப் பிளந்தனர்.

பாண்டியப் படை பதறித் தவித்தது.

அடுத்தாற்போல் செம்புள்ளிகள் நிறைந்த புரவியில் இருந்த வீரன் சீறி எழுந்தான். எழுந்து என்ன பயன்? அவனது புரவியின் கழுத்தும் துண்டிக்கப் பட்டது. மார்பெங்கும் கூரம்புகள் குத்திட்டு நின்றன. அவனைக் காக்க முனைந்த ஆபத்துதவிகள் பலரும் தரையில் சரிந்து விழுந்தனர்.

கடைசியில் அவனும் விழ்ந்தான் இரத்த வெள்ளத்தில்.

வெள்ளைப் புரவியின்மீதிருந்த இளவரசன் சுந்தரபாண்டியனை வீழ்த்திய சோழப் படையினருக்கு அவனுடைய உடல் உறுப்புக்களில் ஒன்றுமே முழுமையாகக் கிடைக்கவில்லை. பரிசில் பெறுவதற்காக அவரவர்கள் அவனைப் பருந்துகளாய்ப் பிய்க்கத் தொடங்கினார்கள்.

விழுப்பரையரின் புரவி எப்படியோ அங்கு வந்தது. அவரது விழிகள் அவரையும் மீறி நீரைச் சொரிந்தன. விழ்ந்துபட்டவனின் முகமெங்கே, விழியெங்கே, திண் தோளெங்கே, கரமெங்கே, விரலெங்கே, காலெங்கே, முடியெங்கே, அடியெங்கே? அவனை எப்படித் தேடுவது? எங்கு தேடுவது? யாரிடம் வினவுவது?

* "அரும் கடன் இறுத்த பெரும்
  செயலாளனை
யாண்டுளனோ என வினவுதி
  ஆயின்
உடம்பும் தோன்றுது உயிர்
  கெட்டன்றே....
நாநவில் புலவர் வாயுளானே!"

"அவன் செந்நாப் புலவரின் சிந்தனையிலே இருப்பான்! சிந்தனையிலே இருப்பான்! தெய்வத் தமிழில் அவன் என்று மிருப்பான்! என்றுமிருப்பான்!" என்று சிந்தை தடுமாறித் தமக்குள்ளே கூறிக் கொண்டார். புறநானூற்றில் அவர் படித்த அந்தப் பாடலே அப்போது காரணை விழுப்பரையருக்கு அருமருந்தாக இருந்தது.

இடரெனச் செம்புள்ளிக் குதிரையினின்றும் விழ்ந்த இளைஞனின் உடலைச் சுமந்துகொண்டு எங்கோ சிட்டெனப் பறந்தார் அவர். அந்த இளைஞனின் உடலில் உயிர் இருக்கிறதா இல்லையா என்று பார்க்கக் கூட அவருக்குப் பொழுதில்லை.

அதே சமயம் சோழப் பெரும் படை மதுரைக்குள் புகுந்து விட்டது தனது தீப்பந்தங்களுடன்.

சோழ நாட்டு இளவரசன் இராஜ ராஜன் தனது வீரர்கள் மதுரைமா நகருக்குள் புகுந்து அழிவு வேலைகள் செய்யத் தொடங்கியவுடன், தன்னுடைய அந்தரங்கக் காவலர்களிடம் "எங்கே இருக்கிறது அந்தச் செருக்கெடுத்த பெண்ணின் மாளிகை?" என்று கேட்டான்.

கயலைக் கொத்தி விழுங்கக் கழுகு பறந்து விட்டது.

---

*புறநானூறு – புலவர் பெருங் கடுங்கோ.



எடையினால் ஏக்கமா?

எடை குறைந்து

எடுப்பாய் விளங்க

லிமிகால்


மெல்லிடைப் பெண்மணி, அவள் நாகரீக ஓவியம். உடலோடொட்டிய உடையணிந்தவள்தான் இக் காலய நாகரிகத்தின் சின்னம். உடல் கனம் குறைவதற்குப் பத்தியமான உணவு தேவையில்லை. கடினமான தேகப் பயிற்சிகளும் வேண்டாம் — லிமிகால் அருந்தி சுலபமாக இளைக்க முடியும்.

லிமிகால் ஒரு தாவர உணவு—ருசியான, வாழைப் பழ, சாக்லேட் மற்றும் ஆரஞ்சு மணங்களில் கிடைக்கிறது. நீங்கள் லிமிகால் மட்டுமே அருந்தி துரிதமாகவோ அல்லது குறைந்த கலோரியுள்ள உணவுடன் அதை அருந்தி மெதுவாகவோ எடையைக் குறைக்கலாம்.

மேலும் லிமிகால் உங்கள் பசியைப் பூராவும் தீர்க்கும் — சாப்பாடுகளுக்கிடையே சிறு தீனிக்குத் தேவையில்லை! உங்கள் பசியைக்குறைப்பதற்கான எவ்வித மருந்தும் இதில் கிடையாது. லிமிகால் அருந்திவரும்போது உங்கள் அன்றாட அலுவல்களைக் கவனித்து வரலாம்.

லிமிகாலைப் பரீட்சார்த்தமாக அருந்தியவர்களின் எடை வாரத்திற்கு சுமார் 3 லிருந்து 5 பவுண்டுகள்வரை குறைந்திருக்கிறது.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவ்வளவுதான்—ஒரு டம்ளர் நீரில் 4 டேபிள் ஸ்பூன் லிமிகாலை நன்றாகக் கரைத்து அருந்திவிடுங்கள்! இது சீரான உணவுக்கு ஒப்பான குறைந்த கலோரியுள்ள முழு உணவாகும்.



இப்பொழுது சிக்கனமான வகையில் 1.6 கிலோகிராம் டின்னிலும் கிடைக்கிறது. (ஒரு வாரத்திற்குப் போதுமானது)

உங்கள் டாக்டரும்

லிமிகால்

அருந்தும்படி சிபார்சு செய்வார்.


''ஸ்லிம்மிங் வித் லிமிகால்'' என்றும் இலவசப் புத்தகத்தைப் பெற எழுதுங்கள்.

ஸாராபாய் கெமிகல்ஸ், தபால் பெட்டி எண் 1688 பம்பாய்—1.

சில்லரை விலை: 225 கிராம் டின் ரூ. 6.50, 1.6 கிலோகிராம் டின் ரூ. 33.50. விற்பனை வரி மற்றும் பிராந்திய வரிகள் தனி.



மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து



மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அஜீரணத்தைத் தடுக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்குப் பற்கள் தோன்றும்போது பெருமளவில் உதவுகிறது

குடலில் ஏற்படும் திருகுவலி போன்ற வயிற்று வலி சம்பந்தமான தொல்லைகளைப் போக்கி, சுகமான நிலையை உண்டாக்குகிறது.

வயிற்று விக்கல்களை, உப்புசங்களைப் போக்கி, காற்று பிரிவதற்கு உதவுகிறது.

உடல் நலத்தைப் பாதுகாத்து, குழந்தை அமைதியுடன் உறங்கவும் உறுதுணைபுரிகிறது.

மீண்டும்
புன்னகை
தோன்றக்
காணுங்கள்





ஒரு நாளைக்கு இருமுறை வீதம்
ஒவ்வொரு நாளும்
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து வந்தால், உங்கள் குழந்தை
உற்சாகத்துடனும், உடல்
நலத்துடனும் காணப்படும்.

GEOFFREY MANNERS & COMPANY LIMITED

ASP/GM 18 TM

பதினெட்டாம் அத்தியாயம்

தனயனும் தந்தையும்

பாண்டிய நாட்டின் எல்லையில் மட்டியூரில் போர் நிகழ்ந்தபோது, இரவோடு இரவாகக் குலசேகர பாண்டியரின் பாசறைக்குள் சோழ நாட்டு வீரர்கள் புகுந்து விட்டார்களல்லவா? அது சம்பந்தமான எல்லா நிகழ்ச்சிகளுமே மளமளவென்று நடந்தேறி விட்டன. பாசறைக்குள் எரிந்துகொண்டிருந்த விடிவிளக்கு திடீரென்று அணையவே, படுக்கையில் சிந்தனையோடு புரண்டுகொண்டிருந்த குலசேகர பாண்டியர் சட்டென்று திரும்பி உடைவாளை உருவ முயன்றார். பத்துப் பதினைந்து பேர்கள் அவர் மேல் பாய்ந்தனர். அவரை இறுகக் கட்டிப் பிணைத்தனர்; வெளியில் சித்தமாகக் கிடந்த சிவிகைக்குள் கிடத்தினர். பின்னர் எங்கேயோ தூக்கிச் சென்றனர்.

இரவில் போர் செய்வதில்லை என்ற நெறியைக் கூடச் சோழ நாட்டார் மறந்து விட்டார்களோ என்று மனமுடைந்து வருந்தினார் பாண்டியர். மறுநாள் போரில் எப்படியும் தாம் உயிர் துறப்பது திண்ணம் என்று அவருக்குத் தோன்றியது. பகைவரிடம் சிறைப்பட்டுச் சரணடையாமல் அதை வீர மரணமாகவே முடித்துவிடத் திட்டமிட்டிருந்தார். போரில் உயிர் நீத்தால் தம் உடலை மட்டும் பகைவர் கைபடாமல் எடுத்து வந்து எரித்து விடும்படி தமது படைத் தலைவர்களிடம் அவர் தெரிவித்திருந்தார். முடிந்தவரையில் தலைநகரத்தையும் இளவரசன் சுந்தர பாண்டியனையும் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யும்படி கூறி அதற்கான ஆலோசனைகள் சொல்லியிருந்தார்.

ஆனால் எதிர்பாராத வகையில் இரவு நேரத்தில் பல செயல்கள் கனவில் நடப்பவை போல் நடந்து விட்டன. சோழ வீரர்கள் புகுந்தபோது பாசறைக் காவலர்களுடனும் ஆபத்துதவிகளுடனும் கைகலப்பு நேர்ந்திருக்க வேண்டுமே! அத்தகையதொரு குழப்பமோ, கலவரமோ நடந்தது போன்ற சத்தம் ஏதும் அவருக்குக் கேட்கவில்லை—அவர் விழித்துக் கொண்டுதான் இருந்தார்.

சிவிகை ஒரு மலைக்காட்டுக்குள் சென்றது. சிவிகைதூக்கிகள் மிகவும் சிரமப்பட்டு ஒரு குன்றின் மேல் ஏறினார்கள். ஒளியை உமிழும் சுழுந்துக் கழிகளும் மிகுதியாக இல்லை. சிவிகை தூக்குவோரைத் தவிர இருபது முப்பது வீரர்கள் கால் நடையாகவே அதன் முன்னும் பின்னும் சென்றனர். அவர்கள் தாங்கிச் சென்ற ஆயுதங்களின் பளபளப்பை மட்டும் பாண்டியரால் காண முடிந்தது. அவர்கள் எங்கு செல்கிறார்கள்? எதற்காகச் செல்கிறார்கள்?

காடுகள் சூழ்ந்த மலையின் மீதுள்ள குகையின் அடிவாரத்துக்குச் சிவிகை வந்தது. அதைக் கீழே வைத்துவிட்டு, தூக்கி வந்தவர்களை விலகி நிற்குமாறு சைகை செய்தான் ஒருவன். பிறகு தன் உடைவாளை உருவிக் கொண்டு சிவிகைக்குள்ளிருந்த பாண்டியரை நோக்கி வந்தான். பாண்டியர் கலங்கவில்லை. மரணத்தை ஏற்பதற்குச் சித்தமாகி விட்டார். ஆனால் அந்த வீரனுடைய கூர்வாளோ அவர் மார்பில் பாய்வதற்குப் பதிலாக அவருடைய கட்டுக்களை அறுத்தெறிந்தன. அந்த வீரன் திடீரென்று அவர் பாதங்களிரண்டையும் பற்றிக் கொண்டு கீழே வீழ்ந்தான்.

சிவிகையிலிருந்து வெளியே வந்த பாண்டியர் இருளுக்குப் பழக்கப்பட்டு விட்ட கண்களால் சுற்றிலும் நோக்கினார். விண் மீன்களின் ஒளியில் அத்தனை வீரர்களும் அவருக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவிப்பது தெரிந்தது. களத்தில் வீழ்ந்துபட்ட சோழ நாட்டுப் படையினரின் இரத்தம் தோய்ந்த உடைகளை எடுத்து உடை மாற்றம் செய்துகொண்டிருந்தார்கள் அவர்கள்.

''எழுந்திரு அழகிய பெருமான்!'' என்று மெல்லத் தம் காலடியில் வீழ்ந்து கிடந்த ஏழகப் படைத் தலைவரின் தோளைப் பற்றினார் பாண்டியர். அழகியபெருமான் ஏழகப் படையின் தலைவர் மட்டுமல்ல; பாண்டியரின் மைத்துனரும் கூட.

''தலைவர் இல்லாத நாடு மீகாமன் இல்லாத மரக்கலம் போன்றது. நாளையப் போரில் நாங்கள் தங்களைப் பறிகொடுத்து விட்டால், பிறகு இந்த நாட்டுக்கு வழிகாட்டுவதற்கு யார் இருக்கிறார்கள்? ஆகவேதான் இந்தக் குற்றம் புரியத் துணிந்தேன். அரசர் என்னையும் இந்த வீரர்களையும் மன்னித்தருள வேண்டும்.'' அழகியபெருமானின் குரலில் கண்ணீர் குமுறியது.

மலைச் சரிவின் உயரத்திலிருந்த குகையை நோக்கி அரசரை அழைத்துக்கொண்டு நடந்தார் அழகியபெருமான். குகைக்கு வலதுபுறத்தில் சுனை ஒன்று இருந்தது; அதைச் சுழுந்துக் கழியின் ஒளியால் சுட்டிக் காட்டிவிட்டுக்



''சார்! ஒண்ணு சொல்றேன். நான் வயிறு நிறைய நல்ல ஆகாரம் சாப்பிட்டு விட்டால் அப்புறம் எது வேண்டுமானாலும் செய்வேன்'' என்றார் ஹோட்டலில் சாப்பிட்டவர்.

பக்கத்து இலைக்காரர் உடனே ''அப்படியா? அப்ப நான் சாப்பிட்ட 'பில்லை'யும் சேர்த்துக் கொடுத்து விடுங்கள்'' என்றார்.

குகைக்குள் நுழைந்தார். மறைந்து வாழ்வதற்கேற்றவாறு அதன் வெளி வாயிலை ஒரு பெரும் பாறை மறைத்துக் கொண்டு நின்றது.

பாண்டியரின் மனம் அதற்குள் மறைந்து வாழ்வதற்கு எளிதில் உடன் படவில்லை. ஆனால் அழகியபெருமான் மிகவும் உறுதியோடும் பிடிவாதத் தோடும் அவரிடம் மன்றாடினார்.

''சோழப் பெரும்படை இந்நாட்டை அழிக்க வந்திருக்கிறதே தவிர, ஆள வரவில்லை. அதனால் இனிமேல் நாட்டை ஆட்சி செய்யவும் முடியாது'' என்றார் அழகிய பெருமான். ''நம்முடைய ஒற்றர்கள் கொண்டு வந்திருந்த செய்தியிலிருந்து ஓர் உண்மை நன்கு புலனாகிறது. எப்படியும் தங்களையும் இளவரசரையும் கொன்றுவிட்டால் இனி நெடுங் காலத்துக்கு நாடு தலை தூக்காது என்று அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். பகைவரின் திட்டம் வெற்றி பெறாமல் இருப்பதற்காகவாவது தாங்கள் சிறிதுகாலம் இங்கு மறைந்து வாழத்தான் வேண்டும்'' என்றார் அழகியபெருமான்.

''சுந்தர பாண்டியன்...?'' என்றார் பாண்டியர்.

''இப்போதே நான் எல்லையில் எஞ்சியுள்ள படைகளை அழைத்துக்கொண்டு மதுரைக்குத் திரும்புகிறேன். வீரர்கள் இங்கேயே தங்களுக்குக் காவல் இருப்பார்கள்; செய்திகள் அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்கிறேன்.''

அரசியார் அப்போது பொதிகை மலைச்சாரலில் தென்பாண்டி நாட்டிலிருந்தார். போரின் முடிவு பற்றி முன்னமேயே பாண்டியர் ஊகித்திருந்ததால் மதுரைமா நகரத்திலிருந்த பெண்கள் அனைவரையும் வெளியேற்றி விடும்படி அவர் செய்தி அறிவித்திருந்தார். அப்படியிருந்தும்கூடப் பல பெண்கள் வெளியேறவில்லை. மறக்குலப் பெண்டிர் பலர் தங்கள் தலைவர்கள் களம் புகும்போது தாங்களும் தலைநகரத்தில் இருக்கத் துடித்தனர்.

அழகியபெருமான் விடைபெற்றுக் கொண்டு இருளில் மறைந்தார். சிறிது நேரத்தில் பொழுதும் புலர்ந்தது. குகை வாயிலுக்கு வந்து பாறையின் மீதேறி நான்கு புறமும் சுற்றிப் பார்த்தார், பாண்டியர். போர்க்களத்துக்கு அண்மையிலிருந்த திருமலை நாட்டு மலைகளுக் கிடையில் ஒரு குன்றில் தாம் இருப்பது தெரிந்தது. நேர் வடக்கிலிருந்த கொடுங்குன்றம் என்ற பறம்புமலையைக் கண்டவுடன் அவருக்கு மெய்சிலிர்த்தது.

பாரிவேள் ஆட்சி செய்த பறம்பு மலையல்லவா அது? தனது கொடைத்தன்மையென்ற பெருங் குணத்தால் இறவாப் புகழ் பெற்ற பெரும் வள்ளல் வாழ்ந்த மலையல்லவா அது? அவனுடைய புகழ் கேட்டுப் பொறாமை கொண்ட மூவேந்தரும் இந்த மலையைத்தானே வளைத்துக்கொண்டு நெடுநாட்கள் முற்றுகை போட்டிருந்தனர்? பிறகு அந்தப் பெருவள்ளலை மாய்த்தொழித்தனர்.—அன்று பகையாய் வந்து, கூற்றாய் முடிந்த மூவேந்தரில் ஒருவரான பாண்டியரின் பரம்பரையில் வந்த தமக்கும் இன்று புகலிடமளித்துக் காக்கத் துணிந்து விட்டானா அந்தப் பெருவள்ளல்?

வள்ளல் பாரியின் அருங்குணத்தையும் திருங்கவைக் கவிச் சித்திரத்தால் தீட்டியிருக்கிறாரல்லவா கபிலர் என்ற பெரும் புலவர்? அந்தப் புறநானூற்றுப் பாடல்களை உருக்கத்தோடு பாடினார் பாண்டியர். பாரியின்பால் ஏற்பட்ட கழிவிரக்கத்தால் அவரது நாத் தழுதழுத்தது. பாரியும் அவனது பறம்பு மலையும் வீழ்ந்தபிறகு, திக்கற்ற அவனது புதல்விகளை அழைத்துக்கொண்டு புலவர் கபிலர் புறப்பட்டபோது அவர் உள்ளம் எப்படியெல்லாம் துடித்திருக்கும்? அந்தத் துடிப்பையெல்லாம்தான் கபிலர் கவிதையாக்கி விட்டாரே!

''உழவர் உழுது பயிர் செய்யாமலே நான்கு வகைப் பயன் கொழிக்கும் மலை

இந்த மலை. ஒன்று, எந்தக் காலத்திலும் இங்கு உணவுக்கு மூங்கிலரிசி கிடைக்கும்; இரண்டு, தீஞ்சுவைப் பலாக் கனிகள் வேர்களில் பழுத்துக் கிடக்கும்; மூன்று, வள்ளிக் கிழங்குகள் தாமாகவே தரைக்குள் வேரோடிப் புதையுண்டு கொழுக்கும்; நான்கு, திரும்பிய பக்கமெல்லாம் பாறைகளில் தேனடைகள் நிறைந்து தேன் சொரியும். — மூவேந்தர்களே! நீங்கள் ஒன்றுகூடி முற்றுகையிட்டுப் பாரி நாட்டைப் பட்டினியால் பணியச் செய்துவிடலாமெனக் கனவு காணுகிறீர்கள். யாழ் எடுத்துப் பாடி வாருங்கள்; பாணராய்ப் பறை கொட்டி வந்து பரிசிலாய்க் கேளுங்கள். அப்படியே நாட்டையும் தன்னையும் நண்பனாகிய என்னையுமே உங்களுக்குக் கொடுத்து விடுவான் பாரி!'' என்று கபிலர் செருக்கோடு பாடிய மண் அல்லவா அது!

அழகிய பெருமான் தமக்கு ஏன் இந்த இடத்தைப் புகலிடமாகத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பது அப்போதுதான் அவருக்கு விளங்கியது. புலவர் காரனை விழுப்பரையரின் ஆலோசனை அழகிய பெருமானுக்குக் கிடைத்திருக்கும் என்பதில் அவர் ஐயம் கொள்ளவில்லை; சுனைகள் நீர் கொடுத்தன. மரங்கள் காற்றைக் கொடுத்தன; மலையோ தேனும், தினையும், பலாவும், கிழங்கும் கொடுத்தது.

இரண்டு தினங்கள் சென்று காரனை விழுப்பரையர் அங்கு வந்து சேர்ந்தார். களப்பலி கொடுக்கப்பட்ட அவரது புதல்வனின் உடலிலிருந்து ஒரு துளி தசையைக் கூட அவரால் காணமுடியவில்லை. அஞ்சாத நெஞ்சம் கொண்டவர் தாம் அவர். அவர் நெஞ்சில் சலனமில்லை என்றாலும், ஏனோ அவர் தசை துடித்தது. இரத்தத்தின் இரத்தத்தை, தசையின் தசையை அவர் சுக்குநூறாய்ச் சிதைக்கச் செய்து பார்த்துக் கொண்டிருந்தவர். தமது குமாரனின் உடலையாவது பார்க்க வேண்டுமென்று அவர் மனைவியார் திருவுடைத் தேவி மன்றாடினால்? புது மணப்பெண் உய்யவந்தாள் தன் கணவனைப் பற்றிய செய்தியை அவரிடம் கேட்டால்?

முன்னேற்பாட்டுடன்தான் அவர் எல்லாவற்றையும் செய்திருந்தார். அவருடைய குடும்பம் அப்போது மதுரையில் இல்லை. ஆனால் குடும்பத்தாரை என்றைக்குக் கண்டாலும் அவர்கள் முதலில் அதைத்தானே கேட்பார்கள்? 'எங்கே உங்கள் குமாரன்? அவன் நலமாக இருக்கிறானா?' என்று கேட்டால்?

போட்டிக்குப் போட்டி

எல்லையில் சீனர் நடவடிக்கை ஓயவில்லை.
— மந்திரி சாவன்

ஆனால் இங்கு உள்நாட்டில் பாதுகாப்பு நடவடிக்கை ஓய்ந்துபோனமாதிரி காண்கிறதே!

ஃ ஃ ஃ

கோதுமை விலை குறைகிறது; ஆனால் அரிசி விலை உயர்வு. — டி.டி.கே. தகவல்

ஸ்ரீமான் டி. டி. கே. கனவு உலகத்துத் தகவலைத் தரவில்லை என்று கருதுகிறோம்!

ஃ ஃ ஃ

தெய்வ நம்பிக்கை வைத்துக்கொண்டு சோஷலிஸத்தை உருவாக்க முடியும் என்று குருஷேவ் கூறினார். — செய்தி

நிரீசுவர வாதத்தினால் சோஷலிஸத்தை உருவாக்க முடியாததன் விளைவோ!

ஃ ஃ ஃ

அரசியல் சட்டத்தை அடிக்கடி திருத்துவது நாம் அசடுகளாகத் தோன்றும்படி செய்யும் என்று ஆசார்ய கிருபளானி கூறினார்.
— பார்லிமெண்டில்

''தோற்றம் அல்ல; உண்மையே தான்'' என்கிறான் அம்பிப்பயல்!

விழுப்பரையர் அந்தச் சொந்த நினைவுகளை விரட்டியடிக்க முயன்றவர் போல் குகையின் வாயிலை நோக்கி விரைந்தார். பாண்டியரைக் கண்டு கை கூப்பினார்.

குலசேகர பாண்டியர் ஒரு கணம் அவர் விழிகளையே உற்று நோக்கினார். விழுப்பரையரின் முகமே யாவற்றையும் விளக்கி விட்டது. என்றாலும் தமது உள்ளத் தவிப்பைக் கட்டுப்படுத்த முடியாத பாண்டியர், ''தலைநகரத்தின் நிலை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

''வீழ்ந்து விட்டது!''

''சுந்தரபாண்டியன்?''

பாண்டியர் இப்படிக் கேட்டவுடன் விழுப்பரையரால் தாங்கவே முடியவில்லை. அவருக்குத் தம்முடைய குமாரனின் நினைவும் சேர்ந்து கொண்டது. அவர் தேம்பித் தேம்பி அழுதார். பாண்டிய நாடு, அதன் தலைநகர், அதன் இளவரசன், தமது குமாரன் எல்லாவற்றையும், எல்லோரையும் நினைத்து அவர் கதறினார். (தொடரும்)

புதியது

ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க். அது குடும்பத்தினர் அனைவருக்கும் மிகச்சிறந்தது.



ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்-மிக மிகப்பெரிய டப்பா-மிகமிகக் குறைந்த விலை.



ப்ரோடெக்ஸ்

ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்

PTP-6-7-TAM.

படம் பிடிக்கும் போதினிலே



மௌனப் படத்திலிருந்து பேசும் படம் பிறந்தது. ஆனால் நம் இந்தியப் படங்களைப் பொறுத்த வரையில் 'பாடும் படம்' என்று தான் சொல்ல வேண்டும். 'பாடாத படமும் ஓடாத கடிகாரமும்' ஒன்று' என்பது புது மொழி. திரைக் கதையை விடப் பாட்டு முக்கியம். முன்பெல்லாம் பாடாத நடிகர் சினிமாவை நாடாமல் இருப்பது நலம் என்று இருந்தது. இப்பொழுது பாடாத நடிகருக்குக் குரல் கொடுக்கப் பின்னணிப் பாடகர்கள் இருக்கிறார்கள்.

படங்களுக்குப் பாடல்கள் தேவையா என்பது நெடுநாளையக் கேள்வி. படம் தத்ரூபமாக அமைய வேண்டுமானால் பாடல்களே இருக்கக் கூடாது என்பது பலருடைய வாதம். ஆனால் போட்ட பணத்தை எடுக்க வேண்டுமானால் அவசியம் பாடல்கள் இருந்தாக வேண்டும். ஒரு தடவை தமிழ்ப் படங்களைப் பார்க்கவே யோசனை செய்யும் பிரமுகர்கள் 'பாடல்கள் தேவையில்லை' என்று கூறி விடுகிறார்கள். காசு கொடுத்துப் படம் பார்ப்பவர்கள் பாட்டு வேண்டும் என்கிறார்கள். நல்ல வசூல் வேண்டும் என்றால் படத்தில் பாட்டு வேண்டும்.

நமது பின்னணிப் பாடகர்களுள் சீர்காழி கோவிந்தராஜனுக்குத் தனி மதிப்பு உண்டு. அவர் வெறும் சினிமாப் பாட்டுக்களை மட்டும் பாடாமல், கர்நாடக சங்கீத மெட்டுக்களில் அமைக்கப்பட்ட பாடல்களையே அதிகமான ஆர்வத்துடன் பாடுவார்.

தமிழிசைக் கல்லூரியின் ''இசைமணி'' என்ற இசைப் பரீட்சையிலும் மத்திய கர்நாடக சங்கீதக் கல்லூரியின் ''சங்கீத வித்வான்'' பரீட்சையிலும் தேறியவர் திரு கோவிந்தராஜன். ராஜாஜியின் தமிழிசைத் தம்புராப் பரிசு வேறு பெற்றிருக்கிறார்.

''கச்சேரி செய்யும் அளவுக்குச் சங்கீத ஞானத்தை வைத்துக் கொண்டு நீங்கள் ஏன் சினிமாவில் பின்னணிபாட ஆரம்பித்தீர்கள்?'' என்று கேட்டேன்.

''என் சங்கீத குரு திருப்பாம்பரம் சாமிநாதப் பிள்ளை அவர்களுக்கு நான் சினிமாவில் பின்னணிப் பாடகனாக வருவதில் சிறிதும் விருப்பமில்லை. ஆனால் என் சிறிய தந்தை திரு பி. எஸ். செட்டியார் (''சினிமா உலகம்'' ஆசிரியர்) அவர்கள் என்னைச் சினிமாவில் பாடும்படி அழைக்கிறார்கள். நான் இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவித்தேன். எங்கள் குடும்ப நண்பரான அப்துல் காதர் என்பவரின் உதவியால் ''பொன் வயல்'' என்னும் படத்தில் முதன் முதலில் ஒரு நடன அபிநயப் பாட்டுக்குக் குரல் கொடுத்தேன். ''சிரிப்புத்தான் வருகுதய்யா'' என்னும் பாட்டு. யோகி சுத்தானந்த பாரதியாரின் சாகித்தியம். கர்நாடக சங்கீத மெட்டில் நல்ல பாட்டு என்ற காரணத்தால் என் குரு இதைச் சினிமாவில் பின்னணியிலிருந்து பாட அனுமதித்தார். பிறகு பல படங்களில் பல பாடல்கள் பாடிவிட்டேன். ஆவலோடு வந்து படத்துக்குப் பின்னணிப் பாடகனாக இருந்துதானாக வேண்டும் என்று என்னிடமுள்ள அபிமானம் காரணமாக வற்புறுத்தும் நண்பர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்க முடியாதல்லவா? ஆகையினால் தான் பின்னணிப் பாட்டும் பாடுகிறேன். ஆனால் கச்சேரியில்தான் என் ஆர்வமெல்லாம் இருக்கிறது.''


''உங்கள் துறையில் மறக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட முடியுமா?''

''சினிமாப் பின்னணிப் பாட்டு என்பது கடமையாக ஏற்றுக் கொண்ட காரியம். விசேஷ நிகழ்ச்சியாகக் குறிப்பிட அதில் ஏதும் இல்லை. ஆனால் கச்சேரியில் நிறைய உண்டு. 1958ம் ஆண்டு இலங்கை சென்று கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் இன்னிசைக் கச்சேரிகள் நிறைய நிகழ்த்தினேன். பிறகு 1962ல் மலேயா நாட்டில் மூன்று மாதங்கள் ஊரூராய்ச் சுற்றுப்பிரயாணம் செய்து கச்சேரிகள் செய்தேன். மேற்படி நாடுகளில் தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழிசைக்கும் இருக்கும் மதிப்பையும் மரியாதையையும் நினைத்தால் இப்போதுகூட என் உடல் சிலிர்க்கிறது. தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் எனக்கு அளிக்கப்பட்ட உற்சாகமான வரவேற்பை நான் என்றும் மறக்கமாட்டேன்'' என்றார் மெய்சிலிர்க்க.

சமீபத்தில் பம்பாயில் நடந்த பாரதிய கலா மன்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சீர்காழி கோவிந்தராஜன் அற்புதமான இன்னிசை விருந்தளித்தார். அப்பொழுது அதைக் கேட்டு வடநாட்டுப் பிரபல பிலிம் டைரக்டரான நௌஷாத் சீர்காழி கோவிந்தராஜனை அகமகிழ்ந்து பாராட்டினார்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்று கூறினால் அது பின்னணிப் பாடகர்களுக்குத்தான் பொருந்தும். நடிகர்களுக்குத் தங்கள் குரலைக் கொடுத்துப் புகழையும் தேடித் தருகிறார்களே!

— விஜயம்


ரிசல்ட் வந்தது!
"என் ரிசல்ட் பேப்பர்லே எறும்பு சாரி வந்தமாதிரி இருக்கு, என் நம்பர் கண்ணுக்குத் தெரியல்லே! கண்ணாடி போட்டுவிட்டயா!"
"கண்ணாடி போட்டுப் பாத்தாலென்ன! நம்பர் இருந்தாத்தானே தெரியப் போறது!"
சாமா!
என் ரிசல்ட் என்ன ஆச்சுன்னு கேட்க வந்து விட்டாரே! நான் ஒளிந்து கொண்டு விடுகிறேன்!
சௌக்கியமா! உங்க பையன் எங்கே?
ஒரு பார்ட்டுல போயிடுத்து. அதுக்காக வெட்கப்பட்டுண்டு தலை மறைவா இருக்கான்!
என் பையன் க்ளாஸ்லாரும்தான் எல்லா பார்ட்டிலேயும் பெயில்!
சீ..சீ! அப்படியா!
வாங்க மாமா! எப்ப வந்தேள்! 'காப்பி சாப்பிடறேளா?
நான் பாஸ்! என் நம்பர் அதோ இருக்கு!
புது நாகரிகம்!
காலேஜ் பார்டர், ரிசல்ட் உடல்
'வேண்டிண்ட பசங்களுடைய பிரார்த்தனை வீணாப் போயிடுத்து! ஆனால் இந்த 'டியுடோரியல் காலேஜ்'காரர் பிரார்த்தனை பலிச்சுப் போச்சு! எப்படியோ தேங்காய்கள் வியாபாரமாகுச் சரிதான்!'



எட்டி, மெட்டி, ஷங்பா, காங் மி, மிகோ — இவ்வளவு பெயர்களும் ஒன்றையே குறிக்கின்றன. ஆனால் இது வரை யாருக்குமே அதைப் பற்றி ஒன்றுமே தெரியாது!

இமயமலையின் பனி மூடிய பரந்த வெளிகளில் மனிதர்களின் சஞ்சாரமில்லாத நீண்ட, நெடும் மலைப் பிரதேசங்களில் ஒரு விசித்திரமான ராட்சச ஜீவன் நடந்து செல்கிறது. இதன் தோற்றம் மனிதர்களைப் போலிருக்கிறது. ஆனால் உண்மையில் இது என்ன என்பது விஞ்ஞானிகளுக்கு இன்னும் புரியாததொரு மர்மமாகவே இருக்கிறது. சிலர் கூறுவதைப் போல இது வெறும் கரடியோ, குரங்கோதானோ. அல்லது இந்த ஜீவன் வெறும் அப்பட்டமானதொரு கட்டுக் கதையா?

இமயமலையின் மிக உயர்ந்த பள்ளத்தாக்குகளில் வாழும் மக்கள் இந்த விசித்திரமான ஜீவனைப் பல பெயர்களிட்டு அழைக்கிறார்கள் — எட்டி, மெட்டி, ஷங்பா, மிகோ அல்லது காங் மி. இவைகளில் எட்டிதான் பிரபலமானது. இங்கு வாழும் மக்கள் இந்த எட்டியைப் பற்றிப் பல நூறு வருஷங்களாகவே அறிவார்கள். ஆனால் மேற்கத்திய நாடுகளுக்கு 1887க்கு முன்பாக இந்த ஜந்துவைப் பற்றி எதுவும் தெரியாது. கர்னல் டபிள்யூ. ஏ. வாடல் என்ற பிரிட்டிஷ் மலை ஏறும் நிபுணர் ஒரு சமயம் இமாலயப் பனி மண்டலத்தில் தள்ளாடியபடி முன்னேறிக் கொண்டிருந்தார். கடல் மட்டத்துக்கு 16000 அடிகள் மேலாக அப்போது அவர் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். திடீரென்று அவரது கவனத்தைப் பனியில் புதைந்து தெளிவாகத் தெரிந்த காலடிகளின் அடையாளம் கவர்ந்தது. பார்வைக்கு அது மனிதர்களுடைய காலடிகளைப் போலிருந்தது. ஆனால் மிகப் பெரியதாக இருந்தது. அதை அவர் பார்த்து வியந்து கொண்டிருக்கும்போதே அவருடன் சாமான்களைத் தூக்கி வந்துகொண்டிருந்த ஷெர்பா என்னும் கூலிகளில் ஒருவன், "ஐயோ! எட்டி" என்று பீதியடைந்து மூட்டைகளைக் கீழே போட்டு விட்டு ஓட்டமெடுத்தான். வாடல் காரணம் புரியாமல் திகைத்த போது உடல் நடுங்கியபடி மற்றக் கூலிகள் "எட்டியைக் கண்டவர் உயிருடன் இருக்க மாட்டார்கள் என்பது எங்கள் நம்பிக்கை. அதுதான் அவன் ஓடுகிறான்" என்று கூறினார்கள்.


பனியில் ஏற்பட்டுள்ள அந்தப் பாத அடையாளங்கள் மனிதனுடையவையா அல்லது ஏதாவது மிருகத்தினுடையதா என்பதை ஆராய்வதில் ஈடுபடலானார் வாடல். ஹிமாலயத்தின் உச்சியில் வாழும் கிராமவாசிகள் அந்தப் பனிப் பாதங்களைப் பற்றிப் பலவிதமான கதைகளைக் கூறலானார்கள். அந்தப் பூதாகாரமான காலடிகளுக்குரியவனே பனிமனிதன் என்றார்கள். அவனது தலை உச்சி கூர்மையாக உயர்ந்திருக்கும் என்றார்கள். நீண்ட கைகளை உடையவன் பனி மனிதன்; ஆடு மாடு எதையும் உண்ணக் கூடியவன் என்றெல்லாம் விநோதமான கதைகளைக் கூறினார்கள். இவைகளில் ஜூட்டி என்பது பதினொரு வயதுக் குழந்தையைப் போலிருக்கும், மிட்டி என்பது சாதாரண மனிதனின் உயரமிருக்கும்; எட்டிதான் மிகப் பெரிய பூதாகாரமான உருவத்தோடு கூடிய பனி மனிதன் என்றெல்லாம் இமாலயப் பனி மண்டலவாசிகள் கூறினார்கள்.

அந்த உயரத்தில் அந்தப் பயங்கரமான பனிப் பிரதேசத்தில் தன்னந் தனியாக ஒரு மனிதன் வாழுகிறான் என்பதையோ அதுவும் அவன் வெறும் காலுடன் நடந்து செல்லக் கூடியவன் என்பதையோ அவரால் நிரூபிக்கவும் முடியவில்லை.

இதற்குப் பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு மற்றொரு ஆராய்ச்சியாளரும் இந்த மர்ம மனிதனின் காலடிகளைக் கண்டார். அது மட்டுமல்ல. இவர் இந்தக் காலடிகளுக்கு உரிய உருவத்தைக் காணவும் செய்தார். உடலெங்கும் மயிர் அடர்ந்து அநாயுபாகுவான இரண்டு கால்களோடு கூடிய இந்த ஜீவன் தூரத்தில் நடந்து செல்வதைக் கண்டார். ஒரு விநாடிதான். அடுத்த நிமிஷம் இது பனித்திடலில் ஓடி ஒரு பெரிய பனி மேட்டின் பின்னால் சென்று மறைந்தே விட்டது.

காலம் செல்லச் செல்ல மலை ஏறுபவர்களில் பலரும் ஆராய்ச்சியாளர்களும் எட்டியைக் கண்டார்கள். சில வேளைகளில் மனிதர்களைக் கண்டதும் இது காடுகளில் புகுந்து மாயமாக மறைந்தது. பனி மண்டலத்தில் நடந்து செல்லும் அது அடிக்கடி குனிந்து பனியில் புதையுண்டிருக்கும் வேர்களையும் கிழங்கு, பச்சிலை ஆகியவற்றையும் பிடுங்கித் தின்றுகொண்டே செல்வதைச் சில வேளைகளில் இவர்கள் கண்டார்கள். இதையே பனி மனிதன் என்று அழைக்கலானார்கள்.

1948ம் ஆண்டு. ப்ரான்ஸ்டில், தார்பெர்க் என்ற இரண்டு நார்வேக்காரர்கள் புதிய நிலப் பகுதி



களைக் கண்டுபிடிக்கும் நோக்குடன் இமயமலைப் பகுதிக்கு வந்தார்கள். இவர்களும் எட்டியின் காலடிகளைப் பனிப் பாதைகளில் கண்டார்கள். திடீரென்று இவர்கள், பூதாகாரமான உடலெங்கும் ரோமமடர்ந்த இரண்டு கால் ஜீவன்கள் இரண்டின் முன்னே தாங்கள் நிற்பதை உணர்ந்தார்கள். ஒரு விநாடி அவர்களுக்கு ஒன்றுமே ஓடவில்லை. சட்டென்று அவர்கள் தங்களிடமிருந்த சுருக்கிட்ட கயிற்றைச் சுற்றி வீசி அந்த விசித்திர ஜந்துவில் ஒன்றைக் கட்டிப் போட முயற்சி செய்தார்கள். ஆனால் அந்த மிருகம் மூர்க்காவேசத்துடன் ப்ராண்டினைத் தாக்கி அவரது தோள் பட்டையில் படுகாயப்படுத்தியது. உடனே தார்போர்க் தமது துப்பாக்கியை வெடித்துச் சத்தமுண்டாக்கி அந்த எட்டிகளைப் பயமுறுத்தி விரட்டித் தமது நண்பரைக் காப்பாற்றினார்.

இதற்குப் பிறகு சில வருஷங்கள் கழித்து எரிக் ஷிப்டன் என்ற பிரிட்டிஷ் மலை ஏறும் நிபுணர் எட்டி என்ற இந்தப் பனி மனிதனின் காலடிகளைப் புகைப்படமெடுத்தார். இந்த ஜந்துக்கள் பனியில் பதித்துச் சென்ற காலடி அடையாளங்களைப் பல மைல்கள் வரை பின் தொடர்ந்து சென்றார் இவர். இவைகள் அருகருகே நடந்து சென்றிருந்தன. சாதாரண மனிதர்களின் தப்படிகளை விட அதிக இடைவெளிகளோடிருந்தன இவைகளின் காலடிகள். ஒரு பெரும் பனிப் பிளவு வரை இவைகளின் காலடிகள் வந்திருந்தன. இங்கு இவைகள் இந்தப் பிளவை ஒரே தாவலில் தாண்டியிருந்தன. கரடியைப் போல நான்கு கால்களையும் பதித்து இவை மறு பக்கத்துக் கரையை அடைந்திருக்கவில்லை. மனிதர்களைப் போல் ஒரே ஒரு காலை மட்டுமே பதித்து மறு கரையை அடைந்திருக்கின்றன.

சில விஞ்ஞானிகள் இன்னமும் கூட பனி மனிதன், ஹிமாலயச் சிவப்புக் கரடியாகவோ அல்லது லாங்கூர் குரங்காகவோ தானிருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால் சிவப்புக் கரடிகளால் பின்னங்கால்களால் சில தப்படிகளே நடக்க முடியும். அவைகளின் காலடிகளில் நீண்ட கூரிய நகங்களின் குறிகள் பதிந்திருக்கும். லாங்கூர் எனப்படும் குரங்குகளும் கூட நான்கு கால்களால்தான் நடக்கக் கூடியவை. இவைகளின் உடலோ கனமற்றது. பனிமனிதனின் காலடிகளோ பனியில் புதைந்து அடையாளமிட்டுள்ள அளவிலிருந்து அவை பூதாகாரமான உடலையும், கனமான சரீரத்தையும் உடையதாக இருக்க வேண்டும். தவிர இந்த இனக் குரங்குகளின் கால்கள் சிறியவை. பனி மனிதனின் காலடிகளோ பெரியவை. ஆகவே எந்த விதத்தில் பார்த்தாலும் பனி மனிதனின் காலடிகள் கரடியினுடையதோ, குரங்கினுடையதோ அல்ல என்பது நிர்மானமாகிறது.





1954ல் டெய்லி மெயில் என்ற பத்திரிகை நிர்வாகிகள் பனி மனிதனாகிய எட்டியைக் கண்டுபிடித்து வருமாறு ஒரு கோஷ்டியை அனுப்பினர். இவர்கள் ராட்சஸக் காலடிகளை ஏராளமாகப் படமெடுத்தார்கள். இந்தக் காலடிகளில் சில பதின்மூன்றங்குல நீளமுடையதாக இருந்தன. அந்தக் கோஷ்டியினர் மற்றுமொரு முக்கியமான விஷயத்தையும் கண்டுபிடித்தார்கள். எட்டி எனப்படும் இந்தப் பனி மனிதன் இமயமலையின் உயர்ந்த பகுதிகளில் மட்டுமில்லாமல் தாழ்ந்த அடிவாரங்களிலும் கூட வசிக்கலாம் என்பதுதான் அது. ஆனால் இந்தக் கோஷ்டியினர் ஒரு பனிமனிதனைக்கூடக் காணவில்லை.

இதற்கு மூன்று வருஷங்களுக்குப் பிறகு அமெரிக்கக் கோஷ்டி ஒன்று பனி மனிதனைத்

தேடி இமய மலைக்கு வந்தது. இவர்கள் புதிதாக விழுந்த பனியின் மீது அப்போது தான் நடந்து சென்ற பனி மனிதனின் காலடிகளைப் பின்பற்றிச் சென்றார்கள். இந்த விசித்திரப் பிறவி ஒரு பயங்கரமான பனிச் சரிவில் நிமிர்ந்த நிலையில் மனிதர்களைப்போல நிதானமாக நடந்து இறங்குவதைக் கண்டார்கள். ஒரு தடவை இது கீழே விழுந்தது. சரிவில் சிறிது தூரம் சரிந்து உருண்டு சென்றது. பிறகு தனது இரண்டு கால்களை ஊன்றி எழுந்து நின்றதையும் கண்டார்கள். மற்றோரிடத்தில் இது விழுந்து கிடந்த மரத்தின் மீது தாவி ஏறுவதைப் பார்த்தார்கள். ஒரு கையால் அந்த மரத்தைப் பற்றித் தன் நிலையைச் சமாளித்துக் கொண்டபடி ஏறியது. பழக்க வழக்கங்களில் மனிதனைப் போலுள்ள இந்த ஜீவன் இமாலயக் கானகங்களில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகிறது. ஆனால் மனிதனும் இதைப் பற்றி இன்னும் அறுதியிட்டு உறுதியாக எதையும் சொல்ல முடியவில்லை என்றால், இந்த ஜீவராசியின் விசித்திர மர்மத்தை என்னவென்று கூறுவது!

இந்த அமெரிக்கர்கள் ஒரு கிராமத்துக்குச் சென்றபோது இந்த ஏட்டிகளைப் பற்றி இன்னும் சில தகவல்கள் கிடைத்தன. 'யாக்' எனப்படும் இமாலய எருமைகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு பையனும் அவன் சகோதரியும் ஏட்டி என்று கூறப்படும் இந்தப் பனி மனிதனைப் பார்த்ததாகக் கூறினார்கள். புல் வெளியை அடுத்த அடர்ந்த காட்டிலிருந்து வெளிப்பட்ட அது பயந்து நடுங்கிக் கொண்டிருந்த இந்தக் குழந்தைகளின் அருகே வந்தது. ஆனால் குழந்தைகளை எதுவும் செய்யவில்லை. அமைதியாகத் திரும்பி மறுபடியும் கானகத்துக்குள் சென்று மறைந்தது. அதைப் பற்றி விவரிக்கும்படி அந்தப் பையனைக் கேட்டபோது அது ஏழு அல்லது எட்டு அடி உயரமிருந்த தென்றும் தோற்றத்தில் ஒரு கொரில்லாவைப் போலிருந்ததாகவும் அந்தக் குழந்தைகள் கூறினார்கள்.

இரண்டாவது அமெரிக்க ஆராய்ச்சிக் கோஷ்டி புதிய திட்டங்களை வகுத்துக் கொண்டு வந்தது. பனி மனிதனை வேட்டையாட வந்த இவர்கள் முதலில் ஏட்டியின் கால் அடையாளங்களைக் கண்டுபிடித்தார்கள். பிறகு ஏட்டிகளைக் கண்காணிக்க ஏற்ற வகையில் அந்தப் பிரதேசத்தின் அருகே மறைந்து கொண்டார்கள். அதன் வழியாக ஏட்டிகள் வருவதை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் இவர்கள். ஏட்டிகளைத் துன்புறுத்தாத வகையிலான கண்ணிகளை அமைத்திருந்தார்கள், அவற்றை உயிரோடு பிடிக்க. தேவையானால் அவற்றை நோக்கிச் சுடவும் தயாராகப் பிரத்தியேகமான துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள். அதில் உள்ள தோட்டாக்கள் உயிரை மாய்க்காது. ஆனால் உணர்வில்லாமல் செய்யக் கூடிய ஒரு வகை மருந்தை இந்தத் தோட்டாக்களில் நிரப்பி யிருந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பனி மனிதனை நினைவிழக்கச் செய்யக் கூடியவை இந்தத் தோட்டாக்களில் உள்ள மருந்து.

அமெரிக்கர்களின் திட்டப்படி எல்லாம் தயாராக இருந்தன. இரண்டு நாள் இரவு பகல் ஏட்டியின் வரவுக்காகக் காத்திருந்தார்கள். தனது பிராந்தியத்தில் வாழ வந்திருக்கும் இவர்களைப் பற்றி அறிய ஆவல் கொண்ட ஏட்டிகள் ஒரு நாள் இரவு அமெரிக்கர்களின் கூடாரத்துக்கு விஜயம் செய்தன. சமையல் பாத்திரங்களை உருட்டிச் சோதனையிட்டபோது ஏற்பட்ட சத்தத்தினால் பயங்கொண்ட அவைகள் வேகமாக வெளியேறிவிட்டன. ஓசை கேட்டு 'காம்பி'லுள்ளவர்கள் தங்கள் தூங்கும் பைகளுக்குள்ளிருந்து வெளிப்படுவதற்குள் ஏட்டிகள் அவர்களை ஏமாற்றிவிட்டுச் சென்று விட்டன. அவர்களில் ஒருவர் பரபரப்புடன் தமது டார்ச் விளக்கை அழுத்தினார். ஆனால் அவர்கள் எதற்காகக் காத்துக் கிடந்தார்களோ அந்த ஏட்டிகளைக் காணவில்லை. பனியில் புதிதாகப் பதிந்த இரண்டு ஜோடி காலடிகளை மட்டுமே அவர்களால் காண முடிந்தது. அது பத்து அங்குல நீளமிருந்தது. ஆழப் பதிந்து சுத்தமாகத் தெரிந்த இந்தக் காலடிகளைத் தொடர்ந்து சென்றபோது அவைகள் பனி முடிவடைந்துள்ள ஒரு செங்குத்தான மலைச் சரிவிலே போய் மறைந்து விட்டதைக் கண்டு ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

இதனிடையே ஜெரால்டு ரஸ்ஸல் என்ற ஆராய்ச்சியாளர் இமாலயக் கானகத்துப் பொய்கை ஒன்றின் கரையிலே, ஏட்டிகளின் பலப் பல காலடி அடையாளங்களைக் கண்டார். ஆகவே பனி மனிதன் அடிக்கடி அந்தப் பொய்கைக்கு வருகிறான் என்பது உறுதியாயிற்று. ரஸ்ஸல் அந்தப் பொய்கையின் அருகிலே ஒரு மறைவிடத்தை அமைத்துக்கொண்டு ஏட்டியின் பேட்டிக்காகப் பத்து நாள் வரை காத்திருந்தார். அடர்ந்த மரக் கிளைகளின் பின்னால் மிகுந்த நம்பிக்கையோடு பனி மனிதன் நீருந்தப் பொய்கைக்கு வருவான் என்று கழுத்து வலிக்கக் காத்திருந்தார் ரஸ்ஸல்.

கடைசியாக ஒரு நாள் இரவு. கிராமத்தான் ஒருவன் ரஸ்ஸலின் மறைவிடத்திலிருந்து 300 கெஜ தூரத்தில் ஒரு பாறையின் மீது நீரில் நனைந்த காலடிகளைத்தான் கண்டதாக வந்து கூறினான். உடனே ரஸ்ஸல் ஆவலோடு தமது டார்ச் விளக்குடன் அங்கு ஓடினார். விளக்கு வகுத்துக்கொடுத்த ஒளி வழியிலே தூரத்தில் ஓர் ஓடையின் அக்கரையிலே ஒரு பாறை மீது எதிர்பார்த்த பனி மனிதன் ஒருவன் குந்திட்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டார். திடீரென்று பனி மனிதனைக் கண்ட பீதியில் அவர் எழுப்பிய கூச்சலினால் அந்த ஜீவன் மெதுவாக எழுந்து அவசரமின்றி நடந்து அடர்ந்த கானகத்தினுள் புகுந்து மறைந்து விட்டது.

இதற்கு மறுநாள் இரவு ரஸ்ஸலின் கூட இருந்த வழி காட்டி அந்தக் கிராமத்தானின் துணையோடு பனி மனிதனைத் தேடிச் சென்றான். தனது எஜமானன் படும் சிரமத்தை அவனும் தாங்க முடியவில்லை.

ஆகவே பனி மனிதனைக் கண்டு அவனை ரஸ்ஸலின் மறைவிடத்தின் பக்கமாக விரட்டி விடவேண்டும் என்பது அவன் திட்டம். பைத்தியக்காரன், பனி மனிதன் பயமறியாத ஒரு பிறவி என்பது அவனுக்குத் தெரியாது. ஒரு மணி நேரம் அலைந்து திரிந்து காத்திருந்த பிறகு இவர்களின் டார்ச் ஒளியில் பனி மனிதன் தட்டுப்படலானான். இவர்களைக் கண்டதும் ஓடுவதற்குப் பதில் அந்த ஜீவன் இவர்களை நோக்கிக் கோபாவேசத்துடன் பாய்ந்து வரலாயிற்று. மனிதர்களைக் கொல்லும் எட்டியினால் தாக்கப்படாமலிருக்க அவ்விருவரும் அலறிப் புடைத்துக்கொண்டு ஓட்டமெடுத்தார்கள்.

இதற்குப் பிறகு ரஸ்ஸல் கோஷ்டியினர் ஒரு வாரம் முழுவதும் இரவு நேரங்களில் முறை போட்டுக் கொண்டு கண் விழித்தபடி பனி மனிதனைத் தரிசிக்கப் பொய்கையின் அருகே அமைக்கப்பட்ட புதிய மறைவிடத்திலிருந்தபடி காத்துக் கிடந்தார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கை நாசமாயிற்று. எட்டி மாரிக் காலத்துக்கு முன்பாக அந்தப் பிராந்தியத்துக்கு வரவேயில்லை. ஆகவே பனி மனித வேட்டை பரிதாபமாக முடிவுற்றது.

அடுத்தடுத்துப் பனி மனிதனைப் பிடிக்கும் முயற்சிகள் தோல்வி அடைந்தாலும் இந்த மர்ம மனிதனைப் பற்றிய பல விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

ஒரு பிரிட்டிஷ் ஆராய்ச்சிக் குழுவினர், பல நூறு வருஷங்களாக லாமாக்களால் பௌத்த மடமொன்றில் பாதுகாக்கப்பட்டு வரும் எட்டியின் தலையில் உள்ள மயிர் மூடப்பட்ட தோலைப் புகைப்படமெடுத்து வந்தார்கள். இந்த 'ஸ்கால்ப்' இருபத்தியாறு அங்குல வட்ட வடிவமுடையது. சிவப்பு நிறமான முரட்டுக் கட்டை ரோமத்தால் மூடப்பட்டிருந்தது. இந்தப் பிரிட்டிஷார்கள் 'எட்டியி'னுடைய கையின் புகைப்படத்தையும் கொண்டு வந்தார்கள். இந்தக் கை காலத்தினால் சுருங்கி விறைத்துப் போயிருந்தாலும் அதிலுள்ள விரல்களின் நீளம், எலும்புகளின் சேர்க்கை முதலியவை மனிதக் கையிலிருந்து மாறுபட்டிருந்தன. இருந்தாலும் கட்டைவிரலின் அமைப்பு மட்டும் மனிதனுடையதைப் போலிருந்தது.

ஆகவே இத்தனைக்கும் பிறகு, விஞ்ஞானிகள் 'பனி மனிதன் ஆதி மனிதனோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையவன்; உயிர் வாழ்வனவற்றில் கிட்டத்தட்ட கொரில்லாவின் தோற்றத்தைக் கொண்டவன் இந்தப் பனி மனிதன்' என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆராய்ச்சியாளர்கள் இந்த விசித்திர விநோத ஜீவனை அதன் மலைக் குகையிலிருந்து நாகரிக உலகத்துக்குக் கொண்டு வந்தாலும் வரலாம். அப்போது தான் பனி மனிதனின் மர்மம் முழுதுமாக நீக்கப்படும். மனிதனுக்கும் மனிதக் குரங்குகளுக்குமிடையே விடுபட்டுப் போன தொடர்புகளை இணைக்கும் பாலமாக இந்தப் பனி மனிதன் மாறுவானோ?

ஆதாரம்: **ரீடர்ஸ் டைஜஸ்ட்**
ஜூனியர் டிரஷரி

—குட்டிக் கதை—

அறிவுடை அரசன்

ஒரு காலத்தில் வெகு தூரத்திலுள்ள விரானி என்ற நகரில் ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் பெரிய பலவான்; நல்ல அறிவாளியுங்கூட.

நகரின் நடுவில் ஒரு கிணறு இருந்தது. கிணற்று நீர் தெளிவாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது. அந்த நீரைத்தான் ஊரிலுள்ளவர்கள் அத்தனை பேரும் — அரசனும் அவன் பரிவாரமும் உட்பட — குடித்து வந்தனர். வேறு கிணறு கிடையாது.

ஒரு நாள் இரவு எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தபோது கொடிய மந்திரவாதி ஊருக்குள் நுழைந்தான். கிணற்றடிக்குப் போய், ''இந்த நிமிஷத்திலிருந்து யார் இந்த நீரைக் குடிக்கிறார்களோ அவர்கள் பைத்தியமாகப் போவார்கள்!'' என்று சொல்லிக் கொண்டே கிணற்றுக்குள் ஏதோ ஒரு மருந்தின் ஏழு துளிகளை ஊற்றினான்.

மறுநாள் காலை அரசனையும், அவனுடைய பிரதம செயலாளரையும் தவிர ஊரிலுள்ளோர் அத்தனை பேரும் அந்தக் கிணற்று நீரைக் குடித்து மந்திரவாதி சொன்னாற்போல் அத்தனை பேரும் பைத்தியமாகிப் போனார்கள்.

அன்றெல்லாம் ஊர் மக்கள் ஒருவரையொருவர் சந்தித்தபோதெல்லாம் ரகசியமாகப் பின்வருமாறு பேசிக்கொண்டார்கள்:

''நம் அரசர் பைத்தியமாகிப் போய்விட்டார். அரசரும் அவர் செயலாளரும் தங்கள் பகுத்தறியும் தன்மையை இழந்துவிட்டார்கள். நிச்சயமாக இப்படிப்பட்ட பைத்தியம் நமக்கு அரசனாக இருப்பதாவது! இவரைச் சிம்மாசனத்தை விட்டு இறக்க வேண்டும்.''

அன்று மாலை அரசன் தமது குடிநீர் பாத்திரத்தில் கிணற்றுநீரை நிரப்பச் சொன்னார். கிணற்று நீர் நிரப்பியவுடன் நிறையச் சாப்பிட்டார். பின்னர் தமது செயலாளரையும் குடிக்கச் செய்தார்.

உடனே அந்த விரானி நகரில் ஜனங்கள் ஒரே அடியாகக் குதூகலமடைந்து ஆரவாரித்தார்கள். ஏனென்றால் தங்கள் அரசரும் பிரதமரும் இழந்திருந்த புத்திசுவாதீனத்தை மீண்டும் பெற்று விட்டார்களாம்!

— **கலீல் ஜிப்ரான்**

சென்னை நகரசபை மைதானத்தில் எம். ஸி. ஸி. கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியினருக்கும் டெஸ்ட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் அருகில் அமர்ந்துகொண்டிருந்தவர் ஒருவர் ஆட்டத்தைப் பற்றிப் பிரமாதமாக வர்ணித்துக் கொண்டிருந்தார்.

''ஸார்! இவங்க 'பொட்டு' 'பொட்டுன்'னு தட்டிப் 'போர்' அடிக்கிறாங்க! அப்போ அந்தக் காலத்திலே வேணுவின் ஆட்டத்தைப் பார்க்க வேணும்!'' என்றார் அந்த விமரிசகர் உற்சாகமாக.

''வேணு யாரு ஸார்! இப்போ அவர் ஆடறதாகத் தெரியவில்லையே? எங்கே இருக்கிறாரு!'' என்று கேள்வி கேட்டோம்.

''ஸார்! சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் நம் நாட்டின் பெருமையைக் காப்பாத்தினவரு அவருதான்!''

''அப்படியா? நாங்கள் அவரைக் கேள்விப்பட்டதில்லையே?'' என்று ஒருவர் வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்.

''என்ன அப்படிச் சொல்லிவிட்டீங்க? வேணு அன்று ஒரு ஸிக்ஸர் அடிச்சது அப்படியே என் கண் முன்னாலே நிற்குது!'' என்றார் அந்த விமரிசகர் பெருமையாக.

''ஆமாம்! அந்த வேணு இப்போது எங்கே இருக்கிறார்? ஆடுகிறாரா?''

''ஓ! இதோ உங்கள் முன்னாலே பேசிக்கொண்டிருக்கிறாரே, சாக்ஷாத் இவரேதான் அந்த வேணு!'' என்று தற்பெருமையாகத் தம் மார்பில் தட்டிக் கொண்டார் அந்த விமரிசகர்.

இப்படிச் சுயபுராணத்தில் அந்த ரிடையர்ட் ஆட்டக்காரர் மூழ்கியிருக்கும்போது வேறு ஒரு மூலையில் அமர்ந்து ஒரே ஏகாக்ர சித்தத்துடன் அமர்ந்து ஆட்டத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் ஓர் இளைஞர். இந்த அரட்டையெல்லாம் அவரை அசைக்கவில்லை. அவர் யார் என்று கேட்டபோது அவர்தான் சென்னை கிரிக்கெட் ஆட்டக்காரர் எஸ். வி. எஸ். மணி என்று தெரிய வந்தது.

''இந்தச் சென்னை டெஸ்டுக்கு முன்பு பெங்களூரில் நடந்த ரஞ்சித் கோப்பைப் போட்டியில் சதம் போட்டார் இந்த இளைஞர் எஸ். வி. எஸ். மணி. டெஸ்டில் இன்ஜினியர் கையில் அடிபட்டதால் இந்தச் சென்னை டெஸ்டில் ஆட முடியவில்லையல்லவா? ஆகவே மணி ரிஸர்வ் ஆட்டக்காரராகச் சென்னை டெஸ்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!'' என்று அருகிலிருந்தவர் அவரைப் பற்றிக் கட்டியம் கூறினார். ஆனால் மணியோ சுயபுராணம் பாடாமல் அடக்கமே உருவாக ஆட்டத்தில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்!

தமிழ் நாட்டுக்குப் பெருமை தேடித் தரும் ஆட்டக்காரர்களில் ஒருவரான எஸ். வி. எஸ். மணி சினிமா நடிகர் கொத்தமங்கலம் சீனுவின் புதல்வர். இளைஞர் மணி மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் படித்தவர். பள்ளிப் பருவத்திலேயே இவரது கிரிக்கெட் ஆட்டத் திறமையைக் கண்டு கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கான சீனிவாசராகவன் நினைவு உபகாரச் சம்பளம் பெற்று எஸ். எஸ். எல். ஸி. தேறினார். இவர் பி. யு. ஸி. படிக்கும்போது படிப்பைப் பாதியில் நிறுத்தும்படியாகி விட்டது. பெரிய குடும்பம்; இவர் குடும்பத்தின் மூத்த பிள்ளை. கொத்தமங்கலம் சீனு அவர்களைச் சினிமாத் துறையும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆகவே இளம் வயதிலேயே இவர் உத்தியோகம் தேடும் படியாயிற்று. அப்பொழுது இவரது கிரிக்கெட் ஆட்டம்தான் கைகொடுத்தது. இவரது ஆட்டத் திறமைக்காகவே மெட்ராஸ் மோட்டார்ஸ் ஸ்தாபனத்தில் திரு விசுவநாதன் சேர்த்துக் கொண்டு இவருக்கு ஊக்கமளித்து வந்தார். 1962ம் வருஷம் ஜூலை மாதத்திலிருந்து இவர் ஸ்டேட் பாங்கில் பணியாற்றி வருகிறார். இருபத்திநான்கு வயதான இளைஞர் மணிக்கு இன்னும் மணமாகவில்லை. கல்யாணமாகாவிட்டால் என்ன? குடும்பப் பொறுப்பு இளம் வயதிலேயே இவருக்குக் கிடைத்திருக்கிறது!

இளைஞர் மணியின் கிரிக்கெட் சரித்திரம் இவர் முன்னணிக்கு வரக் கூடியவர் என்பதை நிரூபிக்கின்றது. 1961–62ம் வருஷம் நடைபெற்ற ரஞ்சித் போட்டியில் ஆட்டம் இழக்காமல் 36, 30 ரன்களைக் குவித்திருக்கிறார். பெங்களூரில் எம். ஸி. ஸி. டெக்ஸ்டர் கோஷ்டிக்கெதிராக ஆடி இவர் இருபத்தி ஏழு ரன்கள் எடுத்தது இன்னும் நினைவில் இருக்கிறது. இந்த வருஷம் ஒரு ரஞ்சித் கோப்பைப் பந்தயத்தில் இவர் சதத்துக்கு



மேல் எடுத்து நல்ல பாட்ஸ்மேன் என்பதை உறுதியாக்கியிருக்கிறார். வருஷா வருஷம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கோபாலன் கோப்பைக்காகப் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த வருஷப் போட்டியில் மணி 101 ரன்கள் எடுத்து 'அவுட்'டாகாமல் இருந்தது அபார சாதனையாகும். இவரது ஆட்டத்தை இலங்கைப் பத்திரிகைகள் வியந்து பாராட்டியிருக்கின்றன. இலங்கை 'ஸண்டே டைம்ஸ்' பத்திரிகை, ''திரு எஸ். வி. எஸ். மணியின் அற்புதமான, 'அவுட்'டாகாமல் எடுத்த சதம் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சி'' என்று போற்றியது.

''உங்கள் தந்தையின் பெயரில் கொத்தமங்கலம் என்றிருப்பதிலிருந்தே பூர்வீகம் கொத்தமங்கலம் என்று தெரிந்துவிட்டது!''

''ஸார்! எங்கள் பூர்வீகம் மதுரை மாவட்டத்தில் உள்ள சோழவந்தான். எங்கள் தந்தை கொத்தமங்கலத்தில் இருக்கும்போதுதான் அவருக்குச் சினிமாத் துறையில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. சினிமாக்காரர்கள் என் தந்தைக்குப் பூர்வீகம் கொத்தமங்கலம் என்று நினைத்துப் பெயரோடு அதைச் சேர்த்துவிட்டார்கள். அதுவே நிலைத்து விட்டது!'' என்றார் மணி.


''கிரிக்கெட் தவிர வேறு ஏதாவது கலையில் உங்களுக்குப் பரிச்சயமுண்டா?''

''ஓ! எனக்கு நன்றாகப் பாடத் தெரியும். பலதடவை கிரிக்கெட் ஆட்ட முடிவில் பாடி ஆட்டக்காரர்களையெல்லாம் மகிழ்வித்திருக்கிறேன்!''

''உங்கள் கிரிக்கெட் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது இருக்கிறதா?''


''சென்னையில் பாரி அண்டு கம்பெனிக்கும் ஸ்டேட் பாங்குக்கும் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்டேட் பாங்க் கோஷ்டியில் நான் ஆடினேன். அன்று கூடியிருந்த கூட்டம் முழுதும் எதிர்க் கோஷ்டியினரை ஆரவாரித்து உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. எங்கள் கோஷ்டியில் சடசடவென்று விக்கெட்டுகள் சரிந்தன. இந்தத் தருணத்தில் நான் ஆடப் போய் ஐம்பது ரன்கள் எடுத்ததும் ஒரு ரசிகர் ஓடிவந்து எனக்கு மாலை அணிவித்தார்!''


''அயல் நாடுகளில் புதுப் புது ஆட்டக்காரர்கள் தோன்றி நாட்டுக்குப் பெருமை தேடித் தருகிறார்கள். நம் நாட்டில் அப்படி இல்லையே!'' என்று கிரிக்கெட் ஆட்ட நிர்வாகிகள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்! நம் நாட்டிலும் பல அரிய பொக்கிஷங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பல டெஸ்டுகளில் நம் நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த பந்து வீச்சு நிபுணர் துரானிக்கே வேலைக்குத் தாளம் போடும் நிலை என்றால் இளம் ஆட்டக்காரர்கள் எப்படித் துணிந்து கிரிக்கெட்டே கதியாக மூழ்கியிருக்க முடியும்? திரு எஸ். வி. எஸ். மணி ஸ்டேட் பாங்கில் வேலையில் இருக்கிறாரோ, அவரும் பிழைக்கிறார், அவர் ஆட்டமும் பிழைத்திருக்கிறது! —குன்றுமணி





மழை
வருவதற்குமுன்
வாங்குங்கள்
கவர்ச்சியான...சிக்கனமான...
C.S.C.
QUALITY SHOES
எங்கும் கிடைக்கும்
Carona Sahu Co. Ltd.
221. தாதாபாய் நௌரோஜி ரோடு,
ஃபோர்ட் பம்பாய்-1


மோகனைக் குதிரைவீரர்கள் தூக்கிச் சென்ற திகைப்பு நீங்கிய பிறகு . . . . .
மோகனை அவர்கள் ஏன் அப்படிப் பலவந்தமாகக் கட்டிக் கொண்டு போகவேண்டும் என்று தான் புரியவில்லை.
கடைசியில் பயந்தபடியே நடந்து விட்டது. அவனைக் கண்டு பிடித்து விட்டார்கள். இனி மோகனை எங்கு காண்போம்?
2
ஆளப்பிறந்தவன்
கதை: ராஜி
சித்திரம்: வினு
ஹா.. ஹா.. மோகன் இருக்கும் இடத்தை உங்களால் கண்டு பிடிக்கவே முடியாது. அவன் இனி வரவும் மாட்டான். வீண் பகற் கனவு ஏன்?
தோழர்களே! மோகனை நாம் எப்படியாவது கண்டு பிடித்துக் கொண்டு வரவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?
இப்போதே கிளம்புவோம். எங்கிருந்தாலும் தேடி..
மோகனின் நண்பர்கள் குப்பனின் பேச்சினால் மனம் தளரவில்லை. தங்கள் உயிர்த் தோழனைத் தேடிக் கிளம்பி விடுகின்றனர்.



விட்டது. அதோ!
ஒரு வேளை மோகன் சிறை வைக்கப் பட்டிருப்பானோ?
கட்டுக் காவல் பலமாக இருக்கிறது. மோகன் இந்தக் கோட்டையில் இருப்பானகில் நம் வருகையை எப்படி அவனுக்குத் தெரிவிப்பது? ஆ! அதுதான் சரி.
இந்த ஒலி மோகனுக்கு நம் வருகையை அறிவித்து விடும். அதோ... அந்த உப்பரிகையின் ஜன்னலில்.. அது யார்?...
நண்பர்களின் முயற்சி பலன் தந்து விட்டது. தன் தோழர்களைக் கண்ட மோகன் உற்சாகமுடன் கையாட்டுகிறான்.
மோகனைப் பிடித்துப் போன காவல்காரர்கள் கை தவறி விட்டுப் போன இந்த வேல் அம்புகள் நமக்கு உதவுகின்றன.



அம்புடன் வந்த கயிற்றின் ஒரு முனையை மோகன் ஜன்னல் கம்பியில் கட்ட, மறு முனையைச் சோமு மரத்தில் கட்டுகிறான்.
அதோ, அதோ! மோகன் தப்பிச் சென்று கொண்டிருக்கிறான். பிடியுங்கள் பிடியுங்கள்.
ஆனால் தப்பிவிட்ட நம் மோகனையும் அவன் நண்பர்களையும் யாரால்தான் கண்டு பிடிக்க முடியும்? காற்றினும் கடிதாகக் கிராமத்தை அடைகின்றனர்.
இளவரசர் ஜயசிம்மர் வாழ்க.. வாழ்க...
ஜயசிம்மரா? சோமு! நாம் வழி தவறி வந்து விட்டோம், திரும்பி ஓடு...
இளவரசே! பயந்து ஓட வேண்டாம். இந்நாட்டை ஆளும் உரிமையுடையவர் நீங்கள். நீங்கள் இருப்பது தெரிந்தால் உங்களைக் கொலைச் சதி செய்வார்கள் துரோகிகள் என்றே இந்தக் கிராமத்தில் நீங்கள் வளர்ந்து வரும்படி செய்திருந்தோம். விரோதிகளுக்கு நீங்கள் இங்கிருப்பது எப்படியோ தெரிந்து விட்டது. ஆனால் இனிக் கவலையில்லை.
நான் அரசனா?..? இந்நாட்டின் அரசனா நான்? நம்பவே முடியவில்லையே!
நண்பா, நீ அரசனாகி விட்டதற்கு மகிழ்கிறோம். ஆனால் உன் நட்பை இழக்கப்போகிறோமே என்று...
மோகன் இந்நாட்டின் அரசனா? அந்தப் பயலுக்கு வந்த அதிர்ஷ்டம் தான் என்ன? இந்த யோகம் எனக்கு வரக்கூடாதா?
தொடரும்

நீகோ
ஜெர்மிஸைடல் சோப்
ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு

உங்கள் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ளவும், பருக்கள், கருநிறப் படைகள், வேர்க்குரு மற்றும் இதர சாதாரண சரும நோய்களின்றி இருக்கவும் உதவுகிறது. தவறாமல் நீகோவினைச் சுத்தம் செய்ய உபயோகித்து வரின், நெக்கோவின் கிருமிநாசக நுரை அழுக்கை ஏற்படாமலிருக்க ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கும். நிரூபணமான மதிப்பையுடைய கிருமிநாசக சோப்பான நீகோ உங்களுக்கு மும்மடங்கு நன்மையளிக்கிறது— சுத்தமாக்க, நோய்கிருமி பரவாமல் தடுக்க, பாதுகாக்க, உதவுகிறது. இன்றும் உங்கள் சருமத்திற்குத் தேவையான கவனத்தை செலுத்துங்கள்.



தினசரி உபயோகத்திற்கான ஆறி கிருமிநாசக சோப்

NATIONAL PD 9443



என்றும் அருகிருக்க...

கே.ஏ.என்.

அட்டைப்படக் கதை

கமலிக்கு வயது பதினெட்டு முடிவடைந்து விட்டது.

சுந்தரேசனின் மகிழ்ச்சிக்கு அளவில்லாது போய்விட்டது என்று சொன்னால் அது தப்பு. அவனுடைய மகிழ்ச்சி, கரையுடன் கூடிய குளத்தில் எழும் அலைபோல் கரை தட்டி, நிலையடைந்து மறையும் தன்மை போல் தான் இருந்தது.

ஏதோ ஒரு கவலை அவன் மனத்தைப் பிடித்துக் கொண்டது; கண்ணுக்குத் தெரியாத நோயைப் போல்.

'அக்கா மட்டும் உடல் நலத்தோடு இருந்திருந்தால்?'

சுந்தரேசன் ஏங்கினான். அவன் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. எண்ணி ஏங்கியது. ஏங்கிக் குமைந்தது. மனத்தில் ஏக்கத்தின் அழுத்தம் அதிகமாகும் போதெல்லாம் வாழ்க்கையின் மீதே அவனுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டது; ஒரு பிடிப்பின்மை விழுந்தது.

அவன் அக்கா ஜெயம் கட்டிலே கதியாகி விட்டவள். பின்கட்டு மூலை அறை அவளுடைய நிரந்தர அறையாகி விட்டது. உடலில் ரத்தமே இல்லாது சாறு போன கரும்புச் சக்கையாகி விட்டது அவளுடைய உடல். உடலில் உயிர் ஒட்டிக் கொண்டிருந்ததால் அவள் கட்டிலில் ஒட்டிக் கொண்டு கிடந்தாள். ஒரு வருடமா, இரண்டு வருடமா? பத்து நீண்ட வருடங்கள்.

அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட அதிர்ச்சி இலேசானதா? வாழ்வின் உயிர் நாடியைப் பிடித்து உலுக்கிய அதிர்ச்சியாயிற்றே அது? தலையில் இடியை இறக்கிய அதிர்ச்சியாயிற்றே அது?

சுந்தரேசனின் மனத்தில் அழியாத நிகழ்ச்சி அது.

அப்போது அவன் இண்டர் இறுதி வகுப்பில் இருந்தான். மாமாவின் முழு ஆதரவில் அவன் படித்து வந்தான். அவனை நன்கு படிக்க வைத்து ஒரு நல்ல உத்தியோகத்தில் அமர்த்திவிட வேண்டும் என்று மனப்பூர்வமாக நினைத்திருந்தார் அவர். ஆனால் எல்லோருடைய ஆசையிலும் மண்ணைப் போட்டு விட்டுப் போய்விட்டார் அவர். ஒரு வியாதியில்லை; நோயென்று படுக்கவில்லை. மருந்துப் புட்டியைப் பார்க்கவில்லை.

'போய் வருகிறேன், ஜெயம்!' என்று காலையில் விடைபெற்றுச் சென்றவர், மாலையில் பிணமாகிவிட்டார் எதிர்பாராத லாரி விபத்தால்.

'குய்யோ முறையோ' என்று கதறினாள் ஜெயம். எட்டு வயதுக் கமலிக்குத் தன் தந்தையின் கோர முடிவு நன்கு தெரியத் தான் செய்தது.

கணவனைப் பறி கொடுத்த அன்று பிடித்த மன நோய்தான் ஜெயத்தைப் படுக்கையில் தள்ளிவிட்டது.

வாழ்வின் வசந்தங்களை அவள் முழுதும் அனுபவிக்கவில்லை. விதி குரூரமாக அவளை வஞ்சித்து விட்டது. வந்து போன வசந்தங்கள் அவளுக்கு மட்டும் கடுங் கோடையாகிவிட்டன. பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருப்பாள். வெற்றுச் சுவரை வெறித்து வெறித்துப் பார்ப்பாள். தனக்குள் ஏதோ பேசிக் கொள்வாள். முணுமுணுத்துக் கொள்வாள். இப்படித்தான் அவள் நோய் ஆரம்பித்தது.

சுந்தரேசன் பயந்து போனான். தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்த அருமைச் சகோதரியின் வாழ்வு தன் கண் முன்னாலேயே கரையான் அரிக்கும் புத்தகம் போல் பாழாகி வருவதை அவனால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. உயிரான ஒரே உடன் பிறப்பின் அவல வாழ்வு அவனை ஊமை அழுகை அழச் செய்தது.

ஜெயத்தின் நடவடிக்கைகள் வெகுவாகச் சுருங்கி விட்டன. மனத்தின் அடியில் எழுந்த ஒரு பெருந் தீ அவளைச் சாப்பிட்டுவிட்டது. உருகி, உருகி, அவள் உருக்குலைந்து பின்கட்டு மூலையில் முடங்கிவிட்டாள்.

இப்போது அவள் நிரந்தர நோயாளி.

பட்டப் படிப்புப் படிக்கும் ஆசையில் மண் விழுந்துவிடவே இண்டரோடு படிப்பை முடித்துக் கொண்டு ஒரு வேலையில் அமர்ந்து விட்டான் சுந்தரேசன். இப்போது அவன் ஒருவனுடைய சம்பாத்தியம்தான் குடும்பத் தேரை ஓட்டிக் கொண்டு வந்தது.

கமலி பூத்த புது மலராய்த் திகழ்ந்தாள்.

அவளுடைய கொள்ளை அழகு சுந்தரேசன் மனத்தில் எந்த விதக் கிளர்ச்சியையும் ஊட்டவில்லை. மாறாக, 'கமலிக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து முடித்துவிடவேண்டும். என்னைப் போன்ற தரித்திர நாராயணனுக்கு அவள் வாழ்க்கைப்பட வேண்டாம். போகும் இடத்திலாவது அவள் சீரோடும்,

சிறப்போடும் இருக்கட்டும். இந்த ஏழை அவளுக்கு வேண்டாம்' என்றுதான் அவன் மனம் கிடந்து அலைந்தது.

கமலிக்கு ஒரு நல்ல 'இடம்' அமைய வேண்டுமே. அவள் அழகுக்கும் குணத்துக்கும் நிச்சயம் நல்ல 'இடம்' அமையும். ஆண்டவன் கருணை மிக்கவன்!

சுந்தரேசன் மனப்பூர்வமாக நம்பினான்.

இப்போதெல்லாம் கமலிதான் வீட்டைப் பார்த்துக் கொண்டாள். காலையில் அவள் தான் தன் தாய்க்கு மருந்து, ஆகார வகைகளைக் கொடுப்பாள். தாயைக் கவனித்த பிறகு சுந்தரேசன் அலுவலகம் புறப்படும் வரையில் அவனுடைய வேலைகளைக் கவனிப்பாள்.

அவள் சுந்தரேசனின் இலையில் சாதம் போடும்போது அவள் கைகள் சுந்தரேசன் மீது படும். அவன் ஏதாவது அவள் கையில் தரும்போது அவனுடைய கரங்கள் அவள் கைகள் மீது படும்.

எந்தவித உணர்வையும் காட்டமாட்டான் சுந்தரேசன்.

ஆனால் கமலி மட்டும் வெந்து போவாள். நாணம் தலையைத் தாழ்த்த இதழ் கொள்ளாமல் அவள் இளஞ்சிரிப்பைச் சிந்துவாள். மனப் பூரிப்பில் அவளையும் அறியாமல் அவனை ஏறிட்டுப் பார்ப்பாள்.

'ஆண்டவனே! இந்தப் பெண்ணுக்கு நல்ல ஓர் இடத்தைக் காட்டு!'

இதுதான் சுந்தரேசனின் பிரார்த்தனையாக இருந்தது. ஆனால் ஜெயத்தின் மனம் வேறாக இருந்தது.

தன் உடன்பிறப்பும், உதிரப் பிறப்பும் ஒன்றாகவோ, அடுத்தடுத்தோ வருவதைக் காண மகிழ்ந்து போவாள் அவள். அத்தனை மன வியாதியிலும் அவள் உயிரோடு இருக்கிறாள் என்றால் அதற்குக் காரணம் கமலியையும், சுந்தரேசனையும் இணைத்துத் தினம் தினம் எண்ணி மகிழ்வதுதான். அவர்கள் இருவரையும் இணைத்துப் பொருத்தம் பார்த்து அவள் மனம் மகிழும்; பூரிக்கும்.

ஒரு நாள் சுந்தரேசனும் கமலியும் இருக்கும்போது அவள் கேட்டாள்:

''சுந்தர்! உனக்கும் வயசாகலியா? இப்படி எத்தனை நாட்கள் ஒண்டிக் கட்டையா இருப்பே? 'கமலிக்கும் வயசாச்சு! ஒரு நல்ல நாள் பார்த்து ஓர் ஏற்பாடு பண்ணு! சுவாமி சந்நிதியிலே மாலை மாத்திக்கிங்க!''

சற்றும் எதிர்பாராத ஜெயத்தின் பேச்சைக் கேட்டுச் சுந்தரேசன் அசந்து போனான்.

கமலி, வெட்கம் தாளாமல் எழுந்து ஓடி வந்து விட்டாள்.

சுந்தரேசன் மௌனம் சாதித்தான். அக்காவை உற்றுப் பார்த்தான். எவ்வளவு அழகான லட்சுமிகரமான செழுமை நிறைந்த அந்த முகம் எப்படியாகி விட்டது! கூந்தலில் மலரும், நெற்றியில் திலகமும் இருந்த போது பார்த்தால் கையெடுத்து வணங்கத் தோன்றும். அவ்வளவு அமைதியான அழகு. தெய்வ அழகு அவள் முகம். ஆனால் இப்போது....

சுந்தரேசனுக்கு நெஞ்சு அடைத்துக் கொண்டது.

''என்ன சுந்தர் யோசிக்கிறே! கோயில்லே கல்யாணத்தை வைக்கச் சொன்னேனே, அதுக்காகவா?''

ஜெயம் சிரித்தாள். வறட்சி மிகுந்திருந்தது அந்தச் சிரிப்பில்.

''அக்கா! என்ன வார்த்தை சொன்னே? என்னையா கமலியைக் கட்டிக்கச் சொல்றே? வேண்டாம் அக்கா! அவள் மகாலட்சுமி மாதிரி இருக்கா! அவளுடைய கண் நிறைந்த அழகுக்குக் கட்டாயம் ஒரு 'நல்ல' இடம் அமையும். கொஞ்சம் பொறுத்துக்க அக்கா. நானே நல்ல இடமாகப் பார்த்து அவளுக்கு ஏற்பாடு பண்ணறேன். காலமெல்லாம் அவள் இங்கேயே கஷ்டப்பட வேண்டாம்!''

சொல்லும்போதே சுந்தரேசனின் கண்கள் கலங்கி விட்டன. அக்காவின் பேச்சு அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

''சுந்தர்! நீ பேசறது நல்லா இருக்கா? ஒன்றுக்குள் ஒன்று முடிஞ்சுடும். நீ வெளியிலே வரன் பார்த்தால் அதனாலே எவ்வளவு சங்கடம்? கமலிக்குச் செய்யக்கூடிய அளவுக்கு நம்மகிட்டே என்ன இருக்கு? வேண்டாம் தம்பி, நீயே அவளை மணந்து கொள். நான் நிம்மதியா இருப்பேன்.''

ஜெயத்துக்கு மேலும் மேலும் மூச்சு வாங்கியது. பேசவே கஷ்டப்பட்டாள். இன்னும் பேசினால் உடம்புக்கு அதிகமாகி விடும்.

சுந்தரேசன் மௌனமாக எழுந்து வந்து விட்டான்.

ஜெயம் சொன்னதில் பொருளுண்டு.

கமலிக்கு வெளியில் பார்த்தால் எவ்வளவு தொல்லைகள் வரும் என்று அவனுக்கும் தெரிந்தே இருந்தது.

மூன்றே பேர்கள் இயங்கும் அந்த வீட்டில் என்றும் அமைதி இருக்க வேண்டும் என்று அவன் விரும்பினான்; ஆசைப்பட்டான். அவள் மனக் கனவு அவர்கள் இருவரையும் தம்பதியராக்கிவிட வேண்டும் என்பதுதான். என்று படுக்கையில் விழுந்தாளோ அன்றே அந்த முடிவுக்கு வந்து விட்டாள் அவள். வெளியில் ஒருவனுக்குக் கமலியைக் கொடுப்பதை விடச் சுந்தரேசனுக்குக் கட்டி வைத்து விட்டால் எவ்வளவோ சங்கடங்கள் தீர்ந்து விடும் என்று எண்ணினாள் அவள்.

வருபவன் எப்படி இருப்பானோ? ஒவ்வொரு சமயமும் என்னென்ன சீர் செய்ய வேண்டி வருமோ? ஏற்கெனவே 'எட்டிக்கோ தொட்டுக்கோ' என்னும் வகையில் வருமானம் இருக்கிறது. இந்த வருமானத்தில் கமலிக்கும் அவ்வப்போது செலவு செய்ய வேண்டுமே. அப்படியே செய்தாலும் சம்பந்தி வீட்டார் திருப்தி அடைந்து விடுவார்களா? திருப்தி என்பது சம்பந்தி வீட்டாருக்குத் தெரியாத ஒன்றாயிற்றே? கணவர் போன பிறகு குடும்பத்தின் முழுச் சுமையையும் ஏற்று நடத்தி வருபவன் சுந்தரேசன்தான். இந்த நிலையில் கமலியை வெளியில் கொடுத்து மேலும் அவனை நசுக்க வேண்டுமா? கூடாது. இதையெல்லாம் எண்ணித்தான் அவள், கமலியை மணந்துகொள்ளும்படி சுந்தரேசனைக் கேட்டாள்.

சுந்தரேசன் மௌனமாகப் பதில் ஏதும் சொல்லாமல் எழுந்து போய்விட்டது அவளுக்கு எப்படியோ இருந்தது.



'' நீங்கதான் முதலாளியா? இந்தக் குஞ்சாலாடு வாயில் வைக்க முடியவில்லே, சகிக்கவில்லே!'' என்று கண்டபடி இரைந்தார் சாப்பிட வந்தவர். முதலாளி துளிக்கூட அசைந்து கொடுக்காமல், ''சார்! உங்க பிளேட்டில் ஒரு குஞ்சாலாடு இருப்பதற்கே இப்படிக் கஷ்டப்படுகிறீர்களே? நான் நூற்றுக் கணக்கான குஞ்சாலாடுகளே அடுக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேனே'' என்றார்.

ஒரு பெருமூச்சுவிட்டாள்கணவரைஎண்ணி. ஒரு முறை அழுதாள் மகளை எண்ணி. நெஞ்சம் பதைத்தாள் தம்பியை நினைத்து.

சுந்தரேசன் தீவிர வரன் வேட்டையில் இறங்கிவிட்டான். தான் எப்படிப் போனாலும் கமலிக்கு ஒரு நல்ல இடம் பார்த்து அவளை மணம் முடித்துவிட வேண்டும் என்று முயன்றான். ஜெயம் எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். ஆனால் சுந்தரேசன் பிடிவாதமாகத் தன் காரியத்தில் கண்ணாயிருந்தான்.

கமலியின் முகத்தில் சிரிப்பே மறைந்துவிட்டது. பீதி கவ்வும் நெஞ்சுடன் அவள் வளைய வந்தாள்.

வைகாசி மாதத்துக்குள் கமலியின் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று அரும் பாடுபட்டான் சுந்தரேசன். அவன் எங்கெங்கோ அலைந்தான்.

அவன் குடும்ப நிலை கேட்டே ஒதுங்கிவிட்ட 'இட'ங்கள் நிறைய இருந்தன. முயற்சி கைகூடும் போல் தெரியும். ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் ஏதாவது ஒரு முட்டுக் கட்டை விழுந்துவிடும்.

'ஆண்டவனே! நீ கமலிக்குக் காட்டிய இடம்தான் எது?'

அவன் குழம்பினான்; ஏங்கினான்.

அன்று எங்கெல்லாமோ அலைந்துவிட்டு, களைத்து, ஓய்ந்து வீடு வந்து சேர்ந்தான் சுந்தரேசன்.

''ஏன் அத்தான் இவ்வளவு நேரம்? அம்மா கூட இன்னும் நீங்கள் வரவில்லேயே என்று கேட்டாங்க.''

களைப்புத் திர முகத்தைக் கழுவிக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்த சுந்தரேசனிடம் தண்ணீர்த் தம்ளரை நீட்டியபடி பேசினாள் கமலி.

அந்த அறையில் அவர்கள் இருவருமே இருந்தனர். வெள்ளிக்கிழமை யாதலால் மூலையிலிருந்த சுவாமி படத்துக்கு மாலை சூட்டி, ஊதுவத்தி ஏற்றி வைத்திருந்தாள் கமலி. அவளுடைய நெற்றியில் குங்குமமும், திருநீறும் ஒட்டிக் கொண்டிருந்தன.

'எவ்வளவு அழகு?'

''கமலி! உனக்கு ஒரு நல்ல 'இடம்' பார்த்து முடிச்சுட்டா பிறகு நான் நிம்மதியா யிருப்பேன். அந்த நிம்மதியை எனக்கு ஆண்டவன் எப்படித்தான் கொடுப்பானோ. தெரியவில்லேயே?''

சுவாமி படத்தைப் பார்த்துப் பேசினான் சுந்தரேசன்.

''அப்போ நான் இங்கே யிருப்பது உங்களுக்கு நிம்மதி இல்லேயா அத்தான்?''

கமலியின் எதிர்பாராத கேள்வியால் துடித்துப்போய் விட்டான் சுந்தரேசன்.

''கமலி! கமலி! என்ன கேள்வி கேட்டுட்டே! காலமெல்லாம் நீ நிம்மதியாயிருக்கணும்னுதான் 'நல்ல' இடம்தேடி அலையறேன். என்ன கேள்வி கேட்டுட்டே? நீ இங்கிருப்பது எனக்கா நிம்மதியைக் கெடுக்குது? என்னைத் தெரிஞ்சுகொண்டது இவ்வளவுதானா? உனக்கு நல்ல இடம் அமையணும்னுதான் நான் அலையறேன். அது அமைஞ்சு போயிட்டா நான் எவ்வளவு சந்தோஷப்படுவேன் தெரியுமா கமலி?'' படபடவென்று பேசினான் சுந்தரேசன்.

''அந்த மாதிரி இடத்திலே நீங்க நினைக்கிற மாதிரி நான் சந்தோஷமா இருப்பேன்னு எப்படி நினைக்கிறீங்க அத்தான்?''

கமலியின் முதல் கேள்வியையே செரிக்க இயலாத நிலையில் இந்த இரண்டாவது கேள்வியைக் கேட்டுத் திணறிப் போனான் சுந்தரேசன். தண்ணீரில் மூழ்குபவன்போல் தத்தளித்தான்.

''கமலி! நீ என்ன சொல்றே? நான் உனக்கு நல்ல 'இடம்' பார்த்துத் தரமாட்டேன்னு நினைக்கிறியா? உன் மனசிலே அப்படிப் படுதா? சொல்லு கமலி!''

''இல்லே அத்தான்! அப்படி இல்லே. நான் எனக்குன்னு ஓர் 'இடம்' எப்பவோ தேர்ந்தெடுத்துக்கிட்டேன். நான் தேர்ந்தெடுத்த 'இட'த்திலேதான் நான் சந்தோஷமாயிருக்க முடியும். அந்த இடத்திலேதான் நான் வாழ்க்கைப்பட விரும்புகிறேன்!''

கமலி அமைதியாகப் பேசினாள்.

''கமலி! கமலி! நீயே தேர்ந்து நீயே முடிவு செய்துகொண்ட இடம் எது? நீ சந்தோஷமாயிருக்க முடியும்னு நினைக்கிற இடம் எது? சொல்லு. உடனே முடிக்க வைக்கிறேன்.''

சுந்தரேசன் பறந்தான்.

''அந்த இடம் — நான் தேர்ந்தெடுத்த இடம் — இந்த இடம்தான்!''

அறையில் மாட்டியிருந்த சுந்தரேசனின் படத்தைக் காட்டினாள் கமலி.

''கமலி! என்னையா? என்னையா நீ தேர்ந்தெடுத்தே? காலமெல்லாம் நீ சந்தோஷமாயிருக்க, அக்கா மகிழ்ச்சியாயிருக்க எங்கெங்கோ அலையறேன் நான். நீ என்னைக் காண்பிக்கிறியே கமலி! இது நல்லா இருக்கா, உனக்கு?'' சுந்தரேசனின் குரல் அடைத்தது.

''எனக்கு நல்ல 'இட'த்தை ஆண்டவன் காட்டிட்டான் அத்தான். என்னை வெளியில்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்ருக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினல் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/7/64

கட்டிக் கொடுத்திட்டா நான் சந்தோஷமா இருப்பேன்னு எப்படி நினைக்கிறீங்க நீங்க?

"காலமெல்லாம் படுக்கையே கதியாகி விட்ட அம்மாவை விட்டுட்டு நான் இன்னொரிடத்திலே எப்படி நிம்மதியாயிருக்க முடியும்? எப்படி சந்தோஷமா யிருக்க முடியும்? நான் உங்களை அறிந்தவள். நீங்கள் என்னைப் புரிந்தவர். என்னை வெளியிலே அனுப்பிச் சுட்டு என்னிக்கிருந்தாலும் நீங்க இந்த வீட்டுக்கு இன்னொருத்தியைக் கொண்டு வந்து தானே ஆக வேணும்?

"அந்த இன்னொருத்தி வந்து, உங்களைப் புரிஞ்சுக்கிட்டு, அம்மாவைப் புரிஞ்சுக்கிட்டு இந்த வீட்டிலே உலவ ஆரம்பிப்பதற்குள் வாழ்க்கையில் பாதிப் பாகம் போயிடுமே, அத்தான். உங்களைப் போல், என்னைப் போல் அம்மாவை வருபவள் கவனித்துக்கொள்வாளா? கண்டிப்பாக மாட்டாள். நீங்கள் உத்தரவிடலாம். அதெல்லாம் எவ்வளவு நாளைக்கு? அன்பால் கட்டுப்படாத உள்ளம் கட்டளைக்கா கட்டுப்படும்? ஒரு நாளைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு முகத்தைக் காட்டிவிடுவாளே? உங்களுக்குத்தான் பணிவிடை செய்ய வருபவள் அவள். ஒரு நோயாளிக்கும் — கட்டிலே கதியாகிவிட்ட நோயாளிக்கும் பணிவிடை செய்ய அவள் எவ்வளவு நாளைக்கு ஒப்புவாள்?

"உங்கள் மனம் இடிந்து போய்விடுமே! அம்மாவின் மனம் ஒடிந்து போய்விடுமே! நீங்கள் என்னை வெளியில் அனுப்பிவிட்டால் என்னோடு அம்மாவையும் நான் அழைத்துப் போக முடியுமா? முடியாதே! என்னைத் தான் நீங்கள் தேர்ந்தெடுப்பவரோடு அனுப்ப முடியும். அம்மாவையும் சேர்த்து அனுப்ப முடியுமா? அவர்தான் ஏற்பாரா?

"போகும் இடத்தில் என்றும் நிச்சயம் நிம்மதியாக இருக்க முடியாது. என்னை உங்களுக்கு ஒப்படைப்பதன் மூலம் அம்மாவின் அருகிலேயே இருக்க எனக்கு வழி கிடைக்கும். உங்களுக்கும் வருபவளால் அம்மாவைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்ற கவலை இல்லாது போய்விடும். வருபவள் அம்மாவை அலட்சியம் செய்தால் எப்படித் துடித்துப் போவீர்கள் என்பதை அறிவேன்.

"உங்களுக்கு வருபவள் யாரோவாக இல்லாமல் நானாகவே இருக்கிறேனே அத்தான். என்னை விட அம்மாவின் மீது உங்களுக்கு அன்பு அதிகம் உண்டு. இந்த இரண்டு உளமார்ந்த தூய அன்பும் பிரிந்துதான் போய்விட வேண்டுமா அத்தான்? சொல்லுங்கள். உயிரான இரண்டு ஜீவன்கள் அம்மாவை விட்டு வெகு தூரம் போய்விடத் தான் வேண்டுமா? அம்மா அநாதையாகக் கவனிப்பாரற்றுப் போய்விடத்தான் வேண்டுமா? எனக்காக நீங்கள் என்னை மணக்க வேண்டாம். அம்மாவின் மீது நீங்கள் வைத்திருக்கும் அளவிட முடியாத அன்புக்காக மணந்துகொள்ளுங்கள். அதன் மூலம் என்னும் அம்மாவின் அருகிருக்க எனக்குப் பிச்சை கொடுங்கள்!"

சுந்தரேசன் காலடியில் விழுந்து விட்டாள் கமலி. தனக்காக அல்லாது தூய தியாகத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துத் தன் கால்களில் விழுந்துவிட்ட அந்தத் தூய மலரை, அதுங்காமல், நலுங்காமல், கைகளில் எடுத்தான் சுந்தரேசன்.

"கமலி! நான்தான் பெரிய தியாகத்தைச் செய்பவன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் நீ என்னையும் கடந்துவிட்டாய். அதோடு என்னை எனக்கே புரியவும் வைத்து விட்டாய். நம்முடைய அன்புப் பிரவாகம் இனி பிரியாமல் இருக்க வழி செய்துவிட்டாய், கமலி. இது எனக்குப் புரியாமல் போய் விட்டதே. இதை நான் எண்ணிப் பார்க்காமல் போய்விட்டேனே. உனக்காக மட்டுமல்லாது அக்காவுக்காக — உன்னைப் பெற்ற தெய்வத்துக்காக இருவரும் வாழ்வோம். அந்தத் தெய்வமும் இதைத்தான் விரும்புகிறது. என் கண்களைத் திறந்து விட்டாய், கமலி!" அன்புடன் அவளை அணைத்துக் கொண்டான் சுந்தரேசன்.

தியாக அருவிகளின் சங்கமத்தில் தங்களின் தெய்வத்தைக் குளிப்பாட்ட அவர்கள் தயாராகிவிட்ட சேதியைச் சொல்ல விரைந்து பின்கட்டுக்குச் சென்றான் சுந்தரேசன்.

நிழலாளன் கமலி.

திரைத் துணுக்குகள்

✿ நியூயார்க்கில் ஒரு படத்தின் ஒத்திகையின் போது, டைரக்டர் நடிகையிடம், "நீங்கள் இந்த அறையில் நுழையும்போது ஒளியை நோக்கி முன்னேறி வரவேண்டும்!" என்று பணித்தார். அவள் அதற்கு இசைந்தாள்: ஆனால் அப்படி நிகழவில்லை. டைரக்டர் பல தடவை ஒளியை நோக்கச் சொல்லி அலுத்துப்போய்விட்டார். கடைசியில் கோபத்துடன் அவளிடம் "என்ன இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார். உடனே நடிகை டைரக்டரிடம் பளிச்சென்று "நீங்கள் உள்ளொளிக்கு ஏற்ப நடக்கச் சொல்கிறீர்களோ என்று நினைத்தேன்" என்றாள்!

✿ ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணனுக்குச் சொந்தமான வான் ஒன்று வழியில் கவிழ்ந்து விட்டது. அதைப் பார்க்கச் சென்னையிலிருந்து வந்துவிட்டார் என். எஸ். கே. அந்த ஊரில் பிரபல ஹாஸ்ய நடிகர் வந்திருக்கிறார் என்றால் கூட்டத்துக்குக் கேட்பானேன்? "என்ன வண்டி குடைசாய்ந்துவிட்டதோ? ஆளுக்குச் சேதம் அதிகமோ?" என்று ஒவ்வொருவரும் துக்கம் விசாரிக்கத் தொடங்கி விட்டனர், குடை சாய்ந்த வண்டிக்கு அருகில் நின்று மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஹாஸ்ய நடிகரிடம்.

உடனே என். எஸ். கே. மாம்பழங்களை அவர்களுக்கும் கொடுத்து, "ஒன்றுமில்லே. மாம்பழம் சாப்பிட வேண்டுமென்று ஆசையாயிருந்தது. அதனால் வண்டியைத் திருப்பிப் போட்டுவிட்டு மாம்பழம் சாப்பிட வந்திருக்கிறோம்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். கூடியிருந்த அனைவருமே 'கொல்' லென்று சிரித்து விட்டனர். அப்பொழுது வண்டி கவிழ்ந்த துயரம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.



சிரிக்கவும் சிந்திக்கவும்

பத்திரிகைகளில் அடிபடும் சில வார்த்தைகளைப் பற்றி உத்தேசமாக ஏதோ அர்த்தம் செய்து கொள்கிறோம். அவற்றின் சரியான பொருளைத் தெரிந்து கொள்ள நமக்குச் சாவகாசமிருப்பதில்லை; வசதியும் இருப்பதில்லை.

நேருஜியின் உடலுக்குத் தீவைக்கப்பட்ட பிறகு 'பியூகில்' என்ற வாத்தியம் வாசிக்கும் ராணுவ வீரர்கள் 'லாஸ்ட் போஸ்ட்' என்பதன் சத்தத்தை எழுப்பினார்களாம். இதைப் பற்றித் தமிழ்த் தினசரி எதிலும் குறிப்பிடவில்லை. தமிழ் எழுத்துக்களையே உபயோகிக்கும் செய்திதான் எதுவும் "லாஸ்ட் போஸ்ட்" எழுதவில்லை. அதற்காக ஆண்டவனுக்கு வணக்கங்கள்!

தற்செயலாகச் சந்தித்த ஓர் இராணுவ வீரரை இதைப் பற்றி விசாரித்தேன். அவர் சற்றும் தயங்காமல், "ஒருவர் மேல் வேலைக்கு உயர்த்தப்படுவதற்கு முன்னர் கடைசியாகப் பார்த்த உத்தியோகம்" என்றார்!

கடைசியில் விஷயம் இதுதான்: இராணுவ ஸ்தாபனங்களில் சில குறிப்பிட்ட காரியங்களைத் தெரிவிப்பதற்காக 'பியூகில்' வாத்தியத்தின் மூலம் சில குறிப்பிட்ட சத்தங்களை இடைப்புகிறார்கள்.

வீரர்களைப் பள்ளி எழச் செய்வதற்காக வாசிப்பதற்கு "ரிவில்" என்பார்கள். பிறகு 'கூடுவது', 'சாப்பிட அழைப்பது' முதலிய வற்றுக்கெல்லாம் தனித்தனி வாசிப்பு உண்டு. இறுதியாக இரவு படுக்கச் செல்வதற்கு 'லாஸ்ட் போஸ்ட்' என்ற வாசிப்பு. ஒருவர் மரணமுற்றாலும் இறுதிச் சடங்கு முடிந்த பிறகு இந்த வாசிப்பு உண்டு. அதுவும் ஒருவிதத் துயில்தானே! நிரந்தத்துயில். இதற்குச் சாகித்தியம் எதுவும் கிடையாது.

ஃ ஃ ஃ

நமது தேச அகில இந்திய ரேடியோ ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் காண்பிக்கும் திறமையை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும். அந்த அம்சத்தைப் பற்றியவரை அவர்கள் எப்படித்தான் துரிதமாகக் காரியங்களைச் செய்து முடிக்கிறார்களோ என்று நான் மூக்கில் விரல்களையெல்லாம் வைத்துக் கொண்டு ஆச்சரியப்படுவதுண்டு.

யாராவது ஒரு பிரபலஸ்தர் அல்லது பிரபலஸ்தர் என்று அந்த ஸ்தாபனத்தினால் கருதப்படுபவர்கள் உயிரை விட்டுவிடும் துரதிர்ஷ்டமுள்ளவராயிருக்கிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த சில மணி நேரங்களுக்குள் குமாரி எக்ஸ்டிரா தேவி, தேவன் முதல் மந்திரி வரையில் பலர் காலஞ்சென்றவரைப் பற்றித் தமது அருமையான அபிப்பிராயங்களை ஒலிபரப்பிக் கொண்டிருப்பார்கள்.

சாதாரண நபர்கள் விஷயத்திலேயே இப்படி என்றால் நேருஜி விஷயத்தில் கேட்க வேண்டுமா? அகில இந்திய ரேடியோ ஸ்தாபனங்களின் எல்லா நிலையங்களும் பன்னிரண்டு தினங்களும் அவரது ஞாபகார்த்தமாகத் துக்கம் கொண்டாடின. அவர் சம்பந்தமான செய்திகளைக் கூறியவர்களின் தொண்டை மற்ற நாட்களிலிருப்பதைவிட அதிகம் கம்மியிருந்தது. துக்கம், துக்கம்.

அது சரிதான்! ஆனால் பன்னிரண்டு தினங்களும் 'சோகரஸ சப்தங்களை'க் கிளப்பி விட்டுக் கொண்டிருக்க வேண்டுமா என்று பொது மக்கள் கேட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். 'நேருஜி எத்தனையோ அருமையான, உள்ளம் உருக்கும் பிரசங்கங்கள் செய்திருக்கிறாரே, அவற்றின் ஒலிப்பதிவுகள் ரேடியோ ஸ்தாபனத்தாரிடம் இருக்குமே, அவற்றை வைக்கக் கூடாதா?' என்று பேசிக் கொண்டார்கள்.

என்னைப் பற்றியவரை நேருஜியின் மறைவால் ஏற்பட்ட துக்கம் ஒருபுறமிருக்க, அவர் மீது கோபம் வேறு வந்து கொண்டிருந்தது. யாரிடமும், சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று மறைந்துவிட்டாரே என்று. ரேடியோவின் சோகரஸ ஒலிகளைக் கேட்கும் போது அந்தக் கோபம் இன்னும் அதிகமாயிற்று. அவர் வந்து ஏன் அந்த ஒலிபரப்புக்களை நிறுத்திவிட்டு, அவர் ஒரோரு சமயம் வெறுப்புடன் கூறும் 'நான்ஸென்ஸ்' என்ற அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டுப் போகக் கூடாது என்று!

ஃ ஃ ஃ

நேருஜி தமது உடல் தகனம் செய்யப்பட்ட தன் சாம்பலில் ஒரு சிறிதைத் திரிவேணி சங்கமத்தில் கரைக்க வேண்டுமென்றும், பாக்கியை இந்திய வயல்களின் மீது விழும்படி விமானம் மூலம் தூவ வேண்டுமென்றும் உயிலில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேல் நாட்டினர் சிலர் தங்கள் உடல் சம்பந்தமாக விந்தையான நிபந்தனைகள் உள்ள உயில்கள் எழுதி வைத்தார்கள்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒரு செல்வந்தர் தமது சொத்துக்களை யெல்லாம் தர்ம ஸ்தாபனங்களுக்கு எழுதி வைத்தார். ஆனால் ஒரு நிபந்தனை விதித்திருந்தார். அவரது

சமாதி மீது முளைக்கும் புல் மஞ்சள் நிறமாக மாறிவிட்டால் தர்ம ஸ்தாபனங்களுக்காக வென்று எழுதியிருப்பது செல்லாது என்று குறிப்பிட்டிருந்தார்.

ஓர் ஆஸ்திரேலிய ஸ்திரீ தன் உடல் கிறிஸ்துவ மத சம்பிரதாயப்படி புதைக்கப் படக் கூடாதென்றும், தகனம் செய்யப்பட வேண்டுமென்றும், பிறகு சாம்பலை வட கடலில் கிச்னர் பிரபு மூழ்கிய அதே இடத்தின் மீது தூவ வேண்டுமென்றும் உயில் எழுதி வைத்திருந்தாள்.

ஒரு ஸ்திரீ பொடி போடும் பழக்கமுள்ளவள். தன் சவப் பெட்டிக்குள் மூக்குப் பொடியை நிரப்பி அதன் மீது தன் உடல் வைக்கப்பட வேண்டுமென்று உயில் எழுதியிருந்தாள்.

உடல் சம்பந்தப்படாத ஆனால், வேறு விதங்களில் விந்தையாக இருக்கும் சில உயில்கள் இருந்திருக்கின்றன.

ஒருவர் தமது சொத்தைத் தம் பிள்ளைக்கு எழுதி வைத்துத் தமது பிள்ளைகள் பார்லிமெண்டில் அங்கத்தினர்களாகக் கூடாதென்றும் நிபந்தனை விதித்திருந்தார்.

மார்கன் என்ற ஒரு வக்கீல் தமது நாலு லட்சம் பவுன் பெறுமான தமது சொத்துக்களைத் தமது இரண்டு பெண்களுக்கும் எழுதி வைத்தார். ஆனால் பெண்கள் பணத்தை லாபகரமான முறையில் போடுவதெப்படி என்பதைப் பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுமளவுக்கு அறிவு பெறவேண்டும்.. அதற்காக அவர்களுக்கு ஒரு பரீட்சை நடத்திப் பார்க்க வேண்டும். அதில் தேர்வு பெற்றால்தான் சொத்தைப் பெறலாம் என்று நிபந்தனை ஏற்படுத்தியிருந்தார்.

இவர்களாவது சொத்துக்களை நிபந்தனையுடன் தங்கள் குழந்தைகளுக்கு விட்டுச் சென்றார்கள். தமது சொத்துக்களைத் தாம் வளர்த்த நாய், பூனை முதலியவற்றுக்கு விட்டுச் சென்றவர்களும் இருக்கிறார்கள். காதரைன் அப்பூர்க் என்ற ஸ்திரீ பல லட்சம் டாலர்கள் மதிப்புள்ள தமது சொத்தையும், மாளிகையையும் ஐந்து பூனைகளுக்கும், ஒரு நாய்க்கும் விட்டுச் சென்றார்.

ஒரு கோமகவரனது மனைவி தன் கணவனைப் படாத பாடு படுத்திவிட்டாள். அவர் தமது உயிலில் அவளுக்கு "ஒரே ஒரு பார்த்திங் உறைக்குள் வைத்துத் தபாலில் அனுப்ப வேண்டும். ஆனால், உறைக்குத் தபால் தலை கூடாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஃ ஃ ஃ

நகரங்களில் உள்ள நிலங்களில் பொதுவாக விளைந்து வருவது வரிகள்.

—டட்லி வார்னர்

ஃ ஃ ஃ

"மத சம்பந்தமற்ற விஞ்ஞானம் நொண்டியைப் போன்றது; விஞ்ஞான சம்பந்தமற்ற மதமோ கண் குருடானது."

—ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

ஃ ஃ ஃ

"காகிதப் பஞ்சமும், அதனால் பத்திரிகையில் ஏற்படும் இடப் பஞ்சமும் எழுத்தாளராகிய நமக்கு மறைமுகமாக ஒரு வரப் பிரசாதமாக அமையட்டும். இடக் குறைவு காரணமாக எளிய சுருக்கமான ஆனால் வலுவான நடையைக் கைக் கொள்ள நேரும். சாதாரண எளிய வார்த்தைகளை உபயோகித்து, விஷயம் புரியும்படியாகச் செய்ய நேரும். எழுத்தில் அதிக நரம்புகளும் குறைந்த அளவு ஊளைச் சதையுமே இருக்கும்.

—ஹெர்பர்ட் வின்ஸென்ட் ஓபிரியான்

ஃ ஃ ஃ

ஒரு கவிதை எத்தனைக்கெத்தனை புரியாதிருக்கிறதோ அத்தனைக்கத்தனை அது உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது என்று சிலர் கருதுகிறார்கள். கவிதையில் கருத்தில்லாவிட்டாலும் வார்த்தைகள் அழகாக விழுந்திருந்தாலே அது உயர்ந்த கவிதை என்று சிலர் கருதுகிறார்கள். கவிதையைப் பற்றி ஒன்றும் தெரியாத என் போன்றவர்களோ, பொருள் செறிந்த ஒரு வாக்கியத்தை இரண்டாக மடித்துப் போட்டால், அது குறள் ஆகிறது. மூன்றாக மடித்துப் போட்டால் ஒன்றரைக் குறளாகிறது. நான்காகமடித்துப் போட்டால் வெண்பாவாக ஆகிவிடுகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு பிரபல அமெரிக்கக் கவிஞர் உலகத்திலுள்ள எல்லா விஷயங்களையும் பற்றிப் பாடியிருக்கிறார். மரம், கூடாரங்கள், குடிசை, அணில்பிள்ளை, ஆலைத் தொழிலாளி, வேலி திருத்தம் செய்பவன் என்று பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பாடியிருக்கிறார்.

அவர் கவிதைகளில் வருபவர்கள் நடக்கிறார்கள், உழைக்கிறார்கள், வாழ்க்கையுடன் போராடுகிறார்கள். அவர்கள் வீட்டுப் பாஷையில் — ஆனால் இலக்கணமாக — அந்தக் கவிஞர் தமது கவிதைகளை அமைத்திருக்கிறார். பல உயர்தரக் கவிஞர்கள் மக்களைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். இவரது கவிதைகளிலோ மக்களே உயிர் ததும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நேருஜிக்கு இந்தக் கவிஞரின் கவிதைகளில் காதல் ஏற்பட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. நேருஜி தமது மேஜையில் ஒரு காகிதத்தின் மீது எழுதி வைத்துக் கொண்டிருந்த கவிதை கடமையையும் பொறுப்பையும் வற்புறுத்திக் கூறும் வரிகள். அந்தக் கவிஞரின் 'பனிபெய்யும் மாலை நேரத்தில் தோப்பின் பக்கம் நிற்கும்போது' என்ற தலைப்புள்ள கவிதையின் கடைசி நான்கு வரிகளாகும்.

ராபர்ட் ஃபிராஸ்ட் என்ற அந்த அமெரிக்கக் கவிஞர் சென்ற வருடம்தான் காலமானார். அவரது கவிதைகள் சில பாட்டாகப் பாடுவதற்கும் ஏற்றவை. ஃபிராஸ்ட் அவற்றைப் பல பிரசங்க மேடைகளில் பாடுவதுண்டு. அவர் தமது கவிதைகளைப் பாடியதை 'ரிகார்டு' செய்து வைத்திருக்கிறார்கள். இசைத்தட்டுக்களைப் போல அவை விற்பனையாகி வருகின்றன.

ஃ ஃ ஃ

"இலக்கிய உலகில் ஒரு கற்றுக்குட்டியின் இலட்சியம் இலக்கிய நடையைப் பெற முயற்சி செய்வதாகும். கைதேர்ந்த ஆசிரியன் அந்த நடையை விட்டொழிக்கப் போராடிக் கொண்டிருப்பான்." — பெர்னார்டு ஷா

அமில அஜீரணம் நெஞ்செரிச்சல், வயிற்றுக் கோளாறு இவைகளிலிருந்து

அதிசீக்கிரமான சமனம் பெற



பிலிப்ஸ்

தொடக்கத்தி லிருந்தேயுள்ள

மில்க் ஆப் மக்னீஷியா

டேப்லெட்டுகள்

'4 எண்ணம் கொண்ட பாக்கெட்டுக்கு 20 ந.ப.

இப்பொழுது

அதிக பாது காப்பிற்காக அலுமினியம் போயில் பாக்கெட்டுகளில் கிடைக்கும்,


பிலிப்ஸ் டேப்லெட்டுகள் உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா கொண்டதும் குடும்பத்தில் எல்லோருக்கும் சவுகரியமாகவும் சீக்கிரமாகவும் சமனம் தரவும் ஏற்றது.

அமில அஜீரணம் உண்டாகும்போது சில பிலிப்ஸ் டேப்லெட்டுகளை வாயில் போட்டு மென்று சாப்பிடவும். அவை நெஞ்செரிச்சலையும் வாயுவினால் ஏற்படும் வயிறு உப்புதலையும் தணிக்கிறது. மேலும் வயிற்றை சரிப்படுத்தி சுவாஸத்தில் உண்டாகும் துர்க்கந்தத்தையும் அகற்றுகிறது.

குடும்பத்தில் எல்லோருக்கும் உபயோகத்திற்காக 75, 150 டேப்லெட்டுகள் கொண்ட பாட்டில்களில் கிடைக்கும். இன்றே பரீக்ஷித்துப் பாருங்கள்.

உபயோகத்திற்காக ரிஜிஸ்தர் செய்த தயாரிப்பாளர்கள்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மாண்யு) பிரைவேட் லிட்.,

எக்கோணத்திலும் சரி



இதோ உங்களுக்குக்

கூடுதலான பாதுகாப்பு

அளிக்கக்கூடிய டயர்

இந்த டிரெட் அமைப்பு, மோட்டாரோட்டிகளுக்கு மிகவும் அதிகமான பாதுகாப்பளிப்பதற்கெனப் பல வருடங்களாக சோதனைத்தளங்களிலும் ஓட்டப் பந்தயப் பாதைகளிலும் ஆராய்ந்து சோதிக்கப் பட்டதாகும். ஆயிரக்கணக்கான கோணங்கள் ரஸ்தாவைக் கவ்விப் பிடிப்பதால், சுலபமாக வண்டியை ஓட்டுவதற்கு உதவுவதுடன் நீங்கள் ஓட்டத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் இவை சிறந்த இழுப்புத் தன்மையை அளிக்கின்றன. பயர்ஸ்டோனை வாங்கும்போது நீங்கள் எதைப் பெறுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்

பயர்ஸ்டோன் தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்

வழக்கறிஞர் வரிசை

ஒரு பெரிய மனிதரின் மாளிகையில் உள்ள பல அறைகளிலும் புகை பிடிப்பவர்கள் உபயோகிக்கும் சாம்பல் கிண்ணங்கள் பதிக்கப்பட்டிருந்தன. நண்பர்கள், விருந்தாளிகள், உறவினர்கள் வரும்போது அவை உபயோகப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார். இத்தனைக்கும் அவர் ஒரு நாள் கூட அந்தக் கிண்ணங்களின் உதவியை நாடியவரில்லை. ஏனென்றால் அவருக்குப் புகை பிடிக்கும் வழக்கமே கிடையாது!

அந்தப் பெரிய மனிதர் போல் மற்றொரு கனவானும் தம் இருப்பிடத்தில் பல பாகங்களிலும் வேறொரு வஸ்துவை வைத்திருக்க ஏற்பாடு செய்தார். அது போதாதென்று தம் கையிலேயே ஒன்றையும் வைத்திருந்தார். அதை அடிக்கடி உபயோகப்படுத்தியும் வந்தார். அந்த வஸ்து சாம்பல் கிண்ணமல்ல! ஆங்கில அகராதிப் பிரதிகள். அந்த இரண்டாவது கனவான் வேறு யாருமல்ல! வழக்கறிஞராகத் தொழில் ஆரம்பித்து உயர் நீதிமன்றத்து நீதிபதியாக ஒளி வீசி ஓய்வு பெற்ற சர் எம். வெங்கடசுப்பாராவ்தான்.

மூத்தா வெங்கடசுப்பாராவ் 1878ம் ஆண்டில் கட்டாக் நகரில் பிறந்தார். சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தபடியால் தகப்பனாரின் சகோதரர் சம்ரட்சணையில் வளர்ந்து படித்தார். கல்லூரி நாட்களில் அவருக்கு நண்பராகக் கிடைத்த திரு ராதா கிருஷ்ணய்யா அவர் வாழ்நாள் முழுதும் கூடவே இருக்கக் கூடிய அருமை நண்பராகவும் மாறிவிட்டார்.



சர் எம். வெங்கடசுப்பாராவ்

எதையும் நிதானமாகப் படித்துப் புரிந்து கொண்டு அடுத்தபடி மேலே செல்லவேண்டும் என்ற பழக்கத்தை அவர் பள்ளி நாட்களிலேயே லட்சியமாகக் கொண்டுவிட்டதால், அந்தப் பழக்கம் அவருடைய பிற்கால வழக்கறிஞர் தொழிலுக்கு வெகுவாக உதவியது.

தாம் எடுத்துக்கொண்ட வழக்குகளை நன்கு ஆராய்ந்து படித்து நிறையக் குறிப்புக்கள் எடுத்து வைத்துக் கொண்டு அவைகளை மனத்திலே கோத்துக் கொண்ட பிறகுதான் நீதிபதி முன் வாதாட ஆரம்பிப்பார். குறிப்புக்களை முக்கியத்துவத்துக்குத் தகுந்தவாறு எடுத்து ஒழுங்குபடுத்த அவர் ஐந்து வகை வர்ணப் பென்சில்களை உபயோகிப்பது வழக்கம். சில சமயங்களில் ரப்பரைத் தேடிப் பிடித்து எடுத்து வேண்டாத வார்த்தைகளை அழித்து அகற்றிவிட்டு வேறு வார்த்தைகள் போடுவார். சரியான இடத்தில் சரியான வார்த்தையை எழுத்துப் பிசகில்லாமல் போட வேண்டும் என்ற தீவிரப் பிடிவாதம் உள்ளவராகையால் அவருக்கு ஆங்கில அகராதியின் உபயோகம் அதிகமாகவே தேவையாக இருந்தது. கட்டுரை எழுதும் மாணவன் தன் எழுத்தில் கவனம் செலுத்துவதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகவே அவர் தாம் பேச வேண்டிய விஷயங்களுக்குக் குறிப்பெடுப்பதில் காட்டினார்.

இந்தக் கோடிட்டு அடையாளம் செய்து நினைவில் வைத்துக்கொள்ளும் பழக்கம் புத்தகங்கள் படிப்பதிலும் படர்ந்தது. பிறர் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பதால் அவைகளில் தம் விருப்பப்படி அடையாளங்கள் செய்ய முடியாது என்பதற்காகப் படிக்க விரும்பிய அத்தனை புத்தகங்களையுமே சொந்தமாக வாங்கி விடுவார். இந்த விதத்தில் அவரிடம் ஓர் அருமையான வாசகசாலையே சேர்ந்து விட்டது. அவருடைய பென்சில் கோடுகளும், குறிப்புகளும் இல்லாத புத்தகம் அந்த வாசகசாலையில் இல்லவே இல்லை.

சட்டப் பரீட்சையில் வெற்றி பெற்றதும் இவர் திரு பி. வி. குமாரசாமி சாஸ்திரியாரிடம் சில காலம் தொழில் பயிற்சி பெறப் போனார். சீக்கிரமே இவரும் இவர் நண்பர் ராதாகிருஷ்ணையாவும் ஜோடியாகத் தனித்து நின்று தொழில் நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் பிறகு இவர் அதே உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக அமர்ந்தபோது திரு குமாரசாமி சாஸ்திரியாரும் நீதிபதியாகப் பணியாற்றினார். இருவரும் சேர்ந்து, ஏழெட்டு வருடங்கள் நீதிபதிகளாக இருந்தார்கள்.

'வெங்கடசுப்பாராவின் வாதங்கள் தெளிவாகவும் கோவையாகவும் நிதானமாகவும் இருக்கும். ஆவேசப் பேச்சோ கனல் பறக்கும் சொற்களோ, பிரசங்க பாணியோ அவருக்குப் பிடிக்காது' என்று அவருடன் பழகியவர்கள் சொல்கிறார்கள்.

அவர் தம் வழக்கை ஆரம்பிக்கும் விதமே தம் வாதத்துக்கான பாயிண்டுகளை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கும் அழகோ, பொறுமை இழக்காமல் சாந்தமாகக் குறுக்கு விசாரணை பண்ணும் பாணியோ, யாராலும் சுலபமாகக் காப்பியடிக்க முடியாது என்று பல அனுபவம் மிக்க சீனியர் வழக்கறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நண்பர்களுடன் பழகுவதிலோ உற்சாகமாகப் பொழுதுபோக்குவதிலோ அரட்டையடிப்பதிலோ இவருக்கு ஆர்வம் அதிகம். இந்த மூன்றும் இவருடைய ஆப்த நண்பர் ராதாகிருஷ்ணையாவுக்குக் கட்டோடு பிடிக்காது. ஆனாலும் இவர்கள் இருவரைப் பொறுத்தவரை இந்தக் குணவேறுபாடுகளே அவர்களிடையே பரஸ்பரம் மதிப்பையும் மரியாதையையும் தோன்றச் செய்தன.

ராதாகிருஷ்ணையா சீக்கிரமே எந்த விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வந்துவிடுவார். அந்த முடிவை அப்புறம் மாற்றிக்கொள்ளவே மாட்டார். ஆனால் வெங்கடசுப்பா ராவ் நிதானமாகத்தான் ஒரு தீர்மானத்துக்கு வருவார். அந்தத் தீர்மானத்தில் ஏதாவது குறைபாடுகள் இருப்பதாக யாரும் சுட்டிக் காண்பித்தால் அந்தத் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவும் முயற்சி செய்வார். ராதாகிருஷ்ணையாவின் தீர்மானங்களை மாற்ற வேண்டுமென்று எந்தக் கட்சிக்காரராவது விரும்பினால் அவர் வெங்கடசுப்பா ராவின் உதவியைத்தான் நாடுவாராம். ராவ் சொன்னால் ஐயா அசைந்து கொடுப்பார்.

வெங்கடசுப்பாராவுக்குப் பிடிக்காதது கிரிமினல் துறை. தொழில் ஆரம்பித்த நாளிலிருந்தே அவர் 'ஒரிஜினல் சைட்' என்று குறிக்கப்படும் முதல் வழக்குப் பிரிவில் தம் கவனத்தைச் செலுத்திப் புகழும் பெரும் சம்பாதிக்கத் தொடங்கினார்.

1921ம் ஆண்டில் பனகல் ராஜா மாகாண நிர்வாகப் பொறுப்பில் இருந்தபோது அவர் உயர் நீதிமன்றத்தில் வெங்கடசுப்பாராவை நீதிபதியாக நியமிக்க வேண்டும் என்று கவர்னர் பெண்ட்லண்டிடம் குறிப்பிட்டார். பொதுவாக நீதிபதி ஸ்தானங்களுக்குப் பொறுக்குபவர்களை 'அப்பலேட் சைட்' என்று குறிப்பிடப்படும் புனர் விசாரணைப் பகுதியில் திறமை பெற்று விளங்கும் வழக்கறிஞர்களின் மத்தியிலிருந்துதான் எடுப்பார்கள். இது சம்பிரதாயமாக இருந்து வந்தது. கவர்னர் இந்தச் சிக்கலில் சிக்கிக்கொள்ள விரும்பாமல் அப்போது பிரதம நீதிபதியாக இருந்த சர் ஜான் வாலிஸிடம் இந்தப் பிரச்னையைத் தள்ளினார். சர் ஜான் வாலிஸ் எப்போதுமே 'அப்பலேட்' பகுதியில் அமர்ந்து தீர்ப்புகள் வழங்குபவர். 'ஒரிஜினல் சைடை'ப் பற்றி அதிகம் தெரியாது. ஆகவே தாம் மாட்டிக்கொள்ளாமல் இருக்க ஒரிஜினல் சைடு கேஸ்களை விசாரிக்கும் பிலிப்ஸ் என்ற மற்றொரு ஆங்கிலேய நீதிபதியிடம் இந்தப் பிரச்னையைத் தள்ளினார். 'நீதிபதி பதவிக்கு வெங்கடசுப்பாராவ் முற்றிலும் தகுந்தவர். அவருடைய திறமை எனக்கு நன்கு தெரியும்' என்று ரத்தினச் சுருக்கமாக பிலிப்ஸ் சொன்னார். வெங்கடசுப்பாராவ் நீதிபதியாக உயர்த்தப்பட்டார்.

இந்த நியமனம் அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது. அத்தனை குறைந்த வயதில் யாரும் நீதிபதியாக நியமிக்கப்பட்டதில்லை. ஆகவே அந்தக் காலத்துப் பத்திரிகைகள் இந்த நியமனத்தையும் வெங்கடசுப்பாராவின் அனுபவக் குறைவையும் சுட்டிக்காட்டித் தாக்கின. ஆனால் சுமார் பதினேழரையாண்டு காலம் அவர் நீதிபதி பதவியிலிருந்து பணி செய்து ஓய்வு பெற்றபோது அதே பத்திரிகைகள் அவரது திறமையைப் பாராட்டிப் பல ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட ஆட்சேபணைக் குறிப்புகளை நாளுக்காக வாபஸ் பெற்றன. குறைந்த வயதில் நீதிபதியாக வந்தவரும் அவர்தான். நீண்ட காலம் அந்தப் பதவி வகித்தவரும் அவர்தான்.

தம் பதவிக் காலத்தில் கொலை வழக்குகள் சம்பந்தமாகத் தீர்ப்பளிக்கும் விசாரணைகளில் உட்காராமல் பார்த்துக் கொண்டார். அந்தக் காலத்தில் சிவில் துறையில் பல பிரசித்தி பெற்ற வழக்குகளில் அவர் அளித்த தீர்ப்புகள் வருங்கால நீதிபதிகளுக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

அவர் நீதிபதியாக இருந்தபோது நடந்த பல பிரபல வழக்குகளில் 'முரளிதாஸ் ராமதாஸ் வழக்கு' ஒன்று. இருபது லட்ச ரூபாய்க்கு மேல் சம்பந்தப்பட்ட வழக்கு. வழக்கை விசாரித்த வெங்கடசுப்பா ராவ் வாதிக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார். சட்ட ஆராய்ச்சி பூர்வமான தீர்ப்பு. வழக்கு அப்பீல் கோர்ட்டுக்குப் போயிற்று. அப்பீலை விசாரித்தவர்கள் சர் வேப்பா ராமேசமும், ஸ்டோன் துரையும். ஸ்டோன் துரை இதில் அதிக அக்கறை காட்டவில்லை. ராமேசமும் ஸ்டோன் போக்கில் விட்டுவிட்டார். அப்பீலில் பிரதிவாதிகளுக்குச் சாதகமாக வெங்கடசுப்பா ராவ் தீர்ப்பை நிராகரித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆகவே முடிவான தீர்ப்புக்கு வழக்கு பிரிவி கவுன்சிலுக்குச் சென்றது. வாதி சார்பில் ஆஜரானவர் பின்னால் நீதிபதியாக வரவிருந்த எஸ். வரதாச்சாரியார்.

சில காலம் கழித்து பிரிவி கவுன்சில் விசாரணையில் வழக்கு வாதி பக்கம் வெற்றி பெற்றது. முதல் கோர்ட் தீர்ப்பு அசைக்க முடியாதது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்தத் தீர்ப்பு தந்தி மூலம் திரு வரதாச்சாரியாருக்கு வந்தபோது கோடை காலத்து நடுப்பகல் வேளை. அப்போது அவரும் உயர் நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாகி விட்டிருந்தார். வீட்டில் கார் டிரைவர் இல்லை. செருப்பும் உபயோகிக்கக் கூடியதாக இல்லை. ஆனந்தத்தில் அந்தத் தந்தியை எடுத்துக்கொண்டு வேப்பா ராமேசத்தின் வீட்டுக்கு நடந்தே சென்று தந்தியைக் காண்பித்தார். 'எனக்கு அப்போதே தெரியும். வெங்கடசுப்பா ராவின் தீர்ப்பை அசைக்க முடியாது என்று! என்னவோ அன்று நான் ஸ்டோன் போக்கில் விட்டுவிட்டேன்' என்று ராமேசம் நிதானமாகச் சொன்னாராம்.

திரு வெங்கடசுப்பாராவுக்குச் சமூகசேவையில் அலாதிப் பிரேமை. அவரும் அவர் துணைவியாரும் சேர்ந்து நிறுவியுள்ள சென்னை சேவாசதனம் அவர் நினைவை என்றென்றும் பொதுமக்கள் உள்ளத்தில் நிலவ உதவும். எண்பது ஆண்டுகளுக்கு மேல் எல்லா வகையிலும் நிறைந்த மனிதராக வாழ்ந்து சமீபத்தில் காலமான அவர் இடத்தை நிரப்ப அவர் போல் அடுத்த நபர் தோன்ற அநேக காலமாகலாம்! — கோமதி ஸ்வாமிநாதன்



அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

காச்மீரத்திலிருந்து சமவெளிக்கு வருவது என்று முடிவாயிற்று.

"அப்புறம் என்ன திட்டம், ஸ்வாமிஜி?" என்று சிஷ்யர்கள் கேட்டார்கள்.

"திட்டமுமாச்சு, மண்ணாங்கட்டியுமாச்சு. ஸ்வாமிஜி செத்துப் போய், அவர் இருந்த இடத்தில் புல்முளைத்துப்போச்சு, போங்கள்" என்றார் ஸ்ரீமத் விவேகானந்தர்.

"ஆமாம், யார் இந்த ஸ்வாமிஜி? 'நான் உலகுக்கெல்லாம் உபதேசிக்கப் போகிறேன்' என்று கிளம்ப இவர் யாராம்? எல்லாம் வெறும் டம்பமும், ஜம்பமும்தான். அம்பிகைக்கு உங்கள் ஸ்வாமிஜி ஒன்றும் தேவைப்படவில்லை. இவருக்குத்தான் அவள் தேவைப்படுகிறாள். கர்மம் புரிவது வெறும் மாயை" என்று தொடர்ந்தார் ஸ்வாமிஜி. "ஆம், கர்மம் வெறும் மாயை. எனக்கு மௌனம்தான் வேண்டும். எல்லாரும் என்னை மறந்துபோகும் நிலைமைதான் வேண்டும்" என்று முடித்தார்.

மறப்பதா? ஸ்வாமிஜியையா? உலகம் உள்ளவரை அல்லவா அவருடைய நினைவும் உயிர் வாழப் போகிறது?

ஸ்வாமி விவேகானந்தர் அக்டோபர் 18ந்தேதியன்று பேலூருக்கு வந்து சேர்ந்தார்.

நீண்டநாள் பிரிவுக்குப் பின் ஸ்வாமிஜி வந்துவிட்டார் என்பதில் குருபாயிகளின் உள்ளம் துள்ளிக் குதித்தது. ஆனால் சாம்பிய அவரது தோற்றத்தைக் கண்டதும் துள்ளிய உள்ளங்கள் துவண்டன. எப்படி இருந்த ஸ்வாமிஜி எப்படி ஆகிவிட்டார்! ஓயாமல், ஒழியாமல் தாய்த்திருநாட்டுக்காக உழைத்து உழைத்து அல்லவா இப்படி ஆகிவிட்டார்?

உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாது ஸ்வாமிஜி தமது சீடர்களை முன்போலவே பயிற்றுவிக்கலானார்.

நவம்பர் பன்னிரண்டாம் தேதியன்று தூய அன்னை மற்றப் பெண் சீடர்களுடன் ராமகிருஷ்ண சங்கத்தின் நிரந்தரத் தலைநகராகப் போகும் பேலூர் மடத்தின் மனைக்கட்டுக்கு வந்தாள். அன்று ஸ்ரீ ராமகிருஷ்ண தர்மத்தைச் சேர்ந்த துறவிகள் யாவரும் அங்கு குழுமியிருந்தார்கள். விவேகானந்த ஸ்வாமி பக்தியும், கௌரவமும், சாந்தமும் கமழும் ஆனந்தத்தில் ஆழ்ந்திருந்தார். குழந்தைகளுக்கு மணம் செய்து பார்ப்பதில் பெற்றோருக்கு ஒரு மகிழ்ச்சி யென்றால், பெற்றோருக்கு அறுபதாம் கல்யாணம் செய்து பார்ப்பதில் குழந்தைகளுக்கு அதைவிட மகிழ்ச்சியுண்டு. அந்தக் கலியாணத்தைவிட இந்தக் கலியாணத்தில் ஒரு பாவனமும் கௌரவமும் உண்டல்லவா? குருநாதன் நிரந்தரமாக வதியப் போகும் பேலூர் மடத்துக்கு அன்னை சாரதையை வரவேற்கும்போது அவளை அறுபதாம் கலியாண மேடைக்கு வரவேற்கும் மகனின் ஆனந்தத்தை அடைந்தார் ஸ்வாமிஜி. இது வெறும் இன்பக் கிளர்ச்சியோடு நிற்கவில்லை. தூய்மையும், அமைதியும், இனம் தெரியாத சோகமும் அதில் இழைந்தோடின. அப்போது தேவி சாரதையும், ஸ்வாமிஜியும் அநுபவித்திருக்கக் கூடிய புனித நினைவுகளை நாம் எப்படிப் பூரணமாக அறிய முடியும்? குருபாயிகள் தாங்கள் பூஜித்து வந்த குருநாதரின் திரு உருவப் படத்தை உடன் எடுத்து வந்திருந்தனர். சாரதா மணி தேவியும் தான் வழிபட்டு வந்த பதி தேவரின் பிரதிமையைக் கொண்டு வந்திருந்தாள். பேலூரில் மடம் நிர்மாணமாகிவந்த இடத்தில் பிரதிமைக்குத் தானே பூஜை புரிந்தாள்.

அதே ஆண்டு டிஸம்பர் 9-ந் தேதி. ஸ்வாமிஜி ஆசாரமே ஓர் உருக்கொண்டாற்போல் விளங்கினார். கங்கையில் ஸ்நானம் முடித்து விட்டு, ஈர வஸ்திரத்துடன் தர்ப்பணங்கள் செய்துவிட்டுப் புதியதொரு காஷாய வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டார் ஸ்வாமிஜி. நீலாம்பர் முகர்ஜி மாளிகையின் பூஜா க்ருகத்துக்குச் சென்று அங்கு நீண்ட நேரம் தியானம் புரிந்தார். அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த குருநாதரின் அஸ்திகளுக்கு மலராலும், வில்வத்தாலும் அர்ச்சனை செய்தார். மீண்டும் தியானம்.

72

தியானம் முடிந்தவுடன் ஊர்வலம் தொடங்கிற்று. கங்கைக் கரை வழியாக பேலூர் மட மனைக்கட்டுக்கு பக்தர்கள் சேர்ந்தார்கள். ஸ்ரீ ராமனது பாதுகைகளை பரதாழ்வான் தலையில் தாங்கி நடந்ததை நினைவூட்டுவதுபோல் 'ஸ்ரீ ராமகிருஷ்ணரது அஸ்திகள் அடங்கிய பாண்டத்தை வலது தோளில் சுமந்துகொண்டு பக்தி மயமாக நடந்தார் ஸ்வாமிஜி.

தழுதழுத்த குரலில் ஸ்வாமிஜி அருகிலிருந்த ஒரு சீடரிடம் கூறினார்: ''முன்னொரு முறை குருமஹராஜ் என்னிடம், 'நீ என்னைத் தோளில் சுமந்து கொண்டு எங்கு கொண்டு போனாலும் — அது மரத்தடியாயினும் எளிய குடிலாயினும் — நீ விரும்பும் அந்த இடத்துக்கு நான் வந்து மகிழ்ச்சியுடன் வாழ்வேன்' என்று சொன்னார். அவ்வாறே அவர் வாழ்வார் என்று நம்பி இப்போது அவரை பேலூருக்கு எடுத்துச் செல்கிறேன். தூய்மையும், புனிதமும், ஜீவதயையும் நிறைந்த அவரது லட்சியங்கள் பக்தர்களை எவ்வளவு காலம் ஊக்குகின்றனவோ அவ்வளவு காலத்துக்கு குருமஹராஜ் இவ்விடத்தில் வாழ்ந்து புனிதம் பரப்புவார். இதில் சிறிதும் சந்தேகமில்லை, குழந்தாய்.''

மடத்து மண்ணை மிதித்தாகி விட்டது. அந்த மனையில் அமைந்திருந்த ஒரு பீடத்தில் அஸ்தி கலசத்தை வைத்தார் ஸ்வாமிஜி. இழுக்க இழுப்புக்கெல்லாம் வளைந்துகொடுக்கும் குழந்தை போல் கடந்த பன்னிரண்டாண்டுகளில் தாம் நினைத்த இடங்களுக்கெல்லாம் அஸ்தி உருவில் வந்து, எப்படிப் பூஜை செய்தாலும் அதை ஏற்று அருள் புரிந்த குருநாதரை எண்ணி உருகினார் ஸ்வாமிஜி.

''என் ஐயா! இனி உன்னை எங்கேயும் அலைக்கழிக்க மாட்டேன்! இங்கேயே இருந்து காப்பாற்றி வா, என் ஸ்வாமி!'' என்று அவரது உள்ளம் கலசத்திலிருந்த ஆசாரியனிடம் விண்ணப்பம் செய்தது.

பீடத்தில் அமர்த்தப்பட்ட கும்பத்தைக் கண்டதும் எல்லோருடைய கண்களும் நிரம்பின. அவர்களுடைய குருநாதன் அங்கு உடலோடு இருக்கலாகாதா?

சிரத்தையுடன் ஒரு பூஜை நடைபெற்றது. அதன் பின் ஸ்வாமிஜி வெள்ளித் திரூட்டி சங்கத்துச் சாதுக்கள் மட்டுமே காணக்கூடிய விரஜா ஹோமத்தைச் செய்தார். தாமே குருபாயிக்களுடன் சேர்ந்து பாயஸான்னம் சமைத்து அதனை குருவுக்கு நிவேதனம் செய்தார். முன்பெல்லாம் தமது சீடர்கள் அளிக்கும் உணவுக்கு ஈடான சுத்த அன்னம் எதுவுமே கிடையாது என குருமகராஜ் கூறி வந்ததை நினைந்து நெகிழ்ந்தார்.

மட நிர்மாணம் சம்பிரதாய பூர்வமாக நிறைவு பெற்று விட்டது. எதிர் காலத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண தர்மமாகிய சர்வ சமய வேதாந்தத்தைக் காத்துத் தரும் அறக் கருவூலத்தை ஸ்தாபித்ததுடன் ஸ்வாமிஜியின் அவதாரப் பணிக்குப் பட்டாபிஷேகம் ஆகிவிட்டது.

ஒருவிதத்தில் இதனை ஒத்து சமயத்துக்கே பட்டாபிஷேகம் எனலாம். வேதாந்தம் இவ்வுலக வாழ்வை மதிப்பதே இல்லை என்ற கருத்தைத் தவிடுபொடியாக்கி மனித சேவையை அதன் மையமாக்கித் தரவே இம்மடத்தை ஸ்வாமிஜி ஸ்தாபித்தார். வேதாந்தி மனித சேவையும் செய்வான் என்றுமட்டும் கருதாமல், வேதாந்தி ஒருவரால்தான் உண்மையான மனித சேவை புரிய முடியும்—மனிதனை மனிதனாகவே பார்ப்பதைவிட, அவனை ஆண்டவனின் தோற்றமாகக் காண்பவனால்தான் அவனுக்கு உண்மையான பணிபுரிய முடியும்—என்று ஸ்வாமிஜி திடமாக நம்பியதற்கு உருவமே ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம்.

மடம் எப்படியெல்லாம் வளரும், வளர வேண்டும் என்பதை ஸ்வாமிஜி அடிக்கடி மனக் கண்ணால் கண்டு மடை திறந்தாற் போல் மொழிவார். மனித சேவையின் மூலம் மோட்சம் பெற ஒரு மார்க்கமாக அம்மடம் அமையும் என்பார்.

ஸ்வாமிஜி ஒருமுறை இவ்வாறு கூறி வருகையில் சீடர் ஒருவர் தமக்குத் தியானத்தின் மூலம் அத்வைதத்தை அநுபவிப்பதிலேயே மனம் செல்கிறது என்றும், சேவையினால் அத்வைதாநுபவம் பெற இயலாது என்றும் கூறினார்.

''ஏன், தியான யோகியான சிவபெருமான் அத்வைதாநுபவம் துய்த்ததால் ஆனந்த நடனமிடவில்லையா? அதுபோல நீயும் ஆட்டமிடு! இன்சுவைப் பண்டத்தை அதிகம் ரசிப்பவன் யார்? தானே அவ்வளவையும் உண்பவனா? பிறருடன் அதைப் பகிர்ந்து கொள்பவனா?'' என்று கேட்டார் ஸ்வாமிஜி.

1898ம் ஆண்டு டிஸம்பர் 9-ந் தேதியன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவச் சிலை பேலூர் மடத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டது. எனினும் 1899 ஜனவரி இரண்டாம் தேதி தான் மடத்தினர் நீலாம்பர் முகர்ஜியின் தோட்ட மாளிகையிலிருந்து பேலூர் மடத்துக்கு நிரந்தரமாகக் குடிபெயர்ந்தனர்.

* * *

உடம்பில் குடியிருப்பதற்காக ஆத்மா கொடுக்கும் வாடகையே நோவுகள் என்பார் குருமஹராஜ். வாடகை பாக்கி யாவற்றையும் ஸ்வாமிஜி தீர்க்க வேண்டிய கொடுங் காலம் நெருங்கி விட்டது.

ஸ்வாமிஜிக்குக் கொடிய ஆஸ்துமா கண்டது. ஆத்மாவை ஆஸ்துமா என்ன செய்ய முடியும் என்றெண்ணி ஸ்வாமிஜி வழக்கம் போலவே சாதனைகள் புரிந்து வந்தார். ஆனால் வைத்திய நிபுணர்களோ தீவிரமான தியானமும் தவமும் அவரது தேகத்தைப் பாதிக்கும் எனக் கூறினர். ஸ்வாமிஜி பரவச நிலைகளில் ஆழ்ந்து விடாதவாறு அவரது உள்ளத்தைக் கீழே இழுக்க குருபாயிக்கள் முயன்றனர். முடிகிற காரியமா அது?

ஒரு நாள் ஸ்வாமிஜி நிஷ்டைக்கு அமர்ந்தபோது அவர் சமாதியில் ஆழ்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளச் சீடர் ஒருவர் அவரது அறைக்குள் வந்தார். கண்களை மூடிக் கனல் குன்றாக அமர்ந்திருந்தார்

ஸ்வாமிஜி: "ஆஹா! அந்தக் களிலும் களையாக அதோ அவரது இடது கண்ணில் காணும் செம்பொறி என்ன?" சீடரின் பொறி கலங்கினாற் போலிருந்தது.

"ஸ்வாமிஜி! இதென்ன கண்களில் இரத்தத் துளி?" என்று அலறினார் அவர்.

ஸ்வாமிஜி அமைதியாகவே பதில் சொன்னார். "இரத்தத் துளி இல்லை. இரத்தம் கட்டிப் போயிருக்கிறது. க்ஷீரபவானியில் அம்பாளைக் குறித்து மிகவும் தீவிரமாகத் தியானம் இருந்தேனல்லவா? கண்ணில் ரத்தக் குழாய் உடைந்துகொண்டிருக்க வேண்டும். அவ்வளவுதான்" என்றார் அலட்சியமாக. பின்னர் அமரநாத அநுபவங்களை விவரிக்கலானார். அழுத்தம் திருத்தமான குரலில், "நான் அமரநாதம் போன நாளாக சிவபெருமானே என் புத்திக்குள் புகுந்து விட்டான். அவன் என்னை விட்டுப் போகவே மாட்டானும்" என்று கோஷித்தார்.

விடியற்காலையிலிருந்து இரவு ஒன்பது மணி வரையில் தினந்தோறும் பக்தர்கள் ஸ்வாமிஜியை நாடி வந்தபடியே இருந்தனர். அவர்களோடு உரையாடிஉரையாடி ஸ்வாமிஜி நாவுலர்ந்து போவது குருபாயிக்களுக்கு சகிக்க முடியாத ஒரு சித்திரவதையாக இருந்தது. வேளா வேளைக்கு ஸ்வாமிஜியால் உண்ணவும் முடியாமல் போயிற்று. இது காரணமாக அவரது அன்புச் சீடர்கள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மட்டுமே அடியார்கள் அவரைக் காண அநுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். ஆனால் என்பும் பிறர்க்குரிய அன்புருவாம் ஸ்வாமிஜியோ, "என்னைப் பார்க்க அவர்கள் எங்கிருந்தெல்லாமோ அலைந்து திரிந்து கொண்டு வருகிறார்கள். நான் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் அவர்களைப் பார்க்க மாட்டேன் என்று சொல்வது நியாயமாகுமா? இந்த உடம்பு சிறிது கஷ்டப் பட்டுவிட்டுத்தான் போகட்டுமே!" என்றார்.

ஒரு மஹாராஜுக்கும் தமக்கும் வித்தியாசமே இல்லாமல் அவரேபோல் மதுரமயமாக ஆகிவந்தார் விவேகாநந்தர்.

நித்திரா தேவி ஸ்வாமிஜியை மிகவும் சோதிக்கலானாள். ஆஸ்துமா வியாதியஸ்தர்களுக்கே உரிய கொடுமைகளை இரவு முழுவதும் அநுபவித்தவர் ஸ்வாமிஜி: இருமல், குமட்டல், நுரையீரல்களில் உறுத்தல், மூச்சுத் திணறல், இப்படியாகப் புனித ஆத்மா உறைந்த அந்த திவ்விய தேகம் ஏறுபடாத பாடு பட்டது. 'ஏன் அப்படிக் கஷ்டப்பட்டது? மகான்களின் உடல்நலம் எவ்விதம் நலிய முடியும்?' என்று பலர் கேட்கிறார்கள். உலகத்தவரெல்லாம் பல உபாதிகளில் சங்கடப்படும் போது மகான்கள் சுயநலமாகத் தங்களின் தேக ஆரோக்கியம் மட்டும் நன்றாக அமைய வேண்டுமென விரும்ப மாட்டார்கள் என்பதுதான் இதற்கு விடை. உடம்பு அவர்களுக்கு ஒரு பொருட்டு அல்லவாதலால் இயற்கை விதிக்கே அதை ஒப்படைத்து விட்டு அது என்னவானாலும் அதில் கருத்தில்லாமலிருப்பார்கள். அல்லது கருணை காரணமாக அடியார்களின் நிலைமையைத் தாங்களே வாங்கிக் கொண்டு அதற்கு ஈடாக உடலால் அநுபவிப்பார்கள். அல்லது ஆத்மாவும் உடம்பும் வேறு வேறு என்பதை நிரூபிப்பதற்கே தாங்களாக நோவுகளை ஏற்று அப்போதும் சமநிலை குலையாது இருந்து காட்டுவார்கள்.


ஸ்வாமிஜிக்கு உடல் நலம் குன்றக் குன்ற அவரது புத்தி சக்தி மிகவும் விழிப்புற்று இயங்கலாயிற்று. வியாதியைவிட இந்த புத்தி வேகத்தைத்தான் ஸ்வாமிஜியால் தாங்க முடியவில்லை. 'சிந்தனைகள் ஓயாவா?' என்று தவித்தார் ஸ்வாமிஜி.

அன்று பகல் ஸ்வாமிஜி பலராம பாபுவின் இல்லத்தில் சயனித்துக் கொண்டிருந்தார். தேச தேசங்களாய் அலைந்த அவரது பாதங்களைச் சீடர் ஒருவர் பிடித்து விட்டுக் கொண்டிருந்தார். திடீரெனச் சங்கொலியும், மணி நாதமும் எழும்பின.

"ஓ, இன்று சூரிய கிரஹணம் அல்லவா! கிரஹணம் பிடித்துவிட்டதைத்தான் இந்த ஓசை குறிக்கிறது! நல்லது! நான் தூங்குகிறேன்" என்று கண்களை மூடிக் கொண்டார் ஸ்வாமிஜி.

சிறிது போதுக்குப் பின் எழுந்திருந்தார்.

"ஹூம்! கிரஹணத்தில் ஒரு காரியத்தைச் செய்தால் அதை நூறு பங்கு சிறப்பாகப் பின்னால் முடிப்பான்—என்று சொல்வார்கள்.



நான் இரகண காலத்தில் சிறிது போதேனும் ஆழ்ந்து உறங்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். இதனால் இனியேனும் இரவுகளில் ஆழ்ந்து நித்திரை செய்ய முடியும் என்று நினைத்தேன். ஆனால் தூக்கம் வந்தால்தானே! திவ்விய மாதா இந்தத் தேகத்துக்கு நல்ல நித்திரையைத் தந்து ஆசீர்வதிக்கவில்லை'' என்றார் ஸ்வாமிஜி மனத்தாங்கலுடன்.

வைத்தியநாத க்ஷேத்திரத்துக்குப் போய்ச் சில நாட்கள் ஓய்வு கொள்ளவும், பிறகு வெயில் காலத்தில் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் மீண்டும் சென்று அங்கு வேதாந்தப் பணி எப்படி நடக்கிறது என்பதைக் கண்டு, தமது உடலை தேற்றிக் கொள்ளவும் உத்தேசித்தார் ஸ்வாமிஜி.

அவ்வாறே டிசம்பர் 19ந் தேதியன்று வைத்தியநாதத்துக்குச் சென்று மறு ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில்தான் பேலூர் மடத்துக்குத் திரும்பினார். குருபாயிகளுக்கும் சிஷ்யர்களுக்கும் அவர்களது நிரந்தர வாசஸ்தலத்தில் பயிற்சிகளும் உபதேசங்களும் அளித்தார் ஸ்வாமிஜி. சமையலிலிருந்து, சமூக சேவை உட்பட, சமய தத்துவம் சமூக பாவத்திலும் செம்மையான பயிற்சி அளித்தார்.

''சீடர்கள் நீந்தக் கற்க வேண்டும் என்பதற்காக அவர்களது உயரத்துக்கு அதிகமாக ஆழமுள்ள நீரில் அவர்களைத் தூக்கி எறிவார் ஸ்வாமிஜி'' என்று உவமை கூறுகின்றனர் அந்தச் சீடர்கள். அவர்களின் சக்தியில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை!

மடத்து அங்கத்தினர்கள் சரியாகப் பயிற்றுவிக்கப்பட்டால் உலகத்தையே அசைக்க முடியும் என்ற நம்பிக்கை ஸ்வாமிஜிக்கு இருந்தது. அவர் கூறினார்:

''உலகத்தின் சரித்திரம் என்பது, தங்களிலேயே நம்பிக்கை கொண்ட ஒரு சில மனிதர்களின் சரித்திரம்தான். இந்த நம்பிக்கையானது ஒவ்வொருவரிலும் உள்ளடங்கியுள்ள தெய்வீகத்தை வெளிப்படுத்துகிறது. நீங்கள் எதையும் சாதிக்கலாம். ஒருவன் சுய நம்பிக்கையை எப்போது இழக்கிறானோ அப்போதே மரணம் வந்துவிடுகிறது.

''முதலில் உங்களிடமே நம்பிக்கை கொள்ளுங்கள். அதன் பின் ஆண்டவனை நம்புங்கள். உணர்வதற்கு ஓர் இதயமும், எண்ணுவதற்கு ஓர் அறிவும், உழைப்பதற்கு ஓர் உறுதியான உடலும் நமக்கு வேண்டும்.... இதயத்துக்கும் அறிவுக்கும் போராட்டம் மூளுமானால் இதயத்தையே பின்பற்றி நடவுங்கள்.''

சமரஸத்தை விசேஷமாகப் போதித்ததே ராமகிருஷ்ண — விவேகானந்தரின் விசேஷப் பெருமை. எனினும் சமரஸம் என்ற பெயரில் கொள்கையை விட்டுக் கொடுத்து 'ராஜி' செய்து கொள்வது தமது சீடர்களுக்குச் சிறிதும் தகாது என்று ஸ்வாமிஜி அடிக்கடி எடுத்துக் கூறிவந்தார். ''பதினறு ஆண்டுகள் சத்தியத்திலிருந்து சிறிதும் பிறழாமல் சேவை புரிந்தீர்களாயின் நீங்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் மக்கள் நம்பி ஏற்றுக் கொள்வார்கள்'' என்பார்.

ஏழைகளுக்கு உணவளிப்பது; வெள்ளம் முதலிய இயற்கைக் கொடுமைகளின்போது கஷ்ட நிவாரண சேவை செய்வது, நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பது, கொள்ளை நோய் கண்ட ஊர்களில் சுகாதாரத்தை ஏற்படுத்துவது, அநாதாசிரமங்கள் நிறுவுவது, கல்விப் பணி புரிவது — இவை ஸ்வாமிஜி தமது சீடர்களுக்கு விதித்த தொண்டுகள்.

சங்கீதம், தோட்டக் கலை, மிருக வளர்ப்பு இவற்றையும் ஸ்வாமிஜி சீடர்களுக்குக் கற்பித்து, அறிவோடும் அன்போடும் அழகையும் சேர்த்தார். தேகாப்பியாசங்களும் சொல்லித் தருவார் ஸ்வாமிஜி. ''சமய ராணுவம் ஒன்றுக்கு வீரர்களைத் தேடுகிறேன் நான். எனவே சேவகர்காள், இரும்புத் தசைகளும், உருக்கு நரம்புகளுமாக உடலை வலிவாக்கிக் கொள்ளுங்கள்! வைராக்கியமான துறவிதான் உடலை வருத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் ஜன சேவைக்காகப் பிறந்தவர்களல்லவா?'' என்பார். ''இந்த விநாடி நீங்கள் தியான யோகத்தில் அமிழ வேண்டும்; அடுத்த விநாடியே அதோ அந்த நிலங்களை உழுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்'' என்பார்.

கிருஹஸ்த சிஷ்யர்கள் சாதுக்களோடு நெருங்கிப் பழகக் கூடாது; அவர்களுடன் சேர்ந்து உண்ணக் கூடாது; அவர்களுடைய ஆசனங்களில் அமரக் கூடாது என்றெல்லாம் விதிகளை வகுத்தார் ஸ்வாமிஜி.


பிரம்மசாரிகள் சந்நியாசத்தில் ஊன்றி நின்ற பின்தான் அவர்கள் இல்லறத்தாருடன் நெருங்கிப் பழகலாம் என்பார் ஸ்வாமிஜி.

மகான்களின் மனநிலைதான் எவ்வளவு விதங்களில் இயங்குகிறது? படுபாவிகளையும் பரமனைக் கண்டு உடன் சேர்த்துக் கொள்கிற நிலையை ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீமத் விவேகானந்தர் ஆகியோரின் வாழ்வில் காண்கிறோம். இதே போல் ஒரு சிறு தவறு புரிந்தவர்களையோ, தூய்மையில் சிறிது குறைந்தவர்களையோ காண முடியாமல் அவர்களின் கண்கள் நொந்ததையும் காண்கிறோம்! முன்னது அத்வைத நிலை. பின்னது ஆசாரிய நிலை. உலகை உய்விக்க வேண்டுமெனில் இருள்ள நிலைகளைத் நிலையாகக் கண்டேயாக வேண்டும் அல்லவா?

ஸ்வாமி விவேகானந்தர் கிருஹஸ்தர்களைத் தாழ்வாக எண்ணினார் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. ''பிறரை ரட்சிக்கவேண்டும், பிறருக்குச் சேவை செய்ய வேண்டும், நல்ல முறையில் பொருளீட்ட வேண்டும், கருணையுடன் அதைச் செலவிட வேண்டும், ஆத்ம லட்சியத்தை அடையும் முறையிலே இல்லறத்தையும் நடத்த வேண்டும் — இப்படியெல்லாம் ஆர்வம் கொண்ட ஆதர்ச கிருஹஸ்தர்களின் மகிமையை நான் உணர்கிறேன். சில ஆத்மாக்களுக்குத் திருமணம் ஒரு பாதையாக—திருமணம் ஒன்றே பாதையாக—இருக்கிறது'' என்று ஸ்வாமிஜி சொல்லியிருக்கிறார்.

''வனவிருட்சமொன்றின் அடியிலே களைத்துப்போன இரண்டு யாத்திரிகர்கள் வந்து தங்கினர். அம்மரத்தில் வசித்த பட்சிகள் தங்களையே நெருப்பில் வதக்கிக் கொண்டு

டபிள் டயமண்ட்



பாங்காக அணிவோர்க்கு ஏற்ற ஒரு பாப்ளின்.

பின்னி தயாரிப்பு

டபிள் டயமண்ட் ஒரு புதிய நயமான பாப்ளின் : உயர்ந்த எகிப்திய பருத்தியிலிருந்து தயாரானது. அணிவதற்கு இதமாயும் குளுமையாகவும் இருக்கிறது. பார்வைக்கும் பாங்காக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேல், பின்னி துணிகளுக்கே உரித்தான, நீடித்து-உழைக்கும்-தன்மை வாய்ந்தது.


SANFORIZED

BINNY'S FABRICS

BINNY & CO. LIMITED, MADRAS

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் எங்கள் அனுமதிபெற்ற வியாபாரிகளிடமிருந்து கண்ட்ரோல் விலைகளுக்கு வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்நாடிக் கம்பெனி லிமிடெட். பின்னி & கம்பெனி லிமிடெட். மதராஸ். ஸ்தாபனத்தின் ஒரு மில்


PANAMA
RAZOR BLADE
Why have
millions
changed over to
PANAMA
BLADES?
Because they are
most
economical!
★
why not try it out
for yourself!

அவர்களுக்கு உணவாயின — 'இல்லறத்தாராகிய நாம் இந்த சாதுக்களுக்கு சத்காரம் செய்ய வேண்டாமா?' என்ற உணர்வில்லை. இந்த ஆதர்ச இல்லற தர்மமே சந்நியாசிகளின் சேவா நெறிக்கும் லட்சியமாகும்'' என்பார் அவர்.

''நான் எந்தத் தொண்டுக்கும் தயார். என் ஆயுட்காலம் முழுவதும் நான் மடத்துச் சாக்கடையைக் கழுவுவதிலேயே செலவிட வேண்டும் என்று என் குருபாயிக்கள் சொன்னால் நான் இப்போதே அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிவேன். பணியத் தெரிந்தவன்தான் தலைவனாக முடியும்'' என்று கூறுவார்.

விரல் விட்டு எண்ணக்கூடிய சீடர்களை வைத்துக் கொண்டு உலகையே புரட்டி விடலாம் என்று நம்பிய ஸ்வாமிஜியே சில சமயங்களில் மிகவும் மனத்தளர்ச்சி கொண்டதும் உண்டு. ''இந்த நாட்டுக்காகப் பிராணத்தியாகம் செய்ய ஈராயிரம் வாலிபச் சீடர்கள் கூட என்னை வந்து அடையவில்லையே! ஈராயிரம் இளைஞர்களும், முப்பது கோடி ரூபாயும் என்னிடம் இருந்தால் நான் இந்தியாவின் பிரச்னை அவ்வளவையும் தீர்த்து, பாரத மாதாவைச் சுவபலத்தால் இயங்குமாறு செய்வேனே'' என்பார். ''எனினும் இருப்பதை வைத்துக் கொண்டு என்னாலியன்ற அவ்வளவையும் செய்வேன். எனக்கு ஓய்வென்பதே கிடையாது. நான் நுகத்தடியில் பூட்டிய மாடாகவேதான் சாவேன். போர் புரிந்தே மடிவேன்'' என்று கூறுவார் அந்தத் தியாகி.

ஹிமாலயத்திலே சிந்தனைச் செல்வத்துக்கு ஹிமாலயமாக விளங்கும் அத்வைத ஆசிரமம் அமைக்க வேண்டும் என மனிதரில் ஹிமாலயமான ஸ்வாமிஜி நீண்ட நாட்களாக விரும்பினாரல்லவா? ஸேவியர் தம்பதியரிடம் இப்பொறுப்பை ஒப்படைத்தார் ஸ்வாமிஜி. அவர்கள் ஸ்வாமி ஸ்வரூபானந்தருடன் அல்மோரா மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார்கள். ஆறாயிரத்து எண்ணூறு அடி உயரத்தில் அடர்ந்த கானகங்களின் மடியில் வளர்ந்த மாயாவதி என்ற இடத்தை அடைந்ததும் அவர்கள் உள்ளம் உவகை கொண்டது. மாயையை மாய்க்கும் அத்வைதத்துக்கு இருப்பிடம் அமைக்க மாயாவதியே ஏற்றது என அவர்கள் தேர்வு செய்தார்கள்.

ரஸிகரான ஸ்வாமிஜியும் மாயாவதியில் அத்வைத ஆசிரமம் அமைக்க மகிழ்ச்சியுடன் ஒப்புதல் அளித்தார்: 1899ம் ஆண்டு மார்ச் 19ந் தேதியன்று அத்வைத ஆசிரமம் மாயாவதியில் தொடங்கியது. 'பிரபுத்த பாரத'த்தின் காரியாலயமும் மாயாவதிக்கு மாற்றப்பட்டது.



''அழகும் ரூபமும் அபாரமாக இருக்கும் மனைவி வேண்டுமென்று அலைந்து கடையில் என்னைக் கலியாணம் செய்து கொண்டார்!''
''பாவம்! அலைந்து அலைந்து கடையில் அலுத்துப் போயிருப்பார்!''

அல்மோரா அத்வைத ஆசிரமத்தில் பிரதிமை, படம், வேறு தெய்விகச் சின்னம் எதுவுமே கூடாது; மற்ற மடங்களின் மைய அம்சமாகிய குருமஹராஜ் வழிபாடும் அங்கு கூடாது; அகப்பொருளை அந்தர்முகமாக உபாஸிப்பதற்கே அந்த ஆசிரமம் பயனாக வேண்டும் என ஸ்வாமிஜி விதித்தார்.

ஜூன் இருபதாம் தேதி ஸ்வாமிஜி மேல் நாடுகளுக்குப் புறப்படுவதென்றும், அவரோடு துரீயானந்தரும், சகோதரி நிவேதிதையும் செல்வதெனவும் ஏற்பாடாயிற்று.

தவம், யோகம் இவற்றிலேயே மனத்தைச் செலுத்திய துரீயானந்தர் பொது வாழ்வில் ஈடுபட விரும்பவில்லை. ஸ்வாமிஜி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவர் நெகிழவில்லை. டார்ஜிலிங்கில் அப்போது இருவரும் இருந்தார்கள். தமது வாக்குவாதம் எல்லாம் பயனற்றுப் போனதும் ஸ்வாமிஜி மனமுடைந்து போய் விட்டார். துரீயானந்தரின் கழுத்தைத் தம் இரண்டு கைகளாலும் கட்டிக் கொண்டு அவருடைய மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குழந்தை போல் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டார்.

''ஹரிபாய்! நான் குருமஹராஜின் ஆக்ஞையை நிறைவேற்றுவதற்காக அங்கும் இங்குமாக அலைந்து பிராணனைவிட்டு, சாவின் விளிம்பு வரை வந்திருக்கிறேனே, நீ பார்க்கவில்லையா? நான் தாங்கியிருக்கிற பெரும் சுமையில் உன்னால் முடிந்ததைச் சுமந்து என் பாரத்தைக் குறைக்கவேண்டும் என்று உனக்குத் தோன்றவே இல்லையா?'' என்று துரீயானந்தரை தீனமாக வினவினார் ஸ்வாமிஜி.

துரீயானந்தர் அனலிலிட்ட மெழுகாக உருகி விட்டார். அமெரிக்கா செல்வதற்கு இசைந்தார். ஆயத்தங்கள் தொடங்கின. துரீயானந்தர் ஏராளமான வேதாந்த நூல்களை எடுத்து வைத்துக் கொண்டார்.

ஸ்வாமிஜி சொன்னார்: ''இந்த நூல்களைப் பற்றியெல்லாம் நான் அவர்களுக்கு வேண்டியதைச் சொல்லியாயிற்று. அவர்கள் பாரதத்தின் க்ஷத்திரிய சக்தியை நிறையப் பார்த்து விட்டார்கள். இப்போது அவர்களுக்கு

பிராமண சக்தியைத்தான் காட்ட விரும்புகிறேன்'' என்றார்.

ஆம், சென்ற முறை அவர் வேதாந்தத்தின் காவலராக, சேநாதிபதி போல அமெரிக்காவுக்குச் சென்றார். வேதாந்த நூலின் உண்மைகளை அம்புகளாகப் பொழிந்து அந்நாட்டாரின் தவறான கருத்துக்களைத் துவம்சம் செய்தார். இம்முறை அந்த நூல்களின் பயனான அநுபவத்தின் சாந்தியையே அவர்களுக்கு அன்போடு அளிக்க விரும்பினார். முன்பு வாதத்தை எடுத்துக் கொண்டு சினத்துடன் சென்றார். இப்போது அநுபவத்தை எடுத்துக் கொண்டு அன்போடு செல்ல விரும்பினார். இதைத்தான் 'பிராமணனாகச் செல்லப் போகிறேன்' என்று குறிப்பிட்டார்.

அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்

எனத் தமிழ் வேதம் விதித்தபடி அந்தணத் தன்மைக்கு விளக்கம் கண்டிருந்தார் ஸ்வாமிஜி!

தம் உத்தேசப்படியே மேல் நாடுகளுக்குப் புறப்பட்டார் ஸ்வாமிஜி.

அலையில் மிதந்தது கப்பல்.

ஸ்வாமிஜி திடீரென்று, ''எனக்கு வயது ஏற ஏற ஆண்மையில்தான் எல்லாமே அடக்கம் என்று தோன்றுகிறது. இதுவே எனது புதிய மகா உபதேசம். தீமையானாலும் ஆண்மையோடு செய்யுங்கள். துஷ்டராகத்தான் இருக்க வேண்டுமெனில் மகத்தான முறையில் துஷ்டராக இருங்கள்'' என்றார்.

கப்பல் கங்கா நதியிலிருந்து கடலை எட்டிய போது ஸ்வாமிஜி, 'நம: சிவாய, நம: சிவாய' என்று ஜபிக்கலானார். கடலிடம் ஹிந்துக்களுக்குள்ள மகத்தான பக்தி காரணமாகத்தான் அவர்கள் கடல் கடந்து அதனை மாசுபடுத்தக் கூடாது என்று விதித்தனர் என்றார் ஸ்வாமிஜி.

வங்காள குடாக் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. சென்னை மக்களின் மனமும் கொந்தளித்துக் கொண்டிருந்தது—ஸ்வாமிஜி அமெரிக்கா போகும் மார்க்கமாகச் சென்னைக்கு மீண்டும் வருகை தரப் போகிறார் என்பதால்.

ஆனால் சென்னைக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவேயில்லை. கல்கத்தாவில் சமீபத்தில் வைசூரி பரவலாக இருந்தபடியால் ஸ்வாமிஜி சென்னையில் இறங்க அநுமதி கிடைக்கவில்லை.

சென்னை மக்கள் சொல்லொணா ஏமாற்றம் அடைந்தனர்.

சென்னைத் துறைமுகத்திலிருந்து எட்டத்தில், கடலில் நிறுத்தப்பட்டது கப்பல். துறைமுகத்தில் குழுமியிருந்த ஏராளமான மக்கள் மீண்டும் ஏமாறிப் போயினர். ஸ்வாமிஜியின் சேவைக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சிறு இருத் தொண்டர் குழாம் மட்டிலும் படகேறிச் சென்று கப்பலை அடைந்தது. ஸ்வாமிஜியிடம் ஆசி பெற்று, கப்பலைப் படகால் பிரதக்ஷிணம் செய்து திரும்பியது.

பருவ மழைக் காலம் தொடங்கிவிட்டதால் அதன் பின் பிரயாணம் தாமதமாயிற்று.

கப்பல் ஸிஸிலியை நெருங்கும்போது இருட்டிவிட்டது. அஸ்தமனமான வானத்துக்கு எதிராக எட்னா எரிமலை சிறிதே குமுறிக் கொண்டிருந்தது. மெஸ்ஸினா ஜலசந்தியில் கப்பல் புகும்போது சந்திரோதயமாயிற்று. ஸ்வாமிஜி தளத்தில் மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தார். அழகு என்பது புறத்தே இருப்பதில்லை; அது அதற்கு முன்பாகவே மனத்திலுள்ளது என்று ஸ்வாமிஜி விவரித்து வந்தார். ஒருபுறத்தில் இத்தாலியக் கடற்கரையின் கரும்பாறைகள் சீற்றத்துடன் நோக்கின. மறுபுறத்தில் நிலவு வெள்ளி ஒளி நீண்டிக் கொண்டிருந்தது. ''மெஸ்ஸினா எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். நானல்லவோ அவளுக்கு இத்தனை எழிலையும் அளித்தேன்?'' என்றார் ஸ்வாமிஜி.

அவருடைய குரல் மௌனத்தில் மூழ்கிவிட்டது. நட்சத்திர ஒளியில் தெரியும் கடலைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தவர், மீண்டும் பேசலானார். ''எனக்குப் பிராமணம் வரை வரைச் சிறிய வஸ்துக்களிலுள்ள பெருமைகளையே அதிகமாக நாடுகிறேன். மகான் ஒருவர் என்ன உண்பார், என்ன உடுப்பார், தம் பணியாட்களிடம் எப்படிப் பேசுவார் என்றெல்லாம் அறிய விரும்புகிறேன். ஆனும் பெரிய ஸ்தானத்தில் உள்ள யாருமே பெரியவராக இருக்க முடியும்.... எனக்கோ வரவரப் புழுவிடமுள்ள பெருமைதான் உண்மைப் பெருமையாகத் தெரிகிறது. தன் கடமையை அது எவ்வளவு மௌனமாக, சீராக, கணத்துக்குக் கணம், மணிக்கு மணி செய்கிறது!...''

லண்டன் டில்பரி டாக்கில் ஸ்வாமிஜியை எதிர்கொண்டழைக்கப் பழைய அன்பர்கள் குழுமியிருந்தனர். இம்முறை ஸ்வாமிஜி இங்கிலாந்தில் பொதுப் பணி எதுவுமே புரியவில்லை. தம்மைக் காண வந்த அன்பர்களோடு அளவளாவினார். மீதப் பொழுதில் ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

ஆகஸ்ட் பதினாறும் தேதி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். கடற் பிரயாணத்தின் போது ஒரு நாள், சந்திரிகையை ரசித்த ஸ்வாமிஜி, ''மாயையான இதெல்லாமே இவ்வளவு அழகாக இருக்கிறதென்றால், இவற்றின் பின்னாலுள்ள சத்தியம் எத்தகைய அற்புத எழிலுடன் விளங்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்'' என்றார். இன்னொரு நாள் பூர்ணிமையின் சௌந்தரியத்தைச் சுவைத்துக் கொண்டிருந்த ஸ்வாமிஜி, ஸ்ரீமதி ஃபங்கின் பக்கம் திரும்பி, ''எதற்காகக் கவிதைகளைப் பாடிக் கொண்டிருக்கிறீர்கள்? இதோ கவிதையின் சாரமே இருக்கிறதே!'' என்று கூறி மதியத்தையும் கடலையும் காட்டினார்.

மீண்டும் ஸ்வாமிஜி அமெரிக்காவைச் சென்றடைந்தார்.

(தொடரும்)



நாகப்பட்டினம் ரோலிங் மில்ஸ் சூப்பிரண்டெண்டு ஸ்ரீ கே. பத்மநாபன் அவர்கள் குமாரி சௌ. சரோஜாவுக்கும் ஸ்ரீ எம். ராமகிருஷ்ணன், டிபன்ஸ் அக்கவுண்ட்ஸ், அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் அவர்கள் குமாரர், சென்னை துறைமுகப் பாதுகாப்பு அதிகாரி சிரஞ்சீவி கே. ஆர். இலக்ஷ்மணனுக்கும் சென்னை ககன் விஹாரில் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்!

செயலும் சிந்தனையும்

ரா. வி.

"இது இலக்கியத் திருட்டு அல்ல என்பதுவே என் அபிப்பிராயம்." — உமேசன் தொடர்ந்தான்: "இது அதிர்ஷ்டத்தைப் பொறுத்த விஷயமே. அதிர்ஷ்டமா? என்னவென்று சொல்ல? வேடிக்கையான விஷயம், விநோதமான விஷயம். முற்றிலும் நம்பவே முடியாத விஷயம். மிகுந்த எரிச்சலை உண்டு பண்ணும் விஷயம். என் துரதிர்ஷ்டம் என்னைத் துரத்தியடிக்கிறது எமனைப் போல. அப்பப்பா! என்ன கெட்ட காலம்! என்ன கெட்ட காலம்! எல்லை மீறிச் சோதிக்கிறது பொறுமையை!"

இப்படிக் கூறியவன் தன் தலையைக் கைகளால் அழுக்கி விட்டுக் கொண்டான். அவன் தலைமயிர் முள்ளெனக் குத்திட்டு நின்றது. அவன் உடல் பயங்கர உணர்ச்சி வேகத்தில் ஆடி நடுங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கன்னங்களும் இரத்தமாகச் சிவந்தன. அவன் தன் உதடுகளைக் கடித்துக் கொண்டான்.

"நாசமற்றுப் போக இந்தச் சுதர்சனன். அவன் அப்பா அம்மாவும் கூட இறந்தொழியட்டும்!" சிறிது நிறுத்தியவன் மீண்டும் பன்மடங்கு கோபத்துடன் பொரியலானான்.

அவன் நண்பர் டாக்டர் விநாயக'ராவ் ஆவல் நிறைந்த கண்களுடன் அவனையே நோக்கினார். அவர் பார்த்த பார்வை அவனது மனத்தைப் புரிந்துகொள்ள முயல்வது போன்றிருந்தது.

"உமேசா! தவறு முழுதும் உன்னுடையதுதான்" என்றார் அவர் நிதானமாக. பிறகு, "நீ சுத்தச் சோம்பேறி. மாதக் கணக்கை நீ யோசனையிலேயே செலவிட்டு விடுகிறாய். ரேடியோவின் ஒலி அலைகள் போல, மனத்தில் உதிக்கும் எண்ணங்களும் காற்று மண்டலத்தில் அலைகளாக நீந்திச் செல்கின்றன என்பதை நீ அறிய மாட்டாய். உன்து சொந்தக் கருத்துக்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால், நீ நினைப்பதை, சிந்திப்பதை யெல்லாம் உடனே எழுத்து வடிவாக்கிவிட வேண்டும். உனக்கு ஒரு கதைக் கரு தோன்றுமானால் அதை உடனடியாக ஏன் எழுதாமல் விடுகிறாய்?" என்று கேட்டார்.

"உன் பேச்சில் முட்டாள்தனம் தெறிக்கிறது விநாயக ராவ்!" — உமேசன் கோபத்தோடு பதில் சொன்னான். "கனி தரும் மரங்கள் பூத்தவுடனேயே காய்த்துப் பழமாக ஏன் தருவதில்லை? தேவையான காற்றும் சூடும் அதற்கு ஏன் தேவைப்படுகின்றன? கோழி முட்டையிட்டதுமே ஏன் குஞ்சு பொரித்து விடுவதில்லை? இந்தக் கேள்விகளுக்கு உன்னிடம் பதில் இருக்கிறதா? அடைபைத்தியக்காரா! எதுவுமே அந்த அந்தக் காலத்தில்தான் ஈடேறும்!" என்றான்.

"ஆனால் கதை எழுதுவதற்குக் காலம் நேரம் என்று பார்ப்பதுண்டா? மற்றப் பொருள்களுக்கு ஒரு பொழுது — காலம் என்றிருப்பது என்னவோ உண்மை. ஆனால் கதை எழுதுவதற்கும் ஒருகாலம் பொழுது உண்டா? நீ சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. இந்த வகைக் கதைகள் குளிர் காலத்தில் எழுதப்படுபவை, அந்த வகைக் கதைகள் கோடை காலத்தில் எழுதப்படுபவை என்று கதைகளைத் தரம் பிரித்துக் கூற முடியுமா?" என்று கேட்டார் விநாயகராவ்.

உமேசன் சிரித்தான். "கோடை — குளிர் என்று பாகுபாடு செய்து கொண்டு குறிப்பிட்ட கதைகள் எழுதப்படுவதில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன் நண்பா! ஆனால் ஒவ்வோர் எழுத்தாளனும் கதை எழுதும் விஷயத்தில் தனக்கென்று ஒரு தனிப் பாணி வகுத்துக் கொண்டிருப்பான் என்பதை மறுக்க முடியாது. நான் எழுதும் முறைதான் உனக்குத் தெரியுமே! நான் முதலில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தையோ, எண்ணத்தையோ நிகழ்ச்சியையோ தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறேன். அதைக் கதையின் அடிப்படை அல்லது வித்து என்று கொள்ளலாம். மூளை அதை அசை போட்டு ஓர் உருவம் கொடுத்த பின்தான் நான் பேனாவை எடுத்துக் கதையை எழுதத் தொடங்குகிறேன். ஆனால் எப்படித் தான் என் மனத்தில் எழும் எண்ண அலைகள் வெளியேறிக் காற்றலைகளில் நீந்திச் சென்று சுதர்சனனை அடைகின்றனவோ, விளங்கவில்லை! என்னைப் புண்படுத்துவதற்கென்றே அவன் என் கருத்துக்களைக் கதையாகச் சமைத்து என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதாகத் தோன்றுகிறது!"



'என்ன வேடிக்கைப் பேச்சு இது. இன்று உமேசனுக்கு வெறி கிறி பிடித்துவிட்டதா, என்ன?'—டாக்டர் யோசனையில் ஆழ்ந்தார். அதற்குள் உமேசன் மீண்டும் பொங்கிப் பொரியலானான்: "சுதர்சனன்

அந்தக் கதையை நல்ல முறையில் எழுதிஞல் எனக்கு எந்த விதத்தடையும் தோன்ருது. ஆனல் அவனுக்குக் கதை எழுதவே அல்லவா வரவில்லை! எனது இந்தக் கதையைப் பாரேன்! எனக்கு முன் எழுதி அவன் பிரசுரித்துவிட்டான்! என் கதையில் உயிர் இருக்கிறது. ஓட்டம் இருக்கிறது. உணர்ச்சிப் பெருக்கு இருக்கிறது. சொல்லில் இசையின் இனிமை இருக்கிறது. எண்ணங்கள் கொப்புளிக்கின்றன. ஆனல் அவன் எழுதிய கதையிலோ....? ஒரு சிறு சலனம் கூடக் கிடையாது. உயிரற்ற சடலம் அது. மரப் பொம்மை போன்று உயிரற்றுக் கிடக்கிறது. கதையோ எங்கெங்கெல்லாமோ இழுத்துக் கொண்டு போகிறது. சரியான சொல்லாட்சியும் அவனிடம் கிடையாது. எண்ணங்களும் தளர் நடை போடுகின்றன. என்ன சொல்ல விரும்புகிருன் என்பதே விளங்குவதில்லை. ஆயினும் நான் எனது இந்தக் கதையை என்றும் பிரசுரிக்க முடியாது. இது எத்தனை தான் நன்ருயிருந்து என்ன பிரயோசனம்? இந்தக் கருத்தைத்தான் அவன் எனக்கு முன்பே கதையாகச் சமைத்துக் குட்டிச் சுவராக்கி விட்டானே! இது போல் நடந்திருப்பது இது மூன்ருவது தடவை. நான் எழுதுவதற்கு முன்னுலேயே எனக்குத் தோன்றக் கூடிய கதையை அவன் எழுதிப் பிரசுரித்தும்விட்டான். நான் என் தலையிலேயே நொந்துகொள்ளுகிறேன். சுதர்சனைத் திட்டுகிறேன். ஆனலும் எனக்கு எழுதவேண்டும் என்று தோன்றும்பொழுதுதான் — என் மனம் என்னை முடுக்கிவிட்டால்தான் — நான் எழுதுகிறேன்!''

''உன் உள்ளுணர்வு தூண்டினுல்தான் உன்னல் எழுத முடியும். அப்படித்தானே?'' டாக்டர் விநாயகராவ் சோம்பல் முறித்துக் கொண்டே கேட்டார்.

''ஆம். நானே ஓர் எழுத்தாளன். எழுத்தாளன் எப்பொழுதுமே எழுத்தாளன்தான். அவன் சின்னவனுயிருந்தாலும் பெரியவனுயிருந்தாலும், அவனுக்கு ஓர் ஆற்றல் இருக்கிறது என்பதை மறக்கக் கூடாது.''

''அப்படியானல் நீ கதை எழுதி வாழ்ந்தாற் போலத்தான்!'' என்ருர் விநாயகராவ்.

''இந்த மாதிரிக் காரியங்கள் இனியும் நடைபெற விடமாட்டேன். அப்படி நடந்தால் சுதர்சனன் என் முன்னேற்றப் பாதைக்கு இடையூறு செய்யும் கல்லாகக் கிடக்கிருன் என்றே எண்ணுவேன். இதே நிலை தொடருமானல் நான் எழுதுவதையே விட்டுவிட வேண்டியதுதான். அல்லது....''

''அந்தக் கல்லை அகற்ற முற்படுவாய்! அப்படித்தானே?'' என்ருர் டாக்டர் விநாயகராவ்.

''இல்லை. நான் விரைவாகச் செயலாற்ற வேண்டும். சரி. நான் எழுத வேண்டியிருக்கிறது. நான் வீட்டுக்குப் போய் வரட்டுமா?''

இரு நண்பர்களும் விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் இல்லம் ஏகினர்கள்.

உமேசன் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தவன் சிறிது நேரம் தன் அறையில் உலாவிக் கொண்டிருந்தான். பிறகு உள்ளுணர்வு தூண்டுவதாக உணர்ந்தான். அவன் கை பேனப் பிடிக்கத் துடித்தது. எழுதும் 'மூட்' மூட்டிக் கொண்டு வந்தது. அவன் உட்கார்ந்து எழுதலானுன். முதலில் மெதுவாகத் தொடங்கியவனின் வேகத்திலே சூடு பிடித்தது. கடகடவென்று கொட்டினுன் எழுத்து வடிவத்தில்.

மூன்று மணிக்கு அவன் எழுத உட்கார்ந்தான். கடிகாரத்தின் முள்கள் சுற்றிக்கொண்டிருந்தன. உமேசன் எழுதுவதில் முனைந்திருந்தான். இரவு மணி பன்னிரண்டு அடித்து விட்டது. அவன் எழுதிக் கொண்டே இருந்தான். இரவு ஒரு மணி சுமாருக்குத்தான் அவன் எழுந்தான். அப்பொழுது அவன் அவயவங்கள் அக்கடா என்று கிடக்கத் தோன்றும் அளவுக்குத் தளர்ந்து விட்டன. மிகவும் சிரமத்தின் பேரில் மேஜையின் மீதும் தரையிலும் சிதறிக் கிடந்த காகிதங்களை அவன் ஒன்று சேர்த்துப் பக்கவாரியாக அடுக்கினுன். அப்புறம் அப்படியே நாற்காலி மீது சாய்ந்து விட்டான்.

'மிகவும் நன்ருயமைந்து விட்டது!' என்று மனத்துள் கூறிக்கொண்டவன், 'இதை நான் பிரவீணவிடம் அனுப்புவேன். அவனது மாதப் பத்திரிகையான 'ரூபா'வில் இது போன்ற கதைகள் வெளி வருகின்றன. அந்தக் கருமியிடம் இதற்கு நூறு ரூபாய் வசூல் செய்யாவிட்டால் நான் உமேசன் இல்லை' என்று எண்ணியவண்ணம் படுக்கையில் வீழ்ந்தான்.

தூங்குவதற்கு முன்னர் அவன் என்னவெல்லாமோ முணு முணுத்துக் கொண்டிருந்தான். சம்பந்தா சம்பந்த மில்லாத விசித்திரமான எண்ணங்கள் அவன் மூளையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவன் தன் எண்ணங்களில் தொனித்த முட்டாள்தனத்தை எண்ணிச் சிரித்தான். அவனுக்குச் சிறிது யோசனையாகவும் இருந்தது. சிறிது நேரத்துக்குப் பின் அவனுக்குத் தூக்கம் வந்தது. அவனுக்கு எதிரியான சுதர்சனன் ஒரு விருந்தில் அவனைக் காண்பதாகக் கனவு கண்டான். அந்தக் கனவில் அவன் சுதர்சனன் விலை உயர்ந்த வைர மோதிரம் ஒன்று அணிந்திருப்பதையும் கண்டான்.



கனவில் இதைக் கண்ட உமேசன் வெறுப்புடன், ''என் கருத்துக்களைத் திருடிக் கதைகள் எழுதிச் சம்பாதித்து நீ இந்த வைர மோதிரம் வாங்கியிருக்கிறாய் இல்லையா!'' என்று குமுறலுடன் கேட்டான். அப்படியே தன் விரலைப் பார்த்துக் கொண்டான். அதைக் காட்டிலும் விலை உயர்ந்த வைர மோதிரம் ஒன்று அவன் விரலை அலங்கரித்துக் கொண்டிருந்தது. அவன் தன் மோதிரத்திலிருந்து எழும் ஒளிக் கற்றைகளைக் கண்டு மகிழலானான். வைரத்தின் ஒளி பன் மடங்காகப் பெருகியது.

உறக்கம் கலைந்தபோது பொழுது விடிந்து வெகு நேரமாகி யிருந்தது. வெய்யில் அவன் அறை முழுவதும் வியாபித்திருந்தது. முதல் நாளைக் காட்டிலும் இன்று அவன் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் காணப்பட்டான். முதல் காரியமாகத் தன் கதையைப் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கும் வேலையைச் செய்து முடித்தான்.

மறுநாளே சேவகன் ஒருவன் 'ரூபா'வின் ஆசிரியரான பிரவீணனிடமிருந்து ஒரு கவர் கொண்டு வந்தான். அவன் கதை திரும்பி வந்திருந்தது. அத்துடன் ஒரு கடிதமும் வைத்திருந்தார் ஆசிரியர்.

''சுதர்சனன் இதே கருத்தில் ஒரு கதை இரண்டு வாரங்களுக்கு முன் என்னிடம் அனுப்பியுள்ளார். நான் அதை ஏற்றுக் கொண்டுவிட்டேன் பிரசுரத்துக்கு. அந்தக் கதை அச்சகத்துக்குக்கூடச் சென்றுவிட்டது. இதனால் நாங்கள் தங்கள் கதையை ஏற்று வெளியிட இயலாத நிலையிலிருக்கிறோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்'' என்று எழுதியிருந்தது.

மறுநாள் கடைத் தெருவில் அவன் சுதர்சனனைச் சந்தித்தான். ஆனால் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். 'நான் இவனுடன் முகம் கொடுத்துப் பேசப்போவதில்லை' என்று மனத்துள் வீறாப்புக் கூறிக் கொண்டான்.

சுதர்சனன் அவனுடைய இந்த விசித்திர நடத்தையைக் கண்ணுற்று அதிசயித்தான். அவனுக்குக் காரணம் ஏதும் விளங்கவில்லை. ஆயினும் அவனுக்கும் அவன் மீது ஏகக் கோபம் வந்து விட்டது. முன்பெல்லாம் இருவரும் சந்தித்தால் ஒருவருக்கொருவர் வணக்கம் தெரிவித்துக்கொள்வார்கள். ஆனால் இப்பொழுது அதுவும் நின்றுவிட்டது. 'இந்த உமேசன் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்?' என்று சுதர்சனன் மனத்துள் கறுவினான். அவனும் உமேசனை உள்ளுக்குள் வெறுத்தவன்தான். ஏனெனில் உமேசன் அவனைக் காட்டிலும் கதைகள் அழகாக எழுதி வந்தான். உமேசனைப் போன்ற வேகத்தையும் சொல்லாட்சியையும் எத்தனைதான் முயன்றாலும் அவனால் தன் கதைகளில் கொண்டு வர முடியவில்லை. உயிரோட்டம், உகந்த சொற்கள், உண்மை நிலை, மனித இயல்பு ஆகிய நோக்கில் பார்க்கும்போது அவனுடைய கதைகள் உமேசனின் கதைகளைக் காட்டிலும் எத்தனையோ மட்டமாயிருந்தன. தனது தோல்வி பெரிது என்பது சுதர்சனனுக்கு நன்கு தெரிந்திருந்தது. அதோடு அவன் ஆசைகளோ உமேசனைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருந்தன. அவன் பேராசை பிடித்துத் திரிந்தான்.

உமேசன் தன் கதைகளின் கருத்துக்களையே கதையாக எழுதுகிறான். அவன் கதைகள் என் கதைகளின் திருந்திய செம்மையான உருவமாகவே காட்சி தருகின்றன. உமேசன் என்னை மட்டம் தட்டுவதற்காகவே இப்படிச் செய்கிறானே—இப்படி எண்ணுவான் சுதர்சனன்.

ஒரு முறை உமேசனின் புதுப் படைப்பு பிரசுரமானதும் இலக்கிய உலகில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இதே கருத்தில் சுதர்சனன் எழுதிய கதை உப்புச் சப்பற்று இருக்கிறது. உமேசனின் கதைக்கெதிரே அதற்கு உயிரே கிடையாது என்று மக்கள் ஏகோபித்த கருத்துத் தெரிவித்தனர். இந்த விமரிசனம் சுதர்சனனின் மனத்திலே பயங்கரப் பொறாமைக்கு வித்திட்டது. அவன் தன் மட்டற்ற மனப் போரை மனத்துள் அடக்கிக் கொண்டு பழையபடியே வளைய வந்தான்.

தன் கதைக்குக் கிடைத்த வெற்றி, அதன் பலனாகச் சுதர்சனன் சிறிது காலம் இலக்கிய உலகத்தை எட்டிப் பார்க்காமல் இருந்தது — இரண்டும் சேர்ந்து உமேசனின் மூளைக்குச் சிறிது ஆறுதல் அளித்தன. ஆனால் அந்த ஆறுதல் அதிக நாட்கள் நிலைத்து நிற்கவில்லை.

உமேசன் எழுத நினைப்பதெல்லாம் இந்தச் சுதர்சனனுக்கு எப்படித்தான் முன்னாடியே தெரியவந்தனவோ! இந்தக் கடைசி அதிர்ச்சி பேரதிர்ச்சியாகவே தோன்றியது உமேசனுக்கு. உமேசன் நிதானம் தவறிச் சிந்திக்கலானான். இந்தச் சுதர்சனனைக் கொலை செய்து விட்டால் என்ன என்றே எண்ணினான். அது மட்டுமா? சிறிதும் ஈவிரக்கமின்றிக் கொலைக்கான திட்டங்களை வகுக்கவும் தொடங்கி விட்டான். இரவு பகல் எந்த நேரத்திலும் அவனுக்கு இதே சிந்தனைதான்.

இதே நேரத்தில் ஒரு விமரிசகர் இவ்விரு கதையாசிரியர்களையும் சீர்தூக்கி உமேசனை ஆற்றல் மிகுந்தவனாகவும், சுதர்சனனை மட்டமாகவும் முடிவு கட்டியிருந்தார். ஆனால் இந்தத் தடவை இந்தப் புகழெல்லாம் உமேசனை மகிழ்விக்கவில்லை. மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

அவரது அந்தக் காரியம் வேறு விபரீதமொன்றை உண்டுபண்ணி விட்டது. சுதர்சனனைக் கோப வெறி கொண்டவனாக்கி விட்டது. கசப்பான உண்மையை அவனால் சட்டென்று விழுங்க முடியவில்லை. அவன் தடுமாறினான். தன் கதைகளிடமே அவனுக்கு வெறுப்பு உண்டாகியது. ஆனால் அதைக் காட்டிலும் வெறுப்பு உண்டாகியது உமேசனிடம். அவனால் அல்லவா அவனது மானம் மண்ணில் கலந்துகொண்டிருந்தது! அவனும் உமேசனுக்கு ஏதாவது தீங்கு நினைக்க வேண்டுமென்று திட்டமிட்டான்.

இதற்குள் உமேசனின் தீர்மானம் எவ்வளவோ முன்னேறி விட்டது. ஒவ்வொரு கணமும் கொலையைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து அவன் பைத்தியக்காரனாகவே தோன்றலானான். அவன் மனக் கண்ணெதிரே எந்த நேரமும் ஒரே ஆள்தான் நின்றான். அவன் வேறு யாரும் இல்லை. சுதர்





தலைவலி
இடுப்புவலி
பல்வலி
'அசௌகரியமான நாட்களில்' உபாதை
ஜலதோஷம்
ஒரே ஒரு ஸாரிடான்
'ரோஷ்'
வலிகளையும் நோவுகளையும் போக்கும்!
வலியைப் போக்குகிறது. ஆசுவாசப்படுத்துகிறது. புத்துணர்ச்சி யூட்டுகிறது
உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடம்புவலி, ஜுரம் வரும்போலிருப்பது, ஜலதோஷம் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.
'ரோஷ்' தயாரிப்பு
Saridon
ஸாரிடான் ஒரே வில்லை போதும்

சனனேதான். அவனைக் கொலை செய்யத் திட்டமிடுவான் உமேசன். அவற்றை எழுத்திலும் வடித்துக் கொள்ளுவான். அவன் கதைகளிலெல்லாம் இப்போது கொலை செய்வது பற்றிப் பலபல புதிய திட்டங்களே காணப்படும். அவன் அத்தகைய கதைகளையே தேடிப் பிடித்துப் படிக்கவும் செய்தான். பிறகு தன் மூளையைச் செலவிட்டுப் புதுப்புது யோசனைகள் செய்தான். இத்தனை யோசனைகள் செய்தவனுக்கு நாம் உண்மையிலேயே அவனைக் கொலை செய்துவிட்டோமோ என்ற பிரமைகூட ஏற்படும்.

ஒரு நாள் அவன் அந்தக் காரியத்துக்குச் சித்தமாகவே ஆகிவிட்டான். வெகு ஜாக்கிரதையாகத் தயாரிக்கப்பட்ட அந்தத் திட்டம் அவன் மனத்தில் களி நடனம் பயின்றது. அப்பொழுது அவன் 'கிளப்'பில் உட்கார்ந்திருந்தான்.

"நான் செய்வேன். கட்டாயம் செய்வேன். இன்றே செய்வேன். இப்பொழுதே செய்வேன்!" தன்னையும் மீறி முணுமுணுத்தான் அவன்.

அவனது இந்த விசித்திர நிலையைக் கண்டு அங்கிருந்தவர்கள் தங்களுக்குள் ஏதோ கசமுசவென்று பேசிக் கொண்டார்கள்.

கிளப்பிலிருந்து புறப்பட்டு அவன் தெருவில் நடக்கலானான். அவனோடு அவன் யோசனையும் நடை பயின்றது. அவன் தன் திட்டத்தை மறுநாளைக்கென்று ஒத்திப் போட்டான். 'இப்பொழுதே என்ன அவசரம்? இன்னும் சிறிது நேரச் சிந்தித்து விட்டுத்தான் செய்வோமே! திட்டத்தினால் ஏற்படக் கூடிய பின்விளைவையும் நன்றாகச் சிந்தித்துக் கொள்ள வேண்டாமா?' இப்படி எண்ணியவன் 'அடியைப் பிடிடா, பாரதப்பட்டா' என்று மீண்டும் ஆரம்பத்திலிருந்து சிந்திக்கலானான்.

பற்பல விசித்திர நிலைகளை அவன் திட்டம் அவன் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தியது. 'மிகவும் பலமான யோசனைதான்! பயங்கரமான திட்டம்தான்!' இப்படி மனத்தில் பேசிக் கொண்டவன் மீண்டும் சிந்தித்துப் பார்த்தான். இதுபோன்ற கொலையை யாரும் கேட்டும் இருக்க மாட்டார்கள்; கண்டும் இருக்க மாட்டார்கள். உலகமே கேட்டுப் பேரதிர்ச்சியுறப் போகிறது. இது போன்ற குற்றம் செய்பவர்கள் கூட இதைக் கேட்டு அயர்ந்துவிடப் போகிறார்கள். உலகத்தில் மாபெரும் போரே மூண்டாலும் இந்தக் கொலையைப் பற்றிக் கேட்ட மாத்திரத்திலே மக்கள் அதை மறந்து வியப்பில் ஆழ்ந்து இதையே எண்ணிப் பார்ப்பார்கள். மூச்சு விடக் கூட மறந்து இது பற்றிய செய்திகளைக் கேட்பார்கள்!

இப்படி எண்ணியவன் பலமாகச் சிரித்தான். நாம் இப்பொழுது தெருவில் தனியாக நடந்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணமே அவனுக்கு எழவில்லை. அவன் தனியாக நடந்து கொண்டே இப்படிச் சிரிப்பதைக் கண்ட மக்கள் அவனை விந்தைப் பொருளெனச் சிறிது நேரம் நின்று பார்த்து நகருவதையும் அவன் கவனிக்கவில்லை.

வீட்டை அடைந்து அவன் சாய்வு நாற்காலியில் படுத்தான்; அவன் படுத்தானே பொழிய அவன் யோசனையும் திட்டமும் படுக்கவில்லை. நிமிர்ந்து உட்கார்ந்து இன்னும் பலமாகச் சிந்திக்கலாயிற்று அவன் மனம்.

இருட்டி விட்டது. அவன் உணவருந்தவில்லை. உணவருந்த வேண்டும் என்ற எண்ணமே எழுந்தால்தானே அவனுக்கு? வீட்டிலிருந்து புறப்பட்டு, மக்கள் நடமாட்டமற்ற பாதையில் அவன் நடை பயிலலானான். நாற்புறமும் நிலவு எரித்துக் கொண்டிருந்தது. ஓரிடத்தில் அவன் ஒரு தோட்டத்து வேலிக் கம்பத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான். பாலெனப் பொழியும் நிலவிலே அவனுக்குப் பற்பல நிழல்கள் தட்டுப்பட்டன. ஒரு கணம் அவனுக்கு அவை பேயோ, பிசாசோ என்ற எண்ணம் கூட ஏற்பட்டது. அவற்றைக் கலந்து தன் திட்டத்தைப் பற்றி யோசனை கேட்டால் என்ன என்ற விசித்திர எண்ணம் கூடத் தோன்றியது. அவன் கையசைத்து அவற்றைத் தன்னருகில் வருமாறு அழைத்தான். ஆனால் எந்த நிழலுருவமும் அவனை நாடி வரவில்லை.

'நானே—' உரக்கக் கூவினான் அவன்; நானே தன் திட்டத்தை அவன் கட்டாயம் செயலாக்கியே தீருவான்.

தீர்மானமான முடிவுக்கு வந்து அவன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். அவன் எண்ணங்களும் பெருநடை போட்டு நடந்தன அவனோடு.

வீட்டை நெருங்கியதும் அவன் மீண்டும் கலகலவென்று நகைத்தான். அவன் உள்ளத்திலே இன்னும் சில சூட்சுமமான யோசனைகள் பளிச்சிட்டதே அதற்குக் காரணம்.

"போதும். இனி வேறு யோசனை தேவையில்லை. இதுவே முடிவான யோசனை. இதில் எவ்விதக் குறையும் இல்லை!" அவன் முணுமுணுத்துக் கொண்டான்.

அருகில் தோன்றிய நிழல்கள் அடர்த்தியாயின. அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

அந்த நேரத்தில்தான் திடீரென்று நாற்புறமும் மின்னல்கள் போல் பளிச்சிட்டன. வானம், காற்று மண்டலம் யாவும் ஒரே யடியாகச் சிவந்து விட்டன போலத் தோன்றின. பயங்கரப் பேரரவம் அவன் காதுகளில் ஒலித்தது. தலையிலே பேரிடி விழுவது போன்ற பிரமை அவனைச் செயலறச் செய்தது. நாற்புறமும் தீக்கொழுந்து எரிவது போலத் தோன்றியது. தீ நாற்புறத்திலும் தன் செந்நாக்கை நீட்டி அவனை ஓட விடாமல் விழுங்க முயல்வது போலப் பட்டது. அவன் தடுமாறிப் பின்னால் நகர்ந்தான். தன் இரு கைகளையும் வேகமாகத் தூக்கித் தனது சுற்றும் தலையை இறுகப் பற்றிக்கொண்டான். பிறகு தன் தலையிலிருந்து பீறிக் கொண்டு வரும் குருதி வெள்ளத்தில் குளித்த வண்ணம் தரையில் விழுந்து உருண்டான். அடுத்த கணமே அவன் மூச்சு அவன் உறவை முறித்துக் கொண்டு வெளியேறிவிட்டது.

இருள் சூழ்ந்த அந்தத் தெருவில்— உமேசனின் எண்ணங்களை முன்கூட்டியே எப்படியோ உணர்ந்துவிட்ட சுதர்சனன் ஓடிக்கொண்டிருந்தான் — தலை தெறிக்க! கொலைகாரச் சுதர்சனன்! [ஆதாரம் : தமிழ்க் கதை]



குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

லலிதா பிச்சுமணியைக் காதலிக்கிறாள் என்றதும் வசந்தி பெருமூச்சு விட்டாளல்லவா? "அந்த அசட்டுப் பிச்சுவுக்குக் காதலிக்கத் தெரியாதே!" என்றும் கூறினாள்.

"அப்படிச் சொல்லாதே, வசந்தி! பிச்சுமணி மிகவும் உணர்ச்சிகரமான வாலிபன்! அவன் ஒருத்தியைக் காதலித்தால் அது தீவிரமானதாகவே இருக்கும்! அத்தகைய காதலுக்குப் பாத்திரமாகும் பெண் அதில் தன்னையே இழந்து விடுவாள்!" என்று ஜகந்நாதன் தம் மனத்திற்குள் உமாவை நினைத்துக்கொண்டே சொன்னார்.

"அது என்னவோ! லலிதா ஜாடைமாடையாகத் தன் காதலை எவ்வளவோ உணர்த்தினாளாம்! ஆனால் அந்த அசட்டுப் பிச்சுவுக்கு அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை போலிருக்கிறது!" என்றாள் வசந்தி.

"அழகான ஒரு பெண் தன் காதலை இலேசாக உணர்த்தினாலும் போதும். எந்த மடையனும் பெரிதாகப் புரிந்து கொண்டு பெரிதாக ஆரம்பித்துவிடுவான்!" என்று கிண்டலாகச் சொன்ன ஜகந்நாதன் ஒரு யோசனையுடன் "ஒருவேளை பிச்சுமணி வேறு எவளாவது ஒரு பெண்ணைக் காதலிக்கிறானோ என்னவோ?" என்றார்.

"அவன் இனிமேல் எந்தப் பெண்ணைக் காதலிப்பதாக இருந்தாலும் கடைசியில் லலிதா ஒருத்தியைத்தான் அவன் கல்யாணம் செய்து கொள்ள முடியும்! இந்த விஷயத்தில் அவன் தாத்தா மிகவும் கண்டிப்பாக இருப்பார்!" என்றாள் வசந்தி.

"மகா பிடிவாதக்காரனான பிச்சுமணியும் தன் காதல் விஷயத்தில் உடும்புப் பிடியாக இருப்பான் என்பதையும் அவனுடைய தாத்தா மறந்துவிட முடியாது!" என்றார் ஜகந்நாதன்.

'உமாவைப் பிச்சுமணி காதலிக்கும் விஷயத்தில் வயதுப் பிரச்னையைத் தவிர இப்போது லலிதாவின் காதல் என்ற புதுச் சிக்கலும் விழுந்திருக்கிறது; இதன் முடிவு எப்படியிருந்தால் நன்றாக இருக்கும்!' என்ற சிந்தனையில் அவர் ஆழ்ந்தார்.

அவரைக் கடைக்கண்ணால் கவனித்த வசந்தி எதையோ நினைத்துக் கொண்டு சிரித்தவண்ணம், "எனக்கு இது விசித்திரமாகத் தோன்றுகிறது... அசட்டுப் பிச்சுவை லலிதா காதலிக்கிறாளே, அதை என்னால் நம்பவே முடியவில்லை!" என்றாள் வியப்புடன்.

"என்னையும் ஒரு பெண் காதலிக்க முடியும் என்பதை என்னாலும் கூட நம்ப முடியாது!" என்றார் ஜகந்நாதன்.

அவரை வசந்தி ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வை, 'நான் ஒருத்தி உங்களைக் காதலிக்கிறேனே, அது உங்களுக்குத் தெரியவில்லையா? அல்லது தெரிந்தும் விளையாடுகிறீர்களா?' என்று பரிதாபமாகக் கேட்பது போலிருந்தது.

அந்தப் பார்வையின் தாபங்களைப் புரிந்து கொண்ட ஜகந்நாதன், தம் கூர்மையான விழிகளால் வசந்தியின் இருதயம் முழுவதையுமே ஊடுருவுவது போல் ஒரு முறை உற்றுப் பார்த்தார். அதன் பிறகு கார் ஓட்டுவதில் அவருக்கிருந்த கவனமெல்லாம் கரைந்து திரிந்து வசந்தியையே அடிக்கடி அவர் தம் ரசனை விழிகளால் ஏற இறங்க ஆழ்ந்து பார்க்கலானார்.

பூங்கொடி ஒன்று பின்னிப் படர்வதற்குக் கொழுகொம்பைத் தேடி, புது மொட்டு விரித்து அவர் கையருகிலேயே குலுங்குவது போல, வசந்தி காரின் ஓட்டத்தால் குலுங்கிக்கொண்டிருந்தாள்.

ஆங்காங்கே மரக் கிளைகளை நீக்கிக் கொண்டு எட்டிப் பார்க்கும் நிலா வெளிச்சம் இடையிடையே காரின்



கதவு ஜன்னல் வழியாக நளினமாக நுழைந்து வசந்தியின் பசுமையான முகத்தைத் தொட்டு வருடி, அவளுடைய சதைப் பிடிப்பான உதடுகளிலும், சொக்கும் கண்ணிமைகளிலும், கன்னக் கதுப்புக்களிலும், மூகவாயிலும், மற்றும் அங்குமிங்கும் புகுந்து விளையாடியது. அதற்குப் போட்டியாக ஜிலுஜிலுவென்ற இராக் காற்று வேறு அவளைத் தொட்டுத் தொட்டு இழுக்க முயன்றது. ஆனால் அவளுடைய கூந்தலில் சூடியிருந்த மல்லிகைப் பூவின் போதை மணத்தை மட்டுந்தான் அந்தக்காற்றினால் அள்ளி அள்ளி ஜகந்நாதனின் பக்கம் குவிக்க முடிந்தது.

ஜகந்நாதனின் பார்வை நேர் பாதையை விட்டு விலகி வசந்தியின் பக்கம் அதிகமாகச் சரியத் தொடங்கியதும், அவர் ஓட்டி வந்த மோட்டார் கார் திடீரென்று சண்டி மாடு போல் இடக்குப் பண்ணிக் 'கீர்புர்' என்ற சத்தத்துடன் ரஸ்தாவின் ஓர் ஓரத்தில் போய் நின்றுவிட்டது.

"என்ன ஸார்? பஞ்சரா?" என்று வசந்தி பரபரப்போடு கேட்டாள்.

"டயர் பஞ்சராகி இருந்தால் ஸ்டெப்பனி மாற்றிக் கொண்டு போய்விடலாமே!" என்ற ஜகந்நாதன், "பெட்ரோல் அடைக்கிறது போல் இருக்கிறது!" என்று ஏதோ பயங்கரத்தை உணர்ந்தவர்போலச் சொன்னார்.

"ஏன், இது நல்ல மாடல் கார் இல்லையா?..."

"புது மாடல் காராக இருந்தாலும் தூசி அடைக்கும்போதும், நொடி, பள்ளங்களில் விழுந்து எழும்போதும் ரிப்பேராகி நின்றுவிடுவதுண்டு!" என்ற ஜகந்நாதன் மெல்லக் காரிலிருந்து இறங்கி, இன்ஜின் மூடியைத் திறந்து அதில் ஏதேதோ பழுது பார்க்க முற்பட்டார்.

வசந்தி பரபரக்கும் விழிகளுடன் தீப்பெட்டியில் குச்சிகளை உரசி உரசி அவருக்கு வெளிச்சம் காண்பித்துக் கொண்டிருந்தாள். 'இங்கே காட்டு; அங்கே காட்டு' என்று அவளுடைய கையைப் பிடித்து ஜகந்நாதன் அங்குமிங்கும் திருப்பிக் கொண்டிருந்தாரே தவிர இன்ஜினைப் பழுது பார்ப்பதில் அவர் அவ்வளவாகச் சிரமம் எடுத்துக் கொள்ளவில்லை. கடைசியில் தீப்பெட்டியிலிருந்த குச்சிகளெல்லாம் தீர்ந்தனவே தவிர, கார் ரிப்பேராகிக் கிளம்பும் வழியாகத் தெரியவில்லை.

மணியும் ஒன்பதரை ஆகிவிட்டது!

"மணியாகிறது, ஸார்! மணியாகிறது, ஸார்!" என்று பரபரத்துக் கொண்டிருந்த வசந்தி, "என்ன ஸார் காரை இப்படி நிறுத்திவிட்டீர்கள்! சீக்கிரம் கிளப்புங்கள் சார்!" என்று கோபிக்காத குறையாகக் குமுறினாள்.

"நானென்ன பண்றது? 'ஸ்டார்ட்' ஆகமாட்டேன் என்கிறதே? மேலும் நானென்ன கைதேர்ந்த கார் மெக்கானிக்கா?" என்று கேட்டார் ஜகந்நாதன் கிண்டலாக.

"ஒருவேளை தள்ளினால் 'ஸ்டார்ட்' ஆகுமா ஸார்?" என்ற வசந்தி "நான் வேண்டுமானால் காரைத் தள்ளுகிறேனே!" என்று கெஞ்சினாள்.

"நீ ஒருத்தி மட்டும் தள்ளினால் இவ்வளவு பெரிய கார் ஓர் ஊசிமுனை அளவுகூட நகராது! மேலும் 'கட்-அவுட்'டில் ஏதோ மிஸ்டேக் ஆகி, பாட்டரி கரண்ட் எல்லாம் 'டிஸ்சார்ஜ்' ஆகிவிட்டது! இனி எத்தனை பேர் சேர்ந்து தள்ளினாலும் சாமானியத்தில் 'ஸ்டார்ட்' ஆகாது!"

"அப்போ?..."

"பொழுது விடிந்த பிறகு, உன் அதிர்ஷ்டவசமாக ஏதாவது லாரி இந்

தப் பக்கம் வந்து அந்த லாரி டிரைவரின் உதவியாலும், லாரி பாட்டரியின் கரண்டினாலும்தான் நம்முடைய காரை இங்கிருந்து கிளப்பிச் செல்ல முடியும்!'' என்றார் ஜகந்நாதன் அழுத்தந் திருத்தமாக.

அதை அவர் சொன்ன தொனியும், அவருடைய பார்வைகளின் சதுராட்டத்தையும் கவனிக்கும்போது அவர் வேண்டுமென்றேதான் நடுவழியில் இப்படிக் காரை ரிப்பேர் ஆக்கி நிறுத்தி விட்டாரோ என்றுகூட வசந்திக்குத் தோன்றியது.

உடனே வசந்தியின் உடம்பெல்லாம் வெடவெடவென ஆடியது.

அவள் மெல்லச் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

கார் நின்றிருந்த இடம் அமானுஷ்யமான பிராந்தியமாகவும், சுற்றிலும் சுத்தப் பொட்டல் காடாகவும் தோன்றியது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை நிலா வெளிச்சமும் ஆங்காங்கே ஒற்றைப் பனை மரங்களும் தெரிந்தனவே தவிர, மனித அரவமே தட்டுப்படவில்லை. அருகில் குடிசைகளோ, சற்றுத் தொலைவிலாவது ஏதேனும் கிராமம் இருக்கும் சுவடுகளோ எதுவும் கண்களுக்கு அகப்படவில்லை. இனி அந்த ரஸ்தா வழியாக பஸ் எதுவும் வராது என்றும் தோன்றியது. ஒருவேளை மாட்டு வண்டியோ, லாரியோ ஏதேனும் வந்தாலும் அதை அவளால் நிறுத்தவோ, அதில் அவள் தனியாக ஏறித் தன் வீட்டுக்குப் போய்விடலாம் என்று நினைக்கவோ முடியாது!

வசந்திக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. திக்குத் தெரியாத காட்டில் சிக்கிக்கொண்டவளைப் போலவே அவள் தத்தளித்து நின்றாள்.

''என்ன வசந்தி! என் மீது உனக்குக் கோபம் கோபமாக வருகிறதா?'' என்று டாக்டர் ஜகந்நாதன் வெகு அமைதியாகக் கேட்டார்.

''ஆமாம், சார்! இப்படிக் காரைக் கொண்டு வந்து இருட்டு நேரத்தில் நடுக் காட்டில் நிறுத்துவீர்கள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!'' என்று வசந்தி படபடத்தாள்.

''நானா காரை நிறுத்தினேன்? அது தானாகவே நின்று தகராறு பண்ணுகிறது!''

''இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்!''

''எதிர்பாராதது நடக்கும்போதுதான் 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொள்ளத் தெரிய வேண்டும்! அதுதான் புத்திசாலித்தனம்!''

''ஆனாலும்...'' என்று வசந்தி தன் குரலையே மென்று விழுங்கினாள்.

''ஆனாலென்ன? ராத்திரிக்குள் உன் வீட்டுக்கு நீ போய்ச் சேராவிட்டால் உன் அப்பா அம்மாவுக்கு என்ன பதில் சொல்வதென்று யோசிக்கிறாயா?''

''ஆமாம், சார்!''

''அதற்கு உனக்கா தந்திரமாகப் பதில் சொல்லத் தெரியாது? உன் சிநேகிதியோடு நீ சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்ததில் கடைசி பஸ்ஸைத் தவற விட்டுவிட்டதாகவும், அப்புறம் உன் சிநேகிதி ரொம்ப வற்புறுத்தியதால் அவளுடைய ரூமிலேயே தங்கி விட்டதாகவும் வெகு அழகாகப் பதில் சொல்லிவிடுவாய்!''

''அப்படிச் சொன்னால் மட்டும் போதுமா சார்?''

''போதாது! போதாது! 'என்மீது நம்பிக்கையில்லையா?' என்று சீறி விழுவாய்! இல்லாவிட்டால் நீ கோபித்துக் கொண்டு விடுவாய்! முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருப்பாய். அதைப் பார்த்து உன் அப்பா அம்மாவுக்கு மகா கஷ்டமாக இருக்கும்! அப்புறம் உன்னைச் சமாதானப்படுத்தி மத்தியானமோ சாயந்திரமோ உன்னைச் சாப்பிட வைக்க அவர்கள்தான் அரும்பாடு படவேண்டியிருக்கும்!'' என்றார் ஜகந்நாதன்.

வசந்தி தன் உதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டாள். தன் மனப் போக்குகளையெல்லாம் அப்படியே படம் பிடித்தது போல் ஜகந்நாதன் சொல்லுகிறாரே என்று நினைத்தாள். அப்படியென்றால்... அப்படியென்றால்... அதற்கு மேல் எதையும் நினைக்கவே அவளுக்கு அந்தத் தனிமையான இரவில் பயமாக இருந்தது.


''வசந்தி! உனக்குப் பயமாக இருக்கிறதா?''

''ம்...'' என்றாள் வசந்தி கரகரக்கும் குரலில்.

''இந்த நடுக் காட்டையும், இரவையும் நினைத்துப் பயப்படுகிறாயா? அல்லது என்னோடு தனியாக இருப்பதை நினைத்துப் பயப்படுகிறாயா?''

அதற்கு வசந்தியால் பதில் சொல்ல முடியவில்லை. இளம் உதடுகள் லேசாக நடுங்கின.

''என்னோடு தனியாக ஒரு மாதம் இருப்பதென்றாலும் உனக்குப் பயமே இராது என்று நீ முன்பு சொன்னாயே?'' என்று கேட்ட ஜகந்நாதன் பால் போன்ற நிலா வெளிச்சத்தில் வசந்தி



மூட்டைப்பூச்சிகளுக்கு சாக்ஷாத் யமன்



டால்ப்

டால்ப் சக்திவாய்ந்தது. உபயோகிக்கச் சுலபமானது. சிக்கனமானது. ஒவ்வொரு பாட்டலிலும் ஐந்து முழு ஸ்ப்ரே டப்பாக்களிலோ அல்லது சிகரெட் டப்பாக்களிலோ நிரப்பக்கூடிய கரைசலுக்குப் போதுமான அளவு டால்ப் இருக்கிறது.

ஸ்ரீவிநியோகஸ்தர்கள்: ஜாப்ரே மேனர்ஸ் அண்ட் கோ. லிட்.

யின் பசுமையான அழகை யெல்லாம் உற்று உற்றுப் பார்த்தார்.

வசந்தியால் பதிலே சொல்ல முடிய வில்லை. தலை குனிந்து நின்று கொண்டு இன்னும் அதிகமாக நடுங்கினுள். முன் பொரு சமயம் ஜகந்நாதன் அவளிடம் 'என்னை அவ்வளவு தூரத்துக்கு ஜடம் என்று நினைக்கிருயா? அல்லது கோழை என்று நினைக்கிருயா வசந்தி! அழகான ஒரு பெண்ணேடு தனித்திருக்கும் போது எப்பேர்ப்பட்ட கோழையும் மகா பலசாலியாகி விடுவான்! இது இயற்கை விதி!' என்று சொன்ன தத்துவ வாசகம் இப்போது அவ ளுடைய நினைவில் வந்து உறுத்தியது. தனிமையின் சூழ்நிலையை அதிகம் உணர்த்துவது போல் பொட்டல் காட்டில் பொழியும் நிலா வெளிச்சமும் சுற்றிலும் குடிகொண்டிருக்கும் நிசப்த மும், இரவின் ஜிலுஜிலு வென்ற வாடைக் காற்றும் வேறு அவளை வெகு வாக ஆட்டின.

உடனே ஒரு மூலையில் உட்கார்ந்து முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழவேண்டும் போலவும் அவ ளுக்குத் தோன்றியது: அதையொட்டி அவளிடம் ஒரு விம்மல் ஒலியும் லேசா கப் பிறந்தது.

''என்ன வசந்தி! ஓவென்ற அழவேண் டும் போல் இருக்கிறதா?''

''பின்னே என்ன சார்?'' என்று வசந்தி அழுகையை அடக்கிக்கொண்டு ஆத்திரத்தோடு பொருமினுள்.

''இம்மாதிரியான நிலையில் சாதா ரணமாகப் பெண்களுக்கு அழுகை வந்துவிடும். ஆனல் அழுகையோ பய மோதான் பெண்ணைப் பலஹீனப்படுத்தி விடும், அவளருகில் உள்ள ஆடவனை யும் பலஹீனப்படுத்திவிடும் என்பதை அவர்கள் உணர்வதேயில்லை! மேலும் உள்ளூறக் காதலோ, அல்லது வெளிப் படையாகப் பயமோ அழுகையோ உள்ள பெண்ணுல் ஓர் ஆடவனை எதிர்த்துப் போராட முடியாது; அவ னிடமிருந்து தப்பிவிடவும் முடியாது! இது ஒரு மனேதத்துவ நுட்பம்! ஆனல் வேண்டுமென்றே பயந்து அழும் பெண்கள் இதற்கு விதிவிலக்கு!'' என்ருர் ஜகந்நாதன்.

''உங்கள் மனேதத்துவமும் நீங் களும்!'' என்று வசந்தி தன் வாய்க் குள்ளேயே முனகினுள்.



ஸ்நோ, பவுடர், லிப்ஸ்டிக் இத்யாதி.... இவைகளையே அழகுச் சாதனங்கள் — காஸ் மெடிக்ஸ் — என்கிறேம். உலக யுத்தத்துக்கு முன்பு பிரிட்டிஷ் மக்கள் அழகுச் சாதனங் களுக்காகச் செலவிட்ட தொகை என்ன தெரியுமா? 7,000,000 பவுன்கள். 1932ல் அமெரிக்காவின் அழகுச் சாதனங்களின் பில் 120,000,000 டாலர்கள். 1946லோ 180,000,000 டாலர்கள்.

1930ல் அமெரிக்காவில் ஒரு விதமான வியாபார மந்தம் ஏற்பட்டது. அப்போது வேலையில்லாத பெண் டைப்பிஸ்ட்களுக்கும் வியாபாரங்களைக் கவனிக்கும் பெண்களுக்கும் இலவசச் சிங்கார நிலையங்கள் திறக்கப்பட் டன. காரணம் தாங்கள் கவர்ச்சிகரமாக இல்லை என்பதற்காகச் சில பெண்கள் தற் கொலை செய்துகொண்டார்களாம்.

யுத்த காலத்தில் இங்கிலாந்தில் பெண் களை இயந்திரப் பீரங்கித் தொழிற்சாலை களில் வேலை செய்ய வருமாறு செய்வதற்கு ஒரு தந்திரம் செய்தார்கள். இலவசமாக முகப்பவுடர், ரோஜ், லிப்ஸ்டிக் ஆகியவை களை வழங்குவதாக விளம்பரப்படுத்தினூர்கள். இதற்கு நேர்மாருக ரேடியோ தொழிற்சாலை யில் வேலை செய்யும் பெண்கள் முகப் பவுடர் போட்டுக் கொண்டு வரக் கூடாது என்று கூறி இதற்காக (பவுடர் போடாமலிருப்பதற்காக) அதிகப்படியான சம்பளம் கொடுத்தார்கள். ஏன் தெரியுமா? ரேடியோவின் சில பாகங்கள் மிக நுண்ணிய புழுதிகளையும் கிரகிக்கும் சக்தி (Dust Sensitive) பெற்றவை.

கன்னி ராணி எலிஸபெத் தனது முகத்தை ஒயின் கொண்டுதான் கழுவுவாளாம். ஆனல் ஸ்காட்லாந்து ராணி மேரியின் செய்கையைப் பார்க்கும்போது எலிஸபெத் சிக்கனக்காரி என்றுதான் கூறவேண்டும். மேரி குளிப்பதே ஒயின் நிரப்பிய தொட்டிக்குள் இறங்கித் தான்!

ஹாலிவுட்டின் மிகப் பிரபலமான மேக்கப் நிபுணரும், அழகுச் சாதனங்கள் தயாரிப்ப வருமான மாக்ஸ் பாக்டர், ஒரு முத்தமிடும் யந்திரத்தைத் தயாரித்திருக்கிருர். இதன் அதரங்கள் ரப்பரினுல் ஆனவை. தாங்கள் தயாரிக்கும் லிப்ஸ்டிக்குகள் உபயோகத்தில் இருக்கும்போது எத்தனை நேரம் நிறம் கெடா மல் இருக்கிறது என்பதை இந்த யந்திரத்தின் ரப்பர் இதழ் மூலம் முத்தமிடச் செய்து சோதித்துப் பார்க்கிருர்களாம்!

சில நிமிஷங்கள் பல யுகங்கள் போல் மௌனத்தில் கழிந்தன.

''வசந்தி! தயவுசெய்து நீ அழுது விடாதே!'' என்று ஜகந்நாதன் கெஞ்சினார். அப்படி அவர் கெஞ்சியது வேண்டுமென்றே வசந்தியை அழவைத்துப் பார்க்க வேண்டுமென்று விரும்புவது போலிருந்தது.

''நான் அழுதால் உங்களுக்கென்ன ஸார்?''

''எனக்கென்னவா? தன்னோடு தனியாக வந்திருக்கும் ஒரு பெண் குலுங்கிக் குலுங்கி அழுகிறாள் என்றால் ஆடவனால் சும்மா இருக்க முடியுமா? அழும் பெண்ணைச் சமாதானப்படுத்த வேண்டுமென்று தவிப்பான். அவளுடைய முகத்தைத் தொட்டுத் திருப்பி அவளுடைய கண்ணீரைத் துடைக்கவும் முயல்வான். அப்போது நிலா வெளிச்சத்தில் அவளுடைய அழகான முகம் கண்ணீரோடு கண் மையும் கரைந்து வழியும் கருவிழிகளும், அழுகையின் பலஹீனமான தோற்றமும் அவன் மனத்தைப் பெரிதும் குழப்பும். அப்புறம் அது எதில் போய் முடியுமோ அவனுக்கும் தெரியாது; அவளுக்கும் தெரியாது. ஆனால் இப்படியெல்லாம் நான் நடந்து கொள்வேன் என்று எதிர்பார்க்காதே. அழுகிற 'பெண்களைக் கண்டாலே நான் காத தூரம் ஓடிவிடுவேன்! ஏனென்றால் அந்த அழுகையே என்னை ஆதிக்கக்காரனாக்கிக் கடைசியில் அவளுக்கே என்னை அடிமையாகவோ, உடைமையாகவோ ஆக்கிவிடும்!''

இதை வேறொருவர் சொல்லியிருந்தால் வசந்தி பளாரென்று அறைந்துவிட்டு விடுவிடுவென நடந்திருப்பாள். ஆனால் ஜகந்நாதன் சொன்னதால் அவள் மௌனமாக நிலா வெளிச்சத்தில் அவரையே குறுகுறுவெனப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

''ஆகவே வசந்தி! இது மாதிரியான சூழ்நிலையில் பெண் நிர்ப்பயமாகச் சிரிக்க வேண்டும்! அதுதான் எந்த ஆடவனையும் பயந்து ஒதுங்கச் செய்வதற்குச் சரியான ஆயுதம்! மேலும் சிரிப்பு என்பது அறிவையும் இருதயத்தையும் விரிவடையச் செய்து அதிக ஆக்கம் தரும். அழுகையோ உணர்ச்சிகளைத் தான் அதிகம் கிளறிவிடும்! உதாரணமாக உணர்ச்சிகளை வென்ற மகான்களைப் பார்! அவர்களின் முகங்களிலே எப்போதும் சிரிப்புத் தவழ்வதன் ரகசியம் இதுதான்! அத்தகைய சிரிப்புத்தான் உன் முகத்திலும் எப்போதும் தவழ வேண்டும். பெண்களிடம் அது தான் எனக்கு மிகவும் பிடிக்கும்!'' என்றார் ஜகந்நாதன்.

அவர் இப்படித் தத்துவ உபதேசம் செய்வதற்குத்தான் வேண்டுமென்றே காரை 'ரிப்பேர்' ஆக்கி நடு வழியில் நிறுத்தியிருக்கிறாரோ என்று கூட வசந்திக்குத் தோன்றியது.

''ஸார்! இப்போது உங்கள் காரை ஓட்ட வைக்க முடியாதா?''

''ஊஹூம்! பொழுது விடிந்த பிறகுதான் அதைச் சரிசெய்ய வேண்டும்!''

''அதுவரை இங்கேதான் நிற்கவேண்டுமா?''

''ஏன் நிற்கிறாய்? நீ போய் நிம்மதியாகத் தூங்கு!''

''எங்கே போய்த் தூங்குவது?''

''இப்போதைக்கு நம் கார்தான் நமக்கு வீடு!'' என்று சிரித்த ஜகந்நாதன், ''நீ பின் ஸீட்டில் ஏறிப் படுத்துக்கொள்'' என்றார் அமைதியாக.

''கார் ஸீட்டிலா?''

''கார் ஸீட்டில் மட்டுமல்ல, கட்டாந் தரையிலும் படுத்துத் தூங்க மனிதன் பழகிக் கொள்ள வேண்டும்! பட்டினத்தார் குப்பைமேட்டிலும் படுத்துத் தூங்கியிருக்கிறாராம். இந்தக் காலத்தில் ரஸ்தா ஓரங்களில் குவிந்திருக்கும் சரளைக் கற்கள் மீதுகூடப் பிட்சாதிபதி மட்டுமல்ல, லட்சாதிபதியும் படுத்துறங்கப் பழகிக்கொள்ளுவது நல்லது. இல்லாவிட்டால் தன் தேகத்தின் தேவைகளுக்கே மனிதன் அடிமைப்பட்டுப் போவான்!'' என்ற ஜகந்நாதன் புன்முறுவலுடன் வசந்தியை நோக்கி, ''ஆனால் வசந்தி! என் காரில் இருப்பது குஷன் ஸீட்! அகலமாகவும் இருக்கும்! தூக்கம் வராவிட்டால் நீ தாராளமாகப் புரண்டு புரண்டு கூடப் படுக்கலாம்!'' என்றார்.

''நான் கார் ஸீட்டில் படுத்துத் தூங்க மாட்டேன்!'' என்றாள் வசந்தி.


''அப்படியானால் கொட்டக்கொட்ட விழித்துக் கொண்டே இரு! காருக்கும் காவலாக இருக்கும்! ராத்திரியில் லாரி ஏதாவது தப்பித் தவறி வந்தாலும் அதை நீ நிறுத்தலாம்! நான் நிம்மதியாகத் தூங்குகிறேன்!'' என்றார் ஜகந்நாதன்.

வசந்தி வெடுக்கென்று அவரை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் ஜகந்நாதனின் முகத்தில் விளையாடும் சிரிப்புக்கு முன்னால் அவளுடைய கோப பாவம் நிற்க முடியவில்லை.

''சரி; பேபி! அனாவசியமாக முரண்டு பிடிக்காமல் பின் ஸீட்டுக்குப் போ!'' என்ற ஜகந்நாதன் தம் 'கோட்'டைக் கழற்றினார்.

(தொடரும்)


SUNLIGHT
Soap



சண்டிகரில் சண்டி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

'**ப**ழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது ஓர் இலக்கணச் சூத்திரம். இலக்கியம், கலை என்பதில் ஒரு மரபு உண்டு. அம்மரபுக்கு விரோதமாக எழுதுவதோ, பேசுவதோ, செதுக்குவதோ மக்களால் போற்றப்பட மாட்டாது. என்றாலும் இந்த மரபையும் மீறிக் காலத்துக்கு ஏற்ற வகையில் இலக்கிய வளம் மாறுபாடு அடைவதுண்டு. வழக்கொழிந்த சொற்களை ஒதுக்கிவிட்டு மக்கள் நாவில் நின்று நடமாடும் சொற்களை வைத்தே சிறந்த இலக்கியங்களைப் படைக்க முடியும் என்று அமரகவி பாரதி காட்டிவிட்டில்லையா? அதே போலக் கட்டிடக் கலையிலும், தமிழகத்தில் பல்லவர் பாணி, சோழர் பாணி, நாயக்கர் பாணி என்னும் பகுதிப்பட்ட பாணிகள் இருப்பது தெரியும். அடிப்படை மரபுக்கு முரண் இல்லாத வகையில் காலத்துக்கேற்ற முறையில் புதிய பாணிகளை உருவாக்கும் திறன் இந்திய மக்களிடையே, கலைஞர்களிடையே என்றுமே இருந்து வந்திருக்கிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி சுதந்திர யுகமாக இருக்கிறது.

பல வருஷங்களாக ஆங்கில ஆட்சியின்கீழ் அடிமை நாடாக இருந்த நமது பாரதம் சுதந்திரம் பெற்றது. இன்னும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் பல தங்கள் தங்கள் அடிமைத் தளைகளை உதறிவிட்டுச் சுதந்திர நாடாக இயங்கத் தொடங்கி யிருக்கின்றன. 'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு' என்ற முழக்கமே எங்கும் கேட்கிறது. பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், தனி மனிதன் சுதந்திரம் என்றெல்லாம் சுதந்திர உணர்ச்சியோடு மக்கள் வாழ்கின்றனர். கலை உலகிலும் இந்தச் சுதந்திர மறுமலர்ச்சியைப் பார்க்கிறோம். கட்டிடக் கலையிலும், நகர நிர்மாணத்திலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். குறுகிய வீதிகள் மறைந்து அகன்று பரந்த வீதிகள் தோன்றி யிருக்கின்றன. வாயில்களுக்கு மேலே உள்ள கதவுகள் மறைந்திருக்கின்றன. சன்னல்களைச் சுற்றித் தடுகள் அமைத்து அதன் மூலம் சூரிய ஒளியையே உடைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அதன் ஒளி வர வகை செய்திருக்கிறார்கள். நிரம்பச் சொல்வானேன்; கட்டிடங்களின் மாடிகளுக்கு ஏறப் படிக்கட்டுகள் இல்லாமல் பாதையை ஒரு 'ஸ்லோப்' கொடுத்து அமைத்துச் சிறிதும் சிரமம் இல்லாமல் மாடி ஏற வகை செய்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் எங்கு ஐயா நடக்கிறது என்றுதானே கேட்கிறீர்கள். அப்படிப் பழைய மரபுகளை ஒதுக்கிப் புதியதொரு சுதந்திர மரபை உருவாக்கிக் கட்டிய கட்டிடங்களையும், நகர அமைப்புக்களையும் கொண்டது இன்றைய பஞ்சாபின் தலைநகரமான சண்டிகர் என்னும் பட்டணம்.

சண்டிகர் செல்ல நான் வழி சொல்ல வேண்டியதில்லை. ஒரு பெரிய ராஜ்யத்தின் தலைநகருக்கு வழி நான் சொல்லியா தெரிய வேண்டும்? டில்லியிலிருந்து சிம்லா செல்லும் வழியில் அம்பாலாவுக்கும் கால்காவுக்கும் இடையில் இருக்கிறது. டில்லியிலிருந்து ரயிலில் போகலாம். விமானம் மூலமாகவும் போகலாம். ரோடு வழியே காரில் போகிறவர்கள் என்றால் அம்பாலா — கால்கா பெரு வழிப் பாதையிலிருந்து பிரிந்து செல்லும் அம்பாலா - ரூபர் ரோட்டில் நான்கு மைல் செல்ல வேண்டும். சண்டிகரிலிருந்து அம்பாலா, சிம்லா முதலிய முக்கியமான நகரங்களை இணைக்க நல்ல ரோடுகள் போட்டிருக்கிறார்கள். இந்தியா — பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டபோது பாகிஸ்தான் எல்லையில் இருந்த மக்கள் பலர் இந்தியாவை நோக்கி ஓடி வந்தனர். இந்த அகதிகளுக்கு வாழ இடம் தேடிக் கொடுக்க வேண்டி யிருந்தது. அதோடு பஞ்சாபின் பழைய தலைநகரான லாகூர், பாகிஸ்தானுக்குப் போய்விட்டதன் காரணமாக இந்தியாவுடன் இணைந்து நின்ற பஞ்சாப் பகுதிக்கு ஒரு தலைநகர் நிர்மாணிக்க வேண்டிய அவசியமும் இருந்தது. அப்போது தான் இப்போது சண்டிகர் என்னும் தலைநகரம் அமைந்திருக்கும் இடத்தை ஆம், பதினைந்து சதுரமைல் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தனர் அரசாங்கத்தார். சண்டிகரை அடுத்த ரூபர் என்னும் இடத்தில் புதைபொருள் ஆராய்ச்சி நடத்தியபோது அங்கு மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களைப் போல் ஒரு பெரிய நகரமே புதைந்து போயிருக்கிறது என்றும் தெரிந்தது. ஆம்! ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த இடத்தில் இந்தச் சண்டிகர் நகரம் என்னும் புதிய தலைநகரம் நிர்மாணிக்கப்பட்டது என்றால் அது சரித்திரப் பிரசித்தி உடையதுதானே! இந்தப் பிரதேசத்துக்குச் சண்டிகர் என்று பெயர் அமைப்பானேன் என்றுதானே கேட்கிறீர்கள். ஆம்! வட—

நாட்டின் பிரதான தேவதை காளி என்பதை அறிவோம். காளி கட்டம்தானே இன்றைய கல்கத்தா. இந்தக் காளியையே சாமுண்டி, சண்டி, ஷியாமளா என்ற பல பெயரில் வழிபட்டு வந்திருக்கிறார்கள். சண்டிகரையடுத்த ஒரு சிறு மலைத்தொடரில் சண்டி தேவிக்கு ஒரு கோயில் அமைத்து வழிபட்டிருக்கின்றனர் மக்கள். அந்தச் சண்டி தேவியின் அருள் நிழலில் அமைக்கப்பட்ட நகரமானதால் 'சண்டிகர்' என்ற பெயரோடு இந்த நகரம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

சண்டிகர் சென்றதும் நாம் முதலில் அதிசயித்து நிற்பது அதன் அகலமான வீதிகளைப் பார்த்தேதான். அந்த நகரில் ஏழு விதமான வீதிகள் இருக்கின்றன. இதில் சிறப்பானது விரைவாகச் செல்லும் கார்களுக்கு என்று அமைக்கப்பட்டிருக்கும் பெரிய வீதிகளே. இந்தப் பெரு வீதிகளிலேதான் டவுன் பஸ்ஸும் போகிறது. பிரயாணிகள் அதிக நேரம் காத்து நிற்காத வகையில் அடுத்தடுத்து பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கும். மெதுவாகச் செல்லும் வண்டிகளுக்கு என்று தனிப்பாதை. சைக்கிளில் செல்பவர்களுக்கு என்ற ஒதுக்கப்பட்ட பாதைகளும் உண்டு. புதிதாக அமைக்கும் நகரத்தின் பாதை அமைப்பு மனித உடலில் ஓடும் ரத்தக் குழாய்கள் போன்றது. ஆகவே அவைகளின் அமைப்பிலும், அவைகளைப் பாதுகாப்பதிலும் மிக்க கவனம் செலுத்தப்பட வேண்டும். அந்த அக்கறை இந்த நகரத்தில் காட்டப்படுகிறது.

இனி இங்குள்ள கட்டிடங்கள், மக்கள் குடியிருக்க வீடுகள், சர்க்கார் காரியாலயங்கள், அமைச்சகக் கட்டிடங்கள், மக்கள் பொழுதுபோக்க அமைந்த உத்தியானவனங்கள், சினிமாக் கொட்டகைகள், இன்னும் பல பண்டம் வாங்க அமைந்த கடைத் தெருக்கள் என்று பல வகையான கட்டிடங்கள். இங்கு சர்க்கார் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். சர்க்கார் சேவகனாக வேலை பார்க்கும் ஒவ்வொரு சப்ராசிக்கும் தனித் தனி வீடு என்றால் அதிகம் சொல்வானேன்? வீடுகள் என்றால் ஓலைக் குடிசைகளா? இல்லை. எல்லாம் நல்ல சிமெண்டு காரைக் கட்டிடங்கள்.

எல்லாரும் எல்லாப்
பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும்
இல்லை மாதோ!

என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் அன்று பாடினானே, அவன் கண்ட ராம ராஜ்யத்தைப் பற்றி. அதுதான் இப்படி உருவாகிக் கொண்டிருக்கிறதோ என்று தோன்றும்.

இன்னும் ஹைகோர்ட், சட்டசபைக் கட்டிடம், செக்ரட்டேரியட் என்னும் சர்க்கார் காரியாலயம் பிரம்மாண்டமான கட்டிடங்கள். எல்லாம் இரும்பும் சிமெண்டும் கொண்டு செய்த அற்புத சாதனைகள். இவற்றில் சன்னல் அமைத்திருக்கும் அழகே தனி. அவற்றையே 'ஸன் பிரேக்கர்ஸ்' என்ற புதிய பாணி என்கின்றனர். இன்னும் சில கட்டிடங்களின் சுவர்களில் குன்றுக் கற்கள் அப்படி அப்படியே வைத்துக் கட்டி, அதன் பேரில் பூச்சு இல்லாமலும் விட்டிருக்கிறார்கள். அது கொஞ்சம் கரடுமுரடான வேலைதான் என்றாலும் பார்ப்பதற்கு அழகாகவே இருக்கிறது. எதையும் அழகு செய்தல் கூடும் என்று காட்டும் திறன் இந்தக் கட்டிடக் கலை நிபுணர்களிடம் இருந்திருக்கிறது.

என்ன, பாதைகளையும், கட்டிடங்களையும் பற்றியுமே சொல்லிக் கொண்டிருக்கிறீரே, இங்கே கோயில்கள் ஒன்றுமே கிடையாதா என்று கேட்கிறீர்களா? நகரத்தின் மத்தியில் மருந்துக்குக்கூட ஒரு கோயிலைக் காணோம். ஆலமரத்தடி விநாயகரோ, அல்லது அரசமரத்தடிப் பிள்ளையாரோ அங்கு எழுந்தருளவில்லைதான். என்றாலும் ஊருக்கு வடமேற்காக உயர்ந்திருக்கும் ஒரு சிறு குன்றின்பேரில் நான் முன்னரே சொன்ன சண்டி என்னும் மகா காளிக்கு ஒரு கோயில் இருக்கிறது. கோயில் என்னவோ வடிவத்தில் சிறிய அளவில் இருக்கிறது. கோயிலே ஒரு சிகரம் அழகு செய்கிறது. அந்தச் சிகரத்தைச் சுற்றிப் பலப் பல சிகரங்கள் அமைந்திருப்பது போல் ஒரு தோற்றம். கோயிலுக்குள் கருத்த அன்னையாம் காளி இருக்கிறாள். வீரம் மிகுந்த பாஞ்சால தேசத்து மக்கள் வணங்கும் காளி காண்பதற்குப் பயங்கரியாகவும் இல்லை; அலங்காரியாகவும் இல்லை. சுற்றிலும் புதர் மண்டிக் கிடக்கிறது. இது புதிய நகர நிர்மாணிகளால் கட்டப்பட்டதில்லை. முன்னமே கட்டப்பட்ட சிறிய கோயில். இங்கு வருவார் போவாரும் அதிகம் இல்லை. இன்றைய பஞ்சாபின் தலைநகருக்குப் பெயர் கொடுத்த பெருமை தவிர அதற்கு வேறு பெருமை இருப்பதாகத் தெரியவில்லை.

இங்கிருந்து கால்கா செல்லும் பாதையில் பதின்மூன்று மைல் வடக்கு நோக்கிச் சென்றால் நாம் பிஞ்சோர் தோட்டம் என்னும் இடத்துக்கு வந்து சேருவோம். இந்தத் தோட்டம் முகலாய மன்னர்களால் அமைக்கப்பட்டதாகும். இந்தத் தோட்டத்தை ஆதர்சமாக வைத்தே ராஷ்டிரபதி பவனில் உள்ள 'மொகல் கார்டன்' அமைக்கப்பட்டதென்கின்றனர். கண்கவர் வனப்புடைய தோட்டம் அது. எங்கு பார்த்தாலும் பசுமை. மலர்களோ பூத்துக் குலுங்கும். லாகூரோ அல்லது காஷ்மீரோ சென்று அங்குள்ள ஷாலிமார், குல்மார்க் தோட்டங்கள் முதலியவைகளைக் காணும் வாய்ப்பு இல்லாதவர்கள் இந்தத் தோட்டத்தைப் பார்த்தால் திருப்தி அடையலாம். சிற்றுண்டி உடன் எடுத்துச் சென்றிருந்தால், அங்குள்ள அழகான சூழ்நிலையில் அவற்றை அருந்தி ஆனந்திக்கலாம். இங்கிருந்து பத்துப் பதினைந்து மைல் தொலைவிலேதான் கால்கா என்னும் இடம் இருக்கிறது. அதுவரை சாதாரண ரயில் சென்று அதன் பின்னர் 56 மைல்கள் மலைமீது செல்லும் ரயிலிலோ, அல்லது காரிலோ சிம்லா என்னும் மலை வாசஸ்தலம் செல்ல வேண்டும். கால்கா என்ற பெயரிலிருந்தே தெரிந்திருப்பீர்கள், அதுவும் ஒரு காளியின் தலம்தான் என்று. ஆம்! அங்கும் ஒரு சிறு காளி கோயில் உண்டு. காளிகா என்பதே கால்கா என்று வழங்குகிறது. வேறு சிறப்பாகக் கூற ஒன்றும் கிடையாது.

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ். பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B.P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்தபோதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்தமட்டில் மிகவும் முக்கியம். ஏனென்ருல் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினுல் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்ருடம் 'மந்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிருர்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மந்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்ட்டின் & ஹாரிஸ் பிரை. லிட்.
ரிஜிஸ்டர்டு ஆபீஸ் மெர்கண்டைல்
பில்டிங்ஸ், லால் பஜார், கல்கத்தா-1
பம்பாய் - புது தில்லி - சென்னை

M/P11

TA



காவலன்

எம். வி. வெங்கட்ராம்

மண்டியிட்டு வணங்கிய சுருதாவதி, "ஸ்வாமி! தங்கள் திருவடி தீண்டி இந்தக் குடிசை புனிதமாயிற்று. இந்த ஆசனத்தில் எழுந்தருளுங்கள்" என்றாள் பணிவாக.

அவளையே கூர்ந்து நோக்கியவாறு சுகாசனமிட்டு அமர்ந்தார் வசிஷ்டர். வெண்மையான முடிக்கும் தாடிக்கும் பின்னிருந்து அவளைப் பார்த்த விழிகளில் இளமையின் குதுகுதுப்பு விளையாடுவதை அவள் கவனித்தாள்.

"கட்டளைக்குக் காத்திருக்கிறேன், ஸ்வாமி!"

வசிஷ்டர் சிரித்தார்: "எனக்கு வேண்டியதைச் செய்ய உன்னால் முடியுமா?"

"என் உடலையும் உள்ளத்தையும் தங்களுக்கு வழங்க என்னால் முடியாது. வேறு எதைக் கொண்டும் தங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறேன்."

"உன் உடலுக்கும் உள்ளத்துக்கும் என்ன நேர்ந்தது?" — ஒன்றும் அறியாதவர்போல் கேட்டார் மகரிஷி.

"முக்காலமும் அறிந்த மகாஞானியான தங்களுக்குத் தெரியாதா? இந்த உடலையும் உள்ளத்தையும் தேவர் பதிக்கு நிவேதனம் செய்து விட்டேன்."

"மகரிஷிகளில் ஸ்ரேஷ்டராகிய பரத்வாஜரின் மகள்; கன்னிப் பெண்; கல்யாணத்துக்காகக் காத்திருப்பவள்..."

"தேவராஜனையே மணப்பதென உறுதி கொண்டு, அதற்காகத் தவம் கிடக்கிறேன்; நோன்புகள் நோற்கிறேன், விரதங்கள் காக்கிறேன்...."

"ஹூம், அப்புறம்?"

"கணவராக வரித்துவிட்ட அவருக்காகவே மூச்சு விடுகிறேன், உணவு கொள்கிறேன், உடையும் அணிகிறேன்."

"சரியான வரனைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய். இந்திரன் நல்ல அழகன்; மதனனும் வசந்தனும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள்தானே?"

அதைக் கேட்டு வெட்கித் தலைகுனிந்தாள் சுருதாவதி. அவள் முகம் மிகவும் சிவந்தது. கண்கள் மிகக் களித்தன; இருதயம் மிகப் பூரித்தது.

வசிஷ்டர் மேலும் கூறினார்: "அமுத பானம் செய்கிறவன் அமரன். அமரர்களின் இறைவன். அழகிய அப்சரசுகளால் அர்ச்சிக்கப்படுகிறவன். அவனை அடைந்தால் நீ அதிர்ஷ்டசாலிதான். ஆனால் அவ்வளவு எளிதாக அவனை அடைய முடியுமா?"

"ஐயா! பலிக்காத தவமும் உண்டோ?"

"தவம் பலிக்கும். உண்மைதான். ஆனால் நாம் எதிர்பார்க்கிறபோது பலிக்கிறதில்லை என்பதும் உண்மைதானே? முக்தி வேண்டு

வோர். இந்தப் பிறவியில் இல்லாவிட்டாலும் எந்தப் பிறவியிலாவது விடுதலை பெறலாம் என்று நம்பித் தவம் இயற்றுகின்றனர். ஆனால் இப்பிறவியில் இப்போதே பலன் தர வேண்டியதாயிற்றே உன் தவம்?''

''என் லட்சியம் நிறைவேற நான் மட்டும் காத்திருக்கக் கூடாதா?''

''அது எப்படி? இந்தப் பெயரில் இந்த உடலோடு சுகம் காண வேண்டித்தானே உன் தவம்?''

''எந்தப் பெயரிலும், எந்த உடலோடும் நான் வரித்தவரை அடைய வேண்டித்தான் என் தவம் ஐயா.''

''குழந்தாய்! நான் கிழவன். இந்தப் பிரேமைத் தத்துவத்தின் குழப்பங்கள் எனக்கு விளங்குவதில்லை.''

''என்னைக் கேலி செய்யாதீர்கள்; ஐயா, ஆசீர்வதியுங்கள்.''

''என் ஆசி உனக்கு நிறைய உண்டு. எனக்குப் புரியப் பேசவில்லையே நீ. அடுத்த பிறவியில் மணம் புரிய இப் பிறவியில் தவமா?'' என்று மீண்டும் அவளைக் குறும்பாக உசுப்பினார் கிழவர்; ''தேவேந்திரன் கரம் பற்றிப் போக பூமிக்குப் போக விழையும் நீ, இந்த உடலுக்கு இன்பம் அளிக்க விரும்பவில்லையா? பின் எதற்காகத்தான் தவம் செய்து கொண்டே இந்த உடலையும் மிக விழிப்பாகப் பேணுகிறாய்...?''

பெரியவர், வீடு தேடி வந்த விருந்தாளி. அவள் வாயிலிருந்து பதில்களை வரவழைப்பதற்காகக் கேள்விகளால் கொட்டிக்கொண்டிருந்தார். இந்த விஷயம் பற்றி அவருடன் பேசவே அவளுக்கு நாணமாக இருந்தது. பேசாமலும் இருக்க முடியாது என்பதும் அவளுக்குத் தெரியும். அடக்கமாகவே மறுமொழி கூறினாள்: ''தாங்கள் சொல்வது ஓரளவு உண்மைதான். காத்துக்கொள்ள வேண்டியவைகளைக் காத்துக்கொண்டு, தவம் காலத்தில் பயன் தரும் என்ற நம்பிக்கையோடு வாழ்கிறேன். அடுத்த பிறவி, அதற்கு அடுத்த பிறவி என்று என் லட்சியம் எட்டிச் செல்வதானாலும் நான் காத்திருக்கக் கடமைப்பட்டவள்தானே?''

ஆழ்ந்து யோசிப்பவர் போல் வசிஷ்டர் பேசினார்: ''இந்தப் புதிர்தான் எனக்கு விளங்கவில்லை என்றேன். என் ஆயுளில் இளம் பருவத்தினர் பலரைப் பார்த்து விட்டேன். உன் நிலையில் விரும்பிய கணவர் பருவத்தில் கிடைக்கவில்லை என்று பெண்கள் ஆற்றாமைத் தீயில் பொசுங்குவதைப் பார்த்திருக்கிறேன். உன்னைப் போல் இப்படிப் புத்திபூர்வமாக ஒரு பெண் பேசி நான் கேட்டதில்லை. உன் விஷயத்தில் இதுதான் எனக்குப் புதுமை. தீயே இல்லாமல் ஒரு தவமா?''

''நான் கண்ணீர் விட்டுக் கதறவில்லையே என்று வியக்கிறீர்களா? ஐயா, தேவர்கோனை நான் இதயபூர்வமாக வரித்தேன். இப்போதே அடைய வேண்டும் என்பது என் ஆவல். காத்திருக்க நேர்ந்தால் அதுவும் என் தர்மம். சுவாமி! இந்த முடிவு இதயபூர்வமானதுதானே? இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் விரும்பியது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறபோது அழுவதற்கும் அரற்றுவதற்கும் காரணம் இல்லையே!''



பத்திரிகை ஆசிரியர்: நீங்க ஷேக் அப்துல்லாவை ஒரு நல்ல 'போஸ்' எடுத்திரே அதைக் கொண்டு வாங்க!

போட்டோ எடுப்பவர்: சாரி சார்! அது 'ஷேக்' ஆயிடுத்து சார்.

''நன்று!'' என்று வியப்பவர்போல் பேசினார் பெரியவர்: ''தவத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை... சரி, நான் நதிக்குச் சென்று நீராடிவிட்டு வருகிறேன். இந்த இலந்தை பழங்களை மட்டும் சமைத்து வை. எனக்கு வேறொன்றும் வேண்டாம். விரைவில் திரும்புகிறேன்.''

வசிஷ்டர் வெளிச் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றாள் அருந்ததி. அந்த மகான் தன் வாயை இவ்வாறு கிண்டிக் கிளறியது ஏன் என்பதை நினைக்க அவளுக்கு வியப்பாக இருந்தது. மறுநொடி, கடமைக்குத் தன்னை ஏவிக் கொண்டாள். சுள்ளிகளைத் திரட்டி நெருப்பு மூட்டினாள். பழங்களைக் கலத்திலிட்டு அடுப்பு மீது வைத்த பிறகு அவள் மனக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது.

வசிஷ்டர் சொன்னதன் பொருள்தான் என்ன? ஆசிரமத்துக்கு அதிதியாக வந்தவர் அவள் மனத்தைக் குறித்து இவ்வளவும் ஏன் பேசினார்?

அவர் எந்தக் காரணத்தை மனத்தில் வைத்துப் பேசியிருந்தாலும் அவளுடைய உறுதி மாறப் போவதில்லை.

அடுப்பு நன்றாக எரிந்து கொண்டிருந்தது. கலத்திலிட்ட கனிகள் வேகாததைக் கண்டு மேலும் சுள்ளிகளைப் போட்டுத் தீயைத் தூண்டினாள்.

தவவலியால் ஓங்கும் அமித்த அறிஞர் வசிஷ்டர். அவரே அவளுடைய அடக்கத்தை வியந்தாரே! அதை நினைத்த அவள் முகத்தில் பெருமிதமான ஒரு முறுவல் தோன்றியது.

சிந்தனை வயப்பட்டவளாகவே ஆசிரமத்திலிருந்த சுள்ளிகள் அத்தனையும் அடுப்பில் இட்டுவிட்டாள். நெருப்பும் அழகாக நாக்குகளை நீட்டி விளையாடியது. ஆனால் அது கலத்திலிருந்த கனிகளைத் தீண்டவேயில்லை

போதும்; அவை போட்டபடியே கிடந்தன. வேகாமல்!

சுருதாவதியின் கவனம் முழுவதையும் கனிகள் கவர்ந்தன. ஆசிரமத்துக்கு அருகில் கிடைத்த சுள்ளிகளை யெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து அடுப்பில் போட்டாள். சுள்ளிகள் திவ்வியமாக எரிந்தன. கனிகள் தான் வேகவில்லை!

இப்போதுதான் அவளைக் கவலை பிடித்தது. அதிதி தேவர் திரும்புவதற்குள் அவள் சமையலை முடிக்க வேண்டும். அவர் மனம் கோணாமல் ஒழுக வேண்டியது அவள் கடமை அல்லவா? வசிஷ்டர் சாந்த சொரூபி; சினந்து சபித்துவிட மாட்டார்; எனினும் அவர் அதிருப்தியுற்றால் அவளுடைய தவத்துக்கு அது ஒரு மாசு ஆகாதா?

என்ன செய்வது, என்ன செய்வேன் என்று பரபரப்புக் கொண்டாள். அடுப்பு நெருப்புச் சுள்ளிகளைத் தின்று - தீர்த்துவிட்டுத் 'தணி'வதைக் காண அவளுக்குத் 'திக்'கென்றது. தன் தவத்தின் பயனே தணிவது போன்ற அச்சம் ஏற்பட்டது. வசிஷ்டர் வருகிற நேரம் ஆகிவிட்டதை நினைக்க அவளுக்குத் 'திகீர்' என்றது; அடுப்பில் அவிந்துகொண்டிருந்த நெருப்பு அவள் அடிவயிற்றில் மூண்டது. எந்த நெருப்புக்கும் அந்தக் கனிகள் வேகவில்லை!

கனிந்த கனிகள்; இவ்வளவு நெருப்புக்கும் ஏன் வேகவில்லை? வசிஷ்டர் மிகவும் பெரியவர்; அவர் ஏதாவது சூழ்ச்சி செய்திருக்கக் கூடுமா? சூழ்ச்சியோ, சோதனையோ, தவம் ஊனம் ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதானே அவள் கடமை?

மனமுருக வரித்த தேவர்பதியை ஸ்மரித்தாள்.

''எனக்கு வழி காட்டுங்கள், பிரபு!'' என்று மிகவும் தீனமாகப் பிரார்த்தனை செய்தாள்.

'தவத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை' என்ற வசிஷ்டரின் குரல் அவளுக்குத் தெளிவாய்க் கேட்டது. ''என் தவத்துக்கே இழுக்கு ஏற்படும்போல் இருக்கிறதே!'' என்ற பீதி அவளுக்குள் உதைத்துக் கொண்டது.

''உன்னையொத்த பெண்கள் ஆற்றலைத் தீயில் பொசுக்குவது வழக்கம்... தீயே இல்லாமல் ஒரு தவமா?'' என்று அந்தப் பெரியவர் கூறியது அவளுக்கு நினைவு வந்தது.

அந்த ஞாபகத்தோடு அவளுக்கு வழியும் தோன்றி விட்டது!

நெருப்பு மேலும் அடங்கிக் கொண்டிருந்தது.

அந்த நெருப்பு அணையாத வகையில் மிக நிதானமாகவும் எச்சரிக்கையாகவும் அடுப்புக்குள் இடது காலை இட்டாள்; கின்னியிலிருந்த பசு நெய்யைச் சொரிந்தாள். அந்தக் காலில் தீப்பற்றிக் கொண்டதும் வலது காலையும் நெருப்பில் வைத்தாள்.

இரண்டு கால்களும் உற்சாகமாக எரிந்தன.

அதற்காகவே காத்திருந்தவர் போல், உள்ளே நுழைந்தார் வசிஷ்டர்.

''குழந்தை! என்ன இது? கால்களை எதற்காக இப்படி எரித்துக் கொள்கிறாய்? கால்களை வெளியில் எடு!'' என்று கூக்குரல் இட்டார் வசிஷ்டர்.

''கால்கள் பின்னப்பட்டதால் எழுந்து அஞ்சலி செய்ய முடியவில்லை. மன்னியுங்கள், சுவாமி! தாங்கள் கொடுத்த கனிகளை வேக வைக்கத்தான் கால்களை அடுப்பில் இட்டேன், இதோ, கனிகளும் வெந்துவிட்டன!''

''இது என்ன அக்கிரமம்! எனக்காகவே கால்களை எரித்ததாய்ச் சொல்கிறாயா?'' என்றார் வசிஷ்டர் சினமுற்ற குரலில்.

''இல்லை, எனக்காகவேதான் எரித்துக் கொண்டேன்....''

''உனக்காக எரித்ததாக எப்படிச் சொல்கிறாய்? பழங்களை நீ சாப்பிடப் போகிறாயா?'' அவளை அப்படியும் பேச விடாமல் மடக்கிப் பார்த்தார் முனிவர்.

''என் தர்மத்தைக் காத்துக்கொண்டால் தானே என் தவம் பலிக்கும்? அதிதியை மகிழ்விக்க வேண்டியது என் கடமை. தவம் சித்தி பெறவேண்டித்தான் என்னையே ஆகுதி ஆக்கிக் கொண்டேன்'' என்றாள் அந்தக் காதல் கோமகள்.

''நன்று, நன்று. நான்தான் பாக்கியவான்!'' என்ற கம்பீரமான குரல் புதியதாக, மிக இனியதாக ஒலித்தது.


சுருதாவதி நிமிர்ந்தாள்.

வசிஷ்டர் நின்ற இடத்தில் அவளுடைய லட்சியம் நின்றது: தேவதேவன் தேவலோகச் சக்கரவர்த்தி! இந்திரன்!

காதலுக்குக் கால்கள் முளைத்தன.

வில்லிலிருந்து விடுபட்ட பாணம் என அவள் அவனை நோக்கிப் பாய்ந்தாள்.

விசாலமான மார்பில் அழகான முகம் புதைந்தது.



துக்கடா

காஷியர் ஒருவருக்கு வேலை போய்விட்டது. வெகு நாட்கள் கழித்து அவரைச் சந்தித்த நண்பர், "ஏன் நண்பா! உனக்கு வேலை போய்விட்டதாமே, உனக்கும் முதலாளிக்கும் சரிக்கட்டி வரவில்லையா என்ன?" என்று கேட்டார்.

"அப்படியெல்லாம் இல்லையப்பா! அவர் தங்கமான மனிதர். அவரைப் பற்றி ஒரு வார்த்தை தவறாகச் சொல்வதற்கில்லை!"

"பின்னே?"

"நான் வைத்துக் கொண்டிருந்த பணத்துக்கும் கணக்குக்கும்தான் சரிக்கட்டி வரவில்லை!" என்றார் காஷியர்.

ஃ ஃ ஃ

மேரி: இந்தாருங்கள் உங்கள் மோதிரம். நான் உங்களைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை.

சாலமன்: ஏன்?

மேரி: நான் வேறு ஒருவரைக் காதலிக்கிறேன்.

சாலமன்: யார் அவன்?

மேரி: (பயந்து) ஏன் அவரை வஞ்சம் தீர்க்கப் போகிறீர்களா?

சாலமன்: இல்லே, இல்லே. இந்த மோதிரத்தை அவனுக்கு விற்றுவிடலாம் என்று பார்க்கிறேன்.

ஃ ஃ ஃ

"ஏன் பையா! இந்தப் பந்து உன்னுடையதா?" என்று கேட்டார் ஒருவர் அழகான பந்து ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு. பையனுக்கு அதை வாங்கிக்கொள்ள ஆசையாகவும் இருந்தது. இன்னொரு புறம் பயமாகவும் இருந்தது. "ஆமாம், உங்கள் வீட்டு ஜன்னல் கண்ணாடி — கின்னாடி உடைந்திருக்கிறதோ?" என்று தயங்கியவாறே கேட்டான்.

"இல்லை!" என்றார் அவர்.

சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு, "அப்படியானால் அந்தப் பந்து என்னுடையதுதான்!" என்றான் பையன்.

ஃ ஃ ஃ

"மாமா! உங்களுக்கு இன்னும் கல்யாணமாகவில்லையே!" என்று கேட்டாள் சிறுபெண்.

"இல்லையே, அம்மா!"

"அப்படின்னா எங்கப்பாவுக்கு எங்கம்மா சொல்லிக் கொடுக்கிறாப்பலே 'இதைச் செய்யலாம், இதைச் செய்யக் கூடாது'ன்னு உங்களுக்குச் சொல்லிக் கொடுக்க யாரும் இருக்க மாட்டாளே! உங்களுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்குமே!" என்றாள் சிறுமி.


ஃ ஃ ஃ

"இதோ பார்த்தாயா விமலா! பேப்பரில் ஒரு ருசிகரமான விஷயம் வந்திருக்கிறது!" என்றான் கிருஷ்ணன்.

"என்ன?" என்று கேட்டுக் கொண்டே அவன் அருகில் வந்தாள் விமலா.

"டிக்கட் இல்லாமல் பிடிபட்டவர்களில் நூற்றில் எழுபத்தைந்து பேர்கள் பெண்களாம்!" என்றான். அவன் பேச்சில் குத்தல் தொனித்தது.

"பெண்களைச் செலவாளிகள், செலவாளிகள் என்று கரித்துக் கொட்டுகிறீர்களே, ஆண்களான நீங்கள்! — ஆண்களைக் காட்டிலும் பெண்கள் எவ்வளவு சிக்கனமானவர்கள் என்று இதிலிருந்து தெரியவில்லையா?" என்று மடக்கினாள் விமலா.




பொக்கைவாய் மொழிகள்

ஊரில் தடி கொண்டு போனால் தடித் தாத்தா போகிறார் என்று சிலர் சொல்லுகிறார்கள் என்பதற்காகவோ ..... தாத்தாவுக்கு வயசாகி விட்டது. கைக்குத் தடி வந்துவிட்டது என்றும் பலர் பரிகசிக்கலாம். இதுக்கெல்லாம் பயந்து தடியை விட்டுக் கிளம்பலாமா? 'டக்கிறதுக, தடிப் பாதுக' என்று தடியுடன் கிளம்ப வேண்டும்.

கையில் ஒரு தடி இருந்தால்..... வெறி நாய்கள் கிட்டே வரா; பாம்பு பல்லிகள் அண்டாது.

ஒரு சமயம் ஒரு நாகரிக அம்மையார் ரோட்டில் இருட்டு வேளையில் செல்லும்போது ஒரு திருட்டுப் பயல் அவர் மேல் பாய்ந்து கையில் உள்ள பையுடன் ஓடிப் போக எத்தனித்தான். அப்போது பின்னால் இந்தச் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து என் கைத்தடியைப் பிடுங்கி அவனைப் பிடித்துச் செம்மையாக அடித்தபடியே ஓடினார். என் கைத்தடி அதற்கு உபயோகமாக இருந்ததை நினைத்து நான் பெருமை கொண்டேன். வயதானவனிடம்தானே கையில் தடி வந்தது... திருடனை அடிக்க எடுத்துப் போகப்பட்ட தடி என்னிடம் திரும்பியே வரவில்லை. திருடன் பயந்து பையைப் போட்டு விட்டுப் போய் விட்டான். ஆனால் தடியைக் கொண்டு போனவன் போனவன்தான்! அம்மையார் பை திரும்பிக் கிடைத்து விட்டதைத் தெரிவிக்கத் துடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் தடி திரும்பி வராததைக் கண்டு தன் பணத்தைக் கொடுத்து வேறு ஒரு வெள்ளிப் பூண் போட்ட தடியை எனக்கு வாங்கிக் கொடுத்தாள். 'இந்தத் தடி என்றும் உங்களுக்கு உபகாரமாக இருக்கும்போதே பிறருக்கும் உபகாரமாக இருக்கட்டும்' என்று சொல்லித் தடியை ஆசீர்வதிக்கும்போதே தடி என் கை நழுவி அவள் காலில் விழுந்தது. 'ஐயோ! கால் போச்சு!' என்று அவள் துடிக்கையில், "பார்த்தீங்களாம்மா, உங்கள் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொண்டு அதுவே உங்களை நமஸ்கரிக்கிறது" என்று ஒரு போடு போட்டேன்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



உங்கள் வதனம் இயற்கைப்பொலிவுடன் எழிலாய் விளங்க
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர்

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் உபயோகித்தால் உங்கள் வதனப்பொலிவு இயற்கை எழிலோடு வசீகரமாய் விளங்கும். இது திட்டுத்திட்டாகத் தெரியாமல் ஒரே சீராகப் படிந்து முகத்திலுள்ள மாசு மறுக்களை மறைத்து விடுகிறது. பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் பல இளம் நிறங்களில் கிடைக்கிறது. இது உங்கள் முக சருமத்தை மினுமினுப்பாக்கி நீடித்த நேரம் கவர்ச்சியுடனிருக்கச் செய்யும்.



பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
ஃபேஸ் பவுடர்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. யில் இணைக்கப்பட்டது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon